# ஜீவநதி

இணையாசிரியர்கள்

சி. விமலன் & க. பரணீதரன்

8



கலை இலக்கிய இருதிங்கள் ஏடு


செப்ரெம்பர் – ஒக்ரோபர் 2008


50/=

# ஸ்ரீ ரஞ்சனி புத்தகசாலை &

# ஸ்ரார் பப்ளிகேஷன்

190 A ஜம்பட்டா வீதி கொழும்பு - 13,
T.P : 0114 947856 - 077 7413990






## தபால் மூலம் தொலைக்கல்வி வசதி

**தரம் 1 முதல் O/L, A/L வரை**

ஏனைய பகுதி மாணவர்களை போன்று யாழ் மாணவர்களுக்கும் கொழும்பில் இருந்து வெளியிடப்படும் பின்வருவனவற்றை கொழும்பில் அதே விலைக்கு தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்ய உத்தேசித்துள்ளோம்.

## எமது வெளியீடுகள்



* அறிவொளி (மாதாந்த வினாத்தாள்கள்)
* பரீட்சை வழிகாட்டி, மாதிரி வினாத்தாள்கள்
* கடந்த கால வினாத்தாள்கள் (கொழும்பு பாடசாலைகள்)
* O/L புதிய மாதிரி வினாத்தாள்கள்
* இ. நிர்மலன் ஆசிரியரின் விஞ்ஞானப் புத்தகங்கள்

வினாத்தாள்களை தபால் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ள (கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏனைய பாடங்கள்) 200/- காசுக்கட்டளையை E.Nirmalan என்ற பெயருக்கு Kotahena தபாற்கந்தோரில் மாற்றத்தக்கதாக

Sri Ranjani Book Shop. 190A Jampettah street. Colombo - 13 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மீதிக் கணக்குகள் அடுத்தவகுப்பில் A/L பதியப்படும்.

# ஜீவநதி

நதி 02 கிளை - 02

**பிரதம ஆசிரியர்கள்**

சின்னராஜா விமலன்

கலாமணி பரணீதரன்

**நிருவாக ஆசிரியர்**

துரைராஜா இராஜவேல்

**ஆலோசகர் குழு:**

திரு.தெணியான்

திரு.குப்பிளான் ஐ.சண்முகலிங்கம்

திரு.கி.நடராஜா



**தொடர்புகளுக்கு :**

கலை அகம்

சாமணந்தறைஆலடிப்பிள்ளையார்வீதி

அல்வாய்.

**தொலைபேசி**

0775991949

0776991015

**Fax**

0212263206

E.mail : jeevanathy @yahoo.com


**பதிப்புரிமை** கலை அகம் வெளியீடு


**வங்கித் தொடர்புகள்**

K.Bharaneetharan & S.Vimalan

HNB - Nelliady Branch

A/CNo.118-00-02-0945701-1


# நதியினுள்ளே...


**கவிதைகள்**

| | |
|---|---|
| இராஜகிருபன் | 07 |
| சிற்பி | 08 |
| புருஷோத்தமஞானி | 15 |
| ரிம்ஸா முஹம்மத் | 21 |
| த.ஜெயசீலன் | 21 |
| ஜின்னாஹ் | 22 |
| ஏ.இக்பால் | 39 |
| விஸ்ணுமைத்திரேயி | 39 |
| எச்.எப்.ரிஸ்னா | 48 |
| ந. உதயலதா | 53 |

**நேர்காணல்**

| | |
|---|---|
| சி. மௌனகுரு | 29 |

| | |
|---|---|
| கலை இலக்கிய நிகழ்வுகள் | 56 |

**கட்டுரைகள்**

| | |
|---|---|
| விக்னேஸ்வரி பவநேசன் | 03 |
| செங்கோடன் | 16 |
| அம்மன்கிளி முருகதாஸ் | 34 |
| ஆசி. கந்தராஜா | 40 |
| செ.கிருஷ்ணராஜா | 52 |

**சிறுகதைகள்**

| | |
|---|---|
| சந்திரகாந்தா முருகானந்தன் | 09 |
| த.கலாமணி | 23 |
| சி.சிவாகர் | 37 |
| கயிலை | 49 |

**பத்தி**

| | |
|---|---|
| பா.இரகுவரன் | 54 |

# ஜீவநதி

(கலை இலக்கிய இருதிங்கள் ஏடு)


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!

-பாரதிதாசன்-

# புதுமை படைத்த பாரதி

"எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியம் ஒன்று செய்து தருவோன் நமது தமிழ் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்."

இவை 'பாஞ்சாலி சபதத்'தின் முன்னுரைக்கென பாரதி அன்று எழுதியவை. வியாச பாரதத்தைத் தழுவி எழுதப்பட்ட 'பாஞ்சாலி சபதம்' மூலம் அதனைப் படிப்போருக்குப் பாரதி சொல்லும் செய்திகள் பல. முன்னுரையில் குறிப்பிட்டவாறே பாஞ்சாலி சபதத்தில் எளிய பதங்களையும் எளிய நடையையும் பாரதி பயன்படுத்தினான். 'ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ளவர்களுக்கு' விளங்கக்கூடிய முறையில் பாஞ்சாலி சபதம் அமைந்தது. ஆனாலும் 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாதநெறி, திமிர்ந்த ஞானச்செருக்கு, ஞான நல்லறம், வீரசுதந்திரம்' ஆகிய நலன்களோடு தான் காணவிரும்பிய புதுமைப்பெண்ணை பாஞ்சாலி சபதத்தினூடாக பாரதி நமக்குக் காட்டுகிறான் என்பது அதனை ஆழ்ந்துபடிப்போர்க்குத் தெற்றெனப் புலப்படும்.

பாரதியின் புதுமை இன்றைய புதுமுயற்சியாளர்களுக்கும் பொருந்தும். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் போன்ற கலை, இலக்கியத் துறைகளில் 'பரீட்சார்த்த முயற்சிகளாக' எழுதுவோர் பாரதி சொன்னவற்றைச் சிரமேற் கொள்ளல் அவசியம். பாரதியை இன்றும் போற்றும் எமக்கு பாரதியே சிறந்த முன்னோடி.

- ஆசிரியர்கள்.

**இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக் களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு. - ஆசிரியர்கள்.**

# சோழர்கால அம்மன் விக்கிரகங்கள் சுட்டும் கலை மரபுகள்

விக்னேஸ்வரி பவநேசன்

இறைவனைக் கலை வடிவாகக் காண்பது இந்து சமயப் பண்பாடாகும். கலைகளைத் தெய்வீகமாகப் போற்றுவது அச்சமயத்தின் மரபு. கலையும் சமயமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தே வளர்ச்சி பெற்று வந்துள்ளன.

தமிழக வரலாற்றில் கி.பி 9ம் நூற்றாண்டு முதல் கி.பி 12ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் தமிழ் நாடு முன் பின் என்றும் கண்டிராத ஒரு பெருமை மிக்க ஒரு பொற்காலமாக விளங்கியது. ஆட்சிமுறை,கலை , கலாச்சாரம்,சமயம்,மொழி ஆகிய பல்வேறு துறைகளிலும் உச்சநிலையை அடைந்த ஒரு காலமாக இக்காலப்பகுதியை விளங்க வைத்தவர்கள் விஜயாலய சோழன் (கி.பி 850 - கி.பி 890) பரம்பரையில் வந்த சோழப் பெருமன்னர்களே ஆவர். வழிவழிச் சைவர்களாகிய இவர்கள் மக்களது ஆத்ம ஊதியத்திற்கு அமைவாக ஆற்றிய அரும்பணிகள் பலவற்றில் சிவாலயத்திருப்பணிகள் சிறப்பானவை. தெய்வீக பொலிவுள்ள சிவனுக்கான கற்றளிகள் பலவற்றை தமிழ் நாடெங்கும் எழுப்பி மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவையாக விளங்கிய இறையுணர்விற்கு உறுதுணையாய் விளங்கும் அழகுக்கலை வடிவங்கள் பலவற்றை அங்கு நிறைவாக இடம் பெறச்செய்தனர்.

இக்காலப்பகுதியில் சோழப் பேரரசர்கள் தென்னகத்தை ஒரு குடையின் கீழ் கொணர்ந்து சிறப்பாக ஆட்சி செய்யக்கூடிய சூழ்நிலை காணப்பட்டது. சோழப் பேரரசை உருவாக்கிய மன்னர்கள் வரிசையில் முதலாம் ராஜராஜன் (கி.பி985-1015) முதலாம் ராஜேந்திரன் (கி.பி 1012 - 1044) ஆகியோருடைய காலம் குறிப்பிடத் தக்கது. சோழமன்னர்கள் பேரரசை நிறுவியதுடன் மட்டுமன்றி சமயப்பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பு நல்கியுமுள்ளனர். இக்காரணத்தினால் சோழர் காலம் "பொற்காலம்" என்று வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுவது மரபாகும். கோயில்களை உருவாக்குகின்ற பணிக்கு அடுத்த பணியாக அங்கு பக்தி பூர்வமாக வழிபாடு இயற்றுவதற்காக மிகச் சிறந்த வார்ப்பு விக்கிரகங்களை உருவாக்கிய காலம் சோழர் காலமாகும்.

விக்கிரகக்கலை மரபின் படி விக்கிரகங்களை கல்,மண்,மரம், உலோகம் ஆகிய பொருட்களினால் உருவாக்கும் மரபு உள்ளது. சோழர் காலத்தில் கல்லினாலும் உலோகத்தினாலும் சிறந்த கலைப்படைப்புக்கள் உருவாக்கப்பட்டன. சோழர்காலத்து மன்னர்கள் சிறப்பாகச் சைவசமய சார்பானவர்களாக விளங்கியமையால் சிவனுடைய விக்கிரகங்கள் சிறப்பாக உருவாக்கப்பட்ட நிலையில் அம்மனுடைய விக்கிரகங்களும் இக்காலப் பகுதியில் நேர்த்தியாகப் படைக்கப்பட்டன. இவ்வாய்வில் சோழர் காலத்தில் அம்மன் விக்கிரகங்கள் இடம் பெறும் ஆலயங்கள் பற்றிப் பொதுவாக ஆராயப்படும். அடுத்து

அம்மன் விக்கிரகங்களுடைய பல்வேறு சிறப்பம்சங்கள் எடுத்துக் கூறப்படும். உதாரணமாக தஞ்சைப் பெரிய கோவில் "பிருகதீஸ்வரன்" கோவில் என்று அழைக்கப்படுகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள அம்பிகை " பிருகதீஸ்வரி" என்று குறிப்பிடப்படுகின்றார். " பிருகதீஸ்வரி" என்பது "பெரியநாயகி" என்று பொருள் வழங்கப்படுகின்றது. எனவே கோயிலின் அமைப்பிற்கேற்ப அம்மனது விக்கிரகங்கள் சோழ மன்னர்களால் உருவாக்கப்பட்ட ஒரு மரபினைக் காணமுடிகின்றது.

விக்கிரகவியலின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் சிவாகமங்களே அடிப்படையானவை எனும் கருத்தை நிறுவுவதற்கு இந்தியாவிலும் ஈழத்திலும் காணப்படும் விக்கிரகங்களே அக்கருத்தை வலியுறுத்துகின்றன. சோழர்காலத்தில் அம்மன் விக்கிரகங்களுடைய தொன்மையை அறிவதற்கும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் இற்றைவரையும் நிகழ்த்தப்பட்டுள்ள அகழ்வாராட்சியும் மானிடவியல் ஆராட்சியும் நன்கு உதவியுள்ளன. இவை தவிர இலக்கியங்கள்,கல்வெட்டுக்கள், நாணயங்கள்,சின்னங்கள்,முத்திரைகள் ஆகியனவும் தகுந்த ஆதாரங்களாக அமைவன.

இறைவனைக்கலை வடிவாகக் காண்பது இந்து சமயப்பண்பாடாகும். கலைகளைத தெய்வீகமாகப் போற்றுவது அச்சமயத்தின் மரபு. கலையும் சமயமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தே வளர்ச்சி பெற்றுவந்துள்ளன. எல்லாக்கலைகளுக்கும் ஆத்மாவாகவும் உடலாகவும் இருப்பவன் இறைவனே என்ற அடிப்படை நம்பிக்கை இந்து சமயத்தவர்களிடையே பண்டு தொட்டு இருந்து வந்துள்ளது. இறைவன் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாகவே மக்கள் அவனைப் பல்வேறு வடிவங்களில் வழிபட்டனர். இந்நம்பிக்கையே இந்து விக்கிரக வழிபாட்டின் அடித்தளமாகும். அழியாத நம்பிக்கை தான் ஆத்மீக வாழ்க்கைக்கு அடிப்படையானது என்ற கருத்தை டாக்டர் இராதா கிருஷ்ணன் ஏனைய சமயங்களுடன் தொடர்பு படுத்திக் கூறுவார். அத்தகைய ஆத்மீக நம்பிக்கையின் சின்னமாகவே விக்கிரகங்கள் கோயில்களில் பிரதிஸ்டை செய்யப்பட்டு வழிபடப்படுகின்றன.

விக்கிரகவியல் வரலாற்றைத் தெளிவாக விளக்கிக் கொள்வதற்கு 'விக்கிரகம்' என்ற சொல்லின் உட்பொருள் அதனுடன் தொடர்புடைய வழிபாடு பற்றிய நுட்பமும் ஆராயப்பட வேண்டியது அவசியமானதாகும். 'விக்கிரம்' என்ற சொல்லுக்குரிய ஏனைய பதங்கள் 'அர்ச்சர்' 'பேர' என்பவையாகும். இவற்றுடன் பிரமம்,மூர்த்தி,பிரதிமை போன்ற சொற்களும் உருவத்தைக் குறிப்பிடுவனவாகும் பக்தர்களின் வழிபாட்டிற்குரிய தெய்வச்சின்னங்களையே இப்பதங்கள் சுட்டி நிற்பன. விக்கிரகங்கள் தெய்வத்தின் தோற்றப் பொலிவினை மனித உருவேற்றிய பண்பின் அடிப்படையில் சித்திரிப்பன. ஒரு குறிப்பிட்ட சமய நெறியின் முழுமுதல் தெய்வம் பற்றிய தெய்வீக வரலாற்றியல் கருத்துக்களுக்கு விளக்கம் தரும் நிலையிலேயே விக்கிரகங்கள் விளங்குவன. பரம்பொருளாகிய இறைவன் நிகழ்த்தும் ஐந்தொழில்களைப் புராணங்கள் விளக்கிக் கூறுவன. செவிப்புலனாகும். இப்புராண வரலாற்றுக் கருத்துக்களை கட்புலனாகும் வெற்றி வாய்ந்தவை சிற்பங்கள். சிற்பங்கள் நிறைந்த இடம் கோயிலாகும். கோயில்களில் மேற்கொள்ளப்படும் உருவ வழிபாடு இந்து சமய மரபில் உயர் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது.

சிற்ப நூல்களில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது மானசாரமாகும். இதில் சரஸ்வதி, சாவித்திரி, இலக்குமி, பூமிதேவி, மனோன்மணி, துர்க்கை ஆகிய

ஆறுவடிவங்களும் சப்த மாதர்களாகிய வராகி, கௌரி, பைரவி, மகேந்திரி, வைஷ்ணவி, பிரம்ஹணி ஆகிய எழுவருமாக பதின்மூன்று வடிவங்கள் விபரிக்கப்படுகின்றன. இத்தகைய வடிவங்கள் துர்க்கை, கொற்றவை, கௌரி, சப்தமாதர், பிடாரி, உமாதேவியார், போன்ற வடிவங்களே சோழர்களது வடிவங்களே சோழர்களது கலைப்படைப்பில் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சோழமன்னர்களது ஆதிக்கம் இடம் பெற்ற தென்னிந்தியா, இலங்கை ஆகிய இடங்களில் காணப்படும் விக்கிரகங்களில் இத்தகைய அம்மன் விக்கிரகங்களை நாம் கண்டுகொள்ள முடிகின்றது.

சோழர்கட்டிய கோயில்களில் உயிரோட்டமாகக் காணப்படுவன சிற்பங்களே ஆகும். கட்டடம் முண்டம் என்றால் சிற்பங்கள் தலைகளாகும். இக்கோயில்களின் நடுவிலும் மூலைகளிலும் தளங்களிலும் திசைக்கும் மரபுக்கும் ஏற்றவாறு தெய்வத் திருவுருவங்களையும் பூதகணங்களையும் அமைத்த பெருமை சோழச்சிற்பிகளையே சாரும். சோழர் கோயில்களில் சிற்பங்களேயன்றிச் சிறந்த செப்புத் திருமேனிகளும் உள்ளன. இவ்வகையிலே செம்பால் செய்யப்படும் தெய்வப்படிமைகளும் மேனிகளும் சிறப்பாகத் தொடங்கப் பெற்றுப் புகழடைந்த காலமும் சோழர் காலமே ஆகும்.

செப்புப் படிமங்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது நடராஜரின் திருமேனியாகும். அடுத்து அன்னையர் எழுவர் (சப்தமாதர்) திருமால் நான்முகன் நிலமகள், திருமகள், சைவநாயன்மார்கள், இராமன், சீதை முதலியோரின் திருமேனிகளும் சோழர்காலத்துக் கோயில்களில் காணப்படுகின்றன. இக்காலச் சிற்பிகள் உருவங்களைச் செதுக்குவதாயினும் செய்வதாயினும் அக்காலச் சமுதாயப்பண்புகளையும், பழக்கவழக்கங்களையும் நடையுடை அணிகலன்களையும் மனத்திற்கொண்டு ஆக்கியுள்ளனர். இவர்கள் எல்லாக் கலைகளிலும் வல்லவர்கள்.

மாடக்குழிகளிலுள்ள தெய்வத் திருமேனிகளுக்கும் வாயிற் காப்போருக்கும் வேறுபாடுகள் உண்டு. இதைப்போலவே பெண்ணின் உருவத்திலும் சப்த மாதர்களையும் திருமகள் சீதை முதலியோரையும் சாதாரண பெண்மணிகளையும் பிரித்தறியும்படி இவர்கள் சமைத்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவற்றில் இவர்கள் கையாண்டுள்ள கலைநுணுக்கங்கள் மிகஎளியது. ஆனால் தனித்தன்மை வாய்ந்தது. உடலமைப்பில் வேறுபாட்டைப் படைப்பது. உடை அணிகலன்கள் படை (ஆயுதம்) ஆகியவற்றில் வேறுபாட்டைப் படைப்பது, சினம் அமைதி (சாந்தம்) அச்சம் முதலிய உணர்ச்சிகளைக் காட்டும் உறுப்புக்களை மட்டும் திடமாகவும் தெளிவாகவும் படைத்தல், நளினங்களைக் காட்டும் கோடுகளையும் வரிகளையும் தக்க இடங்களில் வரைதல் முதலியவற்றால் உருவத்திற்கு உருவம் வேறுபடுத்தி இந்த உருவம் இந்த ஆளைக் குறிக்கின்றது என்று அறியும்படி செய்துள்ளனர்.

முதலாம் ஆதித்தன் (871-907) காலத்துச் சிற்பமான திருக்கட்டளை யிலுள்ள சேட்டா தேவியின் சிற்பம் குறிப்பிடத்தக்கது. அடுத்து மாதொரு பாகன் சிற்பமும் (அர்த்தநாரி) கொற்றவையின் சிற்பமும் பெரும்பாலான சோழர்காலக் கோயில்களில் காணப்படுகின்றன. ஆணும் பெண்ணும் சரிநிகரானவர் என்பதனையும் வீரமே தமிழரின் மூச்சு என்பதையும் இச்சிற்பவடிவங்கள் முறையே குறிப்பிட்டு நிற்கின்றன. மாதொருபாகன் பெரும்பாலும் நின்றவண்ணத்திலும் கொற்றவை பல கைகளுடனும் காட்சியளிக்கின்றனர்.

உமையொருபாகனாயமர்ந்த சிவன் சண்டேசனை ஆட்கொள்ளும் கங்கை கொண்ட சோழபுரத்துச் சிற்பம் மிகப்பிரசித்தி வாய்ந்தது. விஜயாலயன் (கி.பி.850 -

871) தஞ்சையையும் வல்லத்தையும் வென்ற பின்னர் தஞ்சையைத் தலைநகராக நிறுவினான். தன் புதியதலைநகரில் நிசும்பசூதனி, என்ற துர்க்கைக்குரிய கோயிலைக் கட்டிய செய்தி திருவாலங்காட்டுச் செப்பேடுகளால் அறியமுடிகின்றது.

பராந்தகன் காலத்து புள்ளமங்கை பிரமபுரீசுரர் கோயிலின் வெளிச்சுவரில் ஐந்துதேவ கோஷ்டங்கள் உள்ளன. இங்கு அர்த்தமண்டபத்தின் தென்பாகத்தில் கணபதியும் துர்க்கையும் வீற்றிருக்கின்றனர். துர்க்கை மகிடாசுரன் மீது நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றாள். அவளுடைய இருபக்கமும் வாகனங்களான சிங்கமும் கலைமானும் காட்சியளிக்கின்றன. துர்க்கைக்கு தலைப்பலி வழங்கும் வீரர் சிலைகள் விம்மிதத்துடன் காட்சியளிக்கின்றன. 8 கைகளுடன் காட்சியளிக்கும் துர்க்கையின் முன்வலக்கை அபயஹஸ்தமாக உள்ளது. ஏனைய கைகளில் தேவி சக்கரம், வாள் அம்பு, சங்கு கேடயம், வில் இவற்றை ஏந்தியவளாய் காட்சியளிக்கின்றாள். நல்ல உயரத்துடனும் மென்மையுடனும் நல்லுடையும் சிவந்த ஆபரணங்களும் கொண்டு மிளிரும் இத்துர்க்கையின் சிலை பிரமனின் சிலையைப் போல நுட்பமான சிற்பத்திறமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

தஞ்சை மாவட்டத்து திருவாவடுதுறை கோமுகீசுவரர் கோயிலில் உள்ள தேவ கோஷ்டங்களில் துர்க்கையின் சிலை காணப்படுகின்றது. ஆதித்தன் காலத்தில் தேவகோஷ்டத்தில் துர்க்கைசிலை அமைக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் தனியே அம்மன் கோயில்கள் ஏற்படவில்லை. அம்மனுடைய செப்புத்திருமேனிகளை வார்த்துப் பிரதிஷ்டை செய்து வந்தனர். அக்காலத்தில் உமாபட்டாரியார். என்றும் போகேசுவரி என்றும் இச்சிலைகள் வழங்கப்பட்டன. கருவறையிலோ அர்த்த மண்டபத்திலோ இச்சிலைகள் அமைக்கப்பட்டு வந்தன.

தேவியின் தனிக்கோயில் கங்கை கொண்ட சோழபுரத்தில் முதல் ராஜேந்திரன் காலத்தில் தோன்றிவிட்டது. எனினும் பெரிய அளவில் திருக்காம கோட்டமாக அம்மன் கோயிலை அமைக்கும் மரபு முதல் குலோத்துங்கன் காலத்தில் தொடங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது. நார்த்தாமலை விஜயாலயசோழீசுவரம் கோயிலில் சப்தமாதரில் ஒருவராக வைஷ்ணவி குறிப்பிடப்பட்டுள்ளார்.

அடுத்து இலங்கையில் சோழர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட அம்மன் விக்கிரகங்கள் பற்றி நோக்கினால் இங்கு அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டெடுக்கப்பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தொல்பொருட் சின்னங்களில் வெண்கலப் படிமங்கள் மிகுந்த முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன. இலங்கையிலே அநுராதபுரம் இராசதானியாக இருந்தகாலம் முதலாகப் படிமங்களை வார்க்குங்கலை வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இங்கு கிடைத்துள்ள வெண்கலப் படிமங்களில் பெரும்பாலானவை பொலநறுவைக் காலத்திற்கு (கி.பி.1000 - 1250) உரியனவாகும். பொலநறுவைக் காலத்து வெண்கலப்படிமங்கள் சோழர் கலைப்பாணியின் அம்சங்களைப் பெரும்பாலும் கொண்டுள்ளன. இலங்கையிலே இந்துப்பண்பாட்டு மரபில் வெண்கலப் படிமங்கள் சிறப்பிடம் பெறுவதற்கு இங்கு அமைந்த சோழரின் ஆட்சியே ஏதுவாக இருந்தது.

பொலநறுவையிற் கிடைத்த கடவுள் படிமங்களில் உமாதேவியாரின் படிமங்களே மிகவும் கூடுதலானவை. அவற்றின் பிரதிமாலக்ஷணங்கள் சிற்பசாஸ்திரம் பிரகாரமானவை. தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் காணப்படும் பார்வதியின் படிமங்கள் யாவும் அத்தகையவை. அதனால் அவற்றிடையே ஒற்றுமைகள் அதிகமாக உள்ளன. வேற்றுமைகள் கலைஞரின் வேலைப்பாடுகளின் காரணமாக உண்டானவை.

இலங்கையில் காணப்படும் அம்மன் வடிவங்கள் பற்றி சுருக்கமாக நோக்கினால்.

1. சிவன் பார்வதி பொலநறுவை வெண்கலப் படிமங்கள்.
2. இருசக்திகளுடன் விஷ்ணு பொலநறுவை வெண்கலப் படிமங்கள்.
3. பார்வதி பொலநறுவை வெண்கலப்படிமங்கள்.
4. காரைக் காலம்மையார் பொலநறுவை வெண்கலப்படிமம்
5. கி.பி. 12ம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்ளப்படும் உமாதேவியரின் படிமங்கள் என்பன குறிப்பிடத்தக்கன.

நிறைவாக சோழப் பேரரசு அனைத்து நிலைகளிலும் நிறைவு பெற்ற ஒரு பேரரசாக விளங்கிய காரணத்தினால் அப்பேரரசு நிலவிய காலம் பெற்காலம் என்று கூறப்படுவதற்கேற்ப வார்ப்புவிக்கிரகக்கலை மரபைப் பொறுத்தமட்டில் இக்காலம் பொற்காலமாக விளங்கியதை சோழர் கால அம்மன் விக்கிரகங்கள் பற்றிய ஆய்வின் மூலமும் விக்கிரகங்கள் ஏனைய விக்கிரகங்களுடன் தொடர்புபட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டாய்வு அடிப்படையிலும் அக்காலத்தினுடைய விக்கிரகக் கலை மரபின் சிறப்பை அறிந்து கொள்ள முடிகின்றது. பல்லவர்காலத்தில் தோற்றம் பெற்ற இக்கலைமரபு சோழர்காலத்தில் பெருவளர்ச்சி கண்டதோடு மாத்திரமன்றி அடுத்துவருகின்ற காலப்பகுதியிலும் தொடர்ந்தும் வளர்ச்சி பெறுவதற்கான ஒரு சிறந்த அடித்தளம் இக்காலப்பகுதியில் இடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்து விக்கிரகக் கலையினுடைய மகோன்னத வளர்ச்சியை மட்டிடுவதில் சோழப்பேரரசு மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுவது குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதியில் ஏற்பட்ட கலைச் சாதனை வரலாற்றுப் புகழ் பெற்றது மட்டுமன்றி இந்துப் பண்பாட்டின் மேன்மையை உலகறியச் செய்தமையும் தெளிவாகின்றது. □□□

## அகாலப் பிணங்கள்

நாய்கள்
செத்துக் கிடக்கும்
நடுவீதியில்
வேகமாய்ச் செல்லும்
வெண்ணிற வாகனங்கள்
மோதியடித்திருக்கலாம்
தன்னினத் தனியன்களின்
கோரப்பற்கள்
குத்திக் குதறியிருக்கலாம்
நாற்றம் எடுக்குமுன்
தூக்கித் தூரப்புதைக்க
யாரும் மனிதர்கள் வருவார்கள்
வீதியோரச் சிறுவீரர்களின்
கவணிலிருந்த கல்லடிபட்டு
காற்றிற் பறந்த காக்கையொன்று
சேற்றில் வீழ்ந்து செத்துக்கிடக்கும்
காக்கையினம் கூடி கத்திக் கதறும்
தூக்கித் தூரவீச
யாரும் மனிதர்கள் வருவார்கள்
தினந்தோறும் என் தூரவழிப் பயணத்தில்
தேகத்துக் களைதீர்க்கும்
தேனீர்க்கடைத் தொழிலாளி,
ஊரடங்குச்சட்ட நேரத்திலும்
ஓடிவந்தெனக்கு உதவிசெய்யும்
உள்ளூர் வாகனச்சாரதி,
என்னிடம் பயின்ற மாணவன்,
திருமணம் செய்துவைத்த அந்தணன்,
இன்னும் யார் யாரோ...
வீதியோரம் வீழ்ந்துகிடப்பர்:
உதிரமோடி உறைந்திருக்கும்
உடல் நாற்றம் எடுக்கும்
நாய்கள் வரும்
காக்கைகள் வரும்
நானோ:
வேறெந்த மனிதரோ
அருகிற் செல்லவும்
முடியவில்லை
ஏனெனில்
அவை மனிதப்பிணங்கள்
அகாலப்பிணங்கள்.

-இராஜகிருபன்

# ஏக்கம்

மங்கல இசையாய் மக்கள்
மனதிலே மகிழ்ச்சி வெள்ளம்
தங்கிடச் செய்யும் நாத
ஸ்வரம் தவில் இணைந்த ஓசை
மங்கையர் தாலாட்டுப்பா
வயல்நிறை உழவர் பாட்டு
எங்குமே இனிய நாதம்
என்றுமே இதய கீதம்.

ஆலயக் குருக்கள் சொல்லும்
அர்ச்சனை மந்திரங்கள்
பாலர்கள் சேர்ந்து பாடும்
பண்ணமை பஜனைப் பாடல்
சோலைக ளுக்குள் ஏதோ
சொல்லிடும் குயிலின் கானம்
பாலமாய் இருக்க அன்று
பரவசம் புகுந்த துள்ளே

சிந்தையைத் தூண்டி மேலும்
சிறப்புற எம்மை ஆக்கும்
சந்தமார் கவிதை மற்றும்
சால்புடைக் கதைகள் நாவல்
சுந்தர வாழ்வைக் காட்டிச்
சுவர்க்கமென் பதையுணர்த்தி
எந்தனை ஆண்டு கொண்ட
இலக்கியப் படையல் கோடி.

உலகியற் போக்கை மாற்றி
உயர்த்திடும் நாடகங்கள்
கலைத்தரம் நளினம் மிக்க
கன்னியர் நாட்டியங்கள்
புலவர்கள் சான்றோர் சொல்லும்
புதுமைசேர் கருத்துக் கோவை
இலக்கியம், கலைவிழாக்கள்
எனக்கொரு பெருவிருந்தே.

அன்றுநான் அநுப வித்த
அமைதி ஆனந்த மெல்லாம்
இன்றெனை விட்டு எங்கே
எப்படி மறைந்து போய்ச்சு?
நன்றென நிலைத்து நின்று
நவையறு காட்சி நல்கி
குன்றென நின்றதெல்லாம்
குறுகிப்போய் விட்ட தேனோ?

நிலையெனத் தோன்றும் காட்சி
நிரந்தர மற்ற தென்று
புலவர்கள் சொல்லு முண்மை
புரிந்திட மறுக்கின் றேனோ?
உலகமே மாறிப் போய்ச்சோ?
உள்ளந்தான் பழைசாய்ப் போய்ச்சோ?
கலக்கத்தை விரட்டி விட்டுக்
கடவுளே! களிப்பைத் தாராய்!

**- சிற்பி**

# குடை

- சந்திரகாந்தா முருகானந்தன்.

பங்குனி மாத உச்சி வெயில் தகித்துக் கொண்டிருந்தது. பாடசாலை விட்டு வீதியால் மெதுவே நடந்து வந்து கொண்டிருந்தேன். உடலெங்கும் வியர்வை கசிந்து கொண்டிருந்து.

எனது கையிலே குடை. விரித்த குடை மங்கிப் போயிருந்தது. என் இளமையைப் போலவே! இந்தக் குடைக்கு எத்தனை வயது என்று யோசித்துப் பார்க்கிறேன். பன்னிரண்டு வருடங்களுக்கு முன் நான் பல்கலைக் கழக மாணவியாக இருந்த காலம் தொட்டு இன்று வரை இந்தக் குடையைப் பாவித்து வருகிறேன். துணி ஒளியிழந்து மங்கிப்போய்விட்டாலும் அதைக் கைவிட மனமில்லை. வலுபக்குவமாக பாவித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு பட்டதாரி ஆசிரியையான எனது சம்பளத்தில் எத்தனையோ குடைகள் வாங்கலாம். நாள் ஒரு சாறியும், வாரம் ஒரு செருப்பும், மாதம் ஒரு கைப்பையும் என்று பாவிக்கும் எனக்கு சாதாரண விலையுள்ள குடையொன்றை வாங்குவது அப்படி யொன்றும் கஷ்டமில்லை. குடையை இன்னமும் கைவிட மனமில்லை என்பது தான் உண்மை.

கர்ணனுக்கு கவச குண்டலம் போல் என்னோடு இப்போது இந்தக் குடை ஒட்டிப் போய்விட்டதோ என்னவோ! இதைப் பிடித்துக் கொள்ள பலத்த வெயிலோ மழையோ கூட தேவையில்லை. தெருவில் இறங்கினால் கையில் இந்தக்குடை! தயாழினி ரீச்சர் வருவார் பின்னே, குடைவரும் முன்னே என்று சக ஆசிரியைகள் கூட கிண்டல் அடிப்பார்கள். எனக்கும் இந்தக் குடைக்கும் உள்ள உறவு பற்றி பிறருக்குத் தெரிந்திருக்க நியாய மில்லை. என் மனதுடன் முடங்கிப் போய்விட்ட அந்தக் குடை தொடர்பான விடயங்களை நான் யாரோடும் பகிர்ந்து கொள்வதில்லை.

ஏன், இந்தக் குடையை அன்பளித்த செல்வகுமாரைக்கூட நீண்ட பத்து வருடங்களுக்கு மேலாகக் காணவில்லை. ஒரு மலையடிவார கிராமத்திற்கு ஆசிரிய நியமனம் பெற்றுச் சென்றதாக ஞாபகம்.

யோசனையுடன் நடந்து கொண்டிருந்த போது ஒரு அழகான கார் என்னருகே வந்து பிரேக் அடித்து நின்றது. நிமிர்ந்து பார்த்தேன். ஆள் மாறியிருந்தாலும் அந்தக் கண்கள் அவனைச் சட்டென்று அடையாளப் படுத்தியது. செல்வகுமார். "ஏறுங்க" என்றான் உரிமையோடு "இவ என்னுடைய பெச்மெட்" மனைவிக்கு என்னை அறிமுகப்படுத்தினான். புன்னகை களைப் பரிமாறினோம். அதே குடையை விரித்தபடி ஏறியதை அவன் அவதானித்தான். என் மனதிலே பழைய நினைவுகள்.....

பல்கலைக்கழக வளாகத்தில் காலடி எடுத்து வைத்த முதல் நாளில் எதிர்பார்த்தது போல பகிடி வதை அட்டகாசமாகவே இருந்தது. ஆண்கள் தான் அப்படி இப்படி என்றிருந்தால் இந்தப் பெண்களும் இப்படியா?

புதிய பெண்கள் நான்கைந்து பேரை மேடையில் ஏற விட்டு, குடைகளை விரித்து சுழற்றியபடி நடக்க விட்டு அழகு ராணிப் போட்டி வைத்து சிரேஷ்ட மாணவ மாணவியர் ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போது எனது முறை குடையை விரிக்கும் போதே மனது திக்கென்றது எட்டுக்கம்பிகளில் ஒரு

கம்பி ஏற்கனவே உடைந்திருந்ததால் எனக்குக் கூச்சமாக இருந்தது. குடையைச்சுழற்றிச் சுழற்றி நடந்த போது கம்பி உடைந்த பக்கம் மடிந்து அசிங்கமாக இருந்தது "முதல்ல புதுக் குடை ஒன்று வாங்கி பல்கலைக் கழக மாணவிபோல் இருக்கப் பழகு! பிறகு தான் படிப்பு" என யாரோ ஒரு மாணவி கிண்டலடிக்க, ஏனைய மாணவர்கள் எல்லோருமாகச் சிரித்தார்கள். எனக்கு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருந்தது.

எங்கள் வீடுகளில் வேலை வெட்டி செய்து சீவித்த செல்லத்தின் மகன் செல்வகுமார் கூட பார்த்துக் கொண்டிருக்கிறானே. என்ன வெட்கக் கேடு, அப்பாவிடமும் அம்மாமீதும் கோபம் வந்தது. குடையொன்று வாங்க வேண்டும் என்று நான் கேட்டபோது அவர்கள் அதைப் பெரிதுபடுத்த வில்லை.

"கம்பி முறிஞ்சு போச்சம்மா...."

அப்பா குடையை வாங்கிப் பார்த்தார். "அதொண்டும் பெரிய பழுதில்லை. இரவைக்கு நான் கம்பியை மாத்தித்தாறன்" சொன்னபடியே சீர் செய்து தந்தார் அப்பா. விரித்துப் பார்த்த போது மனதுக்கு ஆறுதலாக இருந்தது. பாவம் அப்பா, ஒரு ஏழைக் கமக்காரர். அந்தச் சிறிய தோட்டத்தில் இரத்தத்தை வியர்வையாக்கி அயராது உழைத்தாலும் வரும்படி போதாது. மூன்று பிள்ளைகள், ஆச்சி என சுமை அதிகமானதால் அம்மாவும் வீட்டில் கோழி, ஆடு, மாடு வளர்த்துத் தான் செலவை ஈடு செய்வாள். வீட்டில் அன்றாடச் சாப்பாட்டிற்கே சில நாட்களில் திண்டாட்டம். பேசாமல் படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு, ஏதாவது ஒரு தொழில் செய்யலாம் என்று சில வேளைகளில் எண்ணுவேன். அம்மாவிடம் என் கருத்தை ஒரு நாள் சொன்னபோது அம்மா பதறிப்போய் விட்டார். "நீ படிக்கக் கூடியனி... படிச்சு ஒரு தொழில் பார்க்கவேணும். எங்களைப் போல எங்கட பிள்ளைகளும் கஷ்ரப்படக்கூடாது. உன்னைப் பட்டதாரியாக்கிப்பார்க்க வேண்டு மென்பது அப்பாவின்ர ஆசை. தயா நீ படிக்கணும்..."

அவர்கள் விருப்பப்படி படித்தேன். பல்கலைக்கழகக் கதவு எனக்காகத் திறந்தபோது உள்ள மெல்லாம் துள்ளியது. ஆனாலும் படிப்புச் செலவை எப்படி சமாளிப்பது என்ற எண்ணம் மனதை நெருடியது. இலவசக் கல்வி என்று பெயர்தான். பதிவுக் கட்டணம், படிப்புக் கட்டணம், விடுதிக் கட்டணம் என்று ஆரம்பச் செலவுகளே அச்சுறுத்தின. நல்ல உடுப்புக்கள், அத்தியாவசியப் பொருட்கள் வாங்கக் கூட கடன்பட வேண்டியிருந்தது.அப்பா பகலெல்லாம் தோட்டத்திலும், சந்தையிலும் என ஓடிஓடி உழைப்பார். எனினும் மிச்சப்பாடு இன்றி நாளாந்தச் செலவுகளில் பணம் கரைந்துவிடும்.

"காசு கிடைச்சால் புதுக்குடை வாங்கலாம். அதுவரை சமாளி பிள்ளை..." அம்மா ஆறுதல் கூறினாள். பழைய குடையுடன் வந்தாகிவிட்டது. பலன் இன்று இந்த அவமானம். அப்பா மாற்றித் தந்த கம்பி, காலையில் பஸ்ஸிலிருந்து குடையை விரித்தபடி இறங்கும் போதே "டக்" என்று மறுபடி முறிந்து விட்டது.

வெயில் சுட்டாலும் பரவாயில்லை, நாளைக்கு இந்தக்குடையைக் கொண்டு வரக்கூடாது என எண்ணினேன். மேடையிலிருந்து இறங்கிய என் முகம் இருண்டு போயிருந்தது. மனதெல்லாம் படபட என்று அடித்துக் கொண்டது. உடலில் வியர்வைக் கசிவு கைக் குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டிருந்தபோது,

தயாழினி என்ற அழைப்புக் கேட்டுத் திரும்பினேன். செல்வகுமார் தான் நின்றிருந்தான். இரண்டு வருடங்களுக்கு முன்னர் பல்கலைக்கழகம் வந்து விட்ட சிரேஷ்ட மாணவனான அவன் என்னைக் கனிவோடு நோக்கினான்.

முன்னர் பார்த்ததைவிட நாகரிகமாக இருந்தான். அவனது அண்ணா அகதியாகப் புலம்பெயர்ந்து சென்று இப்போது அவனது குடும்ப நிலை உயர்ந்துவிட்டதாக அறிந்திருந்தேன். இப்போதெல்லாம் அவனது அம்மா செல்லம் எமது வீடுகளுக்கு முன்னரைப் போல் வேலைகளுக்கு வருவதில்லை.

"தயாழினி கவலைப்படாதீங்க.. இவங்கள் இப்படித்தான் மனிதர்களுடைய கஷ்டத்தைப் பற்றித் தெரியாதவங்கள்.. இன்னும் இரண்டு கிழமையில் பகிடி வதை முடிஞ்சிடும். ஒண்டுக்கும் யோசிக்காதையுங்க..."

இரவு உறக்கம் கெட்டது. இருபக்கமும் கேலி மீண்டும் மீண்டும் காதோடு ஒலித்தது.

செல்வகுமாரின் நினைவு வந்து மனதில் என்னவோ செய்தது. அவனுக்கு முன்னே மானபங்கப்பட்டது போலிருந்தது. புரண்டு புரண்டு படுத்தேன். குடைவாங்கத் தான் வேண்டும். அப்பாவுக்குக் கடிதம் எழுதலாமா. பாவம் பணம் புரட்ட அவர் பட்ட கஷ்டம் நினைவில் வந்தது. இந்த நிலையில் பணம் அனுப்பி வையுங்கள் என்று எழுதினால். வீட்டில் பட்டினி கிடந்துதான் அனுப்ப வேண்டிவரும். வேண்டாம். எப்படியாவது பல்லைக் கடித்துக்கொண்டு சமாளிக்க வேண்டியது தான். மதிய நேரம் வெயில் தான். யாராவது தோழியின் குடையுள் ஒட்டிக் கொள்ள வேண்டியதுதான்.

அடுத்த சில நாட்கள் பகிடி வதை தொடர்ந்தது. இக்கட்டான சில சமயங்களில் செல்வகுமார் தான் காப்பாற்றினான். எனினும் அவனது உதவிகளை மனம் ஏற்க மறுத்தது. அந்த வார இறுதியில் வீட்டிற்குப் போனேன். திண்ணைவேலியிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு வந்து எனது அடுத்த பஸ்ஸுக்காகக் காத்திருந்த போது செல்வகுமார் எதிர்ப்பட்டான்.

நீண்ட நேரம் பஸ் வரவில்லை "ரீ குடிப்போமா?" என்று அழைத்தான் "வேண்டாம்" என்றேன்.

"களைப்பாக இருக்கடி... குடிப்போம்..." தோழி ராகினி சொன்னாள். நான் மறுபடி மறுத்தேன். "விருப்பமென்றால் நீ போய்க்குடி..." என்றேன். அவர்கள் போகவில்லை. செல்வகுமாரின் முகத்தில் துயர ரேகைகளை அவதானித்தேன்.

வீட்டுக்குப் போனதும அழுகை அழுகையாக வந்தது. அம்மா மகிழ்வோடு வந்து பல்கலைக்கழகம் பற்றி விசாரித்தார்.

"நான் இனிப் படிக்கப் போக வில்லை.. இந்தக் குடையால பட்ட அவமானம் போதும்..." என்றபடி குடையை மூலையில் வீசினேன் அம்மாவுக்கு கவலையாகப் போய் விட்டது. குடையை எடுத்து விரித்துப் பார்த்தார். ஒரு கம்பி முறிந்து ஒரு பக்கம் மடிந்து காட்சியளித்தது.

"கத்தரி பூக்கத் தொடங்கி விட்டது. இரண்டு கிழமைகளில் காய்பிடுங்கத் தொடங்கலாம் பிறகு வாங்கலாம். நீ ஒண்டுக்கும் யோசிக் காதை பிள்ளை" அம்மா ஆறுதல் கூறினார். இரவு வந்த அப்பாவிடம் அம்மா சொல்லியிருக்க வேண்டும். அப்பா குடையை எடுத்து விரித்துப் பார்த்தார். அவரது முகத்திலும் சோக ரேகைகள்.

எனினும் அடுத்தநாள் குடையை எடுத்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் போனார். அங்கு குடை

திருத்துபவனிடம் கொடுத்துத் திருத்திக் கொண்டு வந்தார். குடையை விரித்து என்னிடம் காட்டினார். அதைப் பார்த்தேன். எனினும் குடையை வாங்கவில்லை அப்பாவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

"அடுத்தமுறை நீ வரும்போது புதுக்குடை வாங்க காசு தாறன் பிள்ளை... கவலைப்படாதை. எங்கட கஷ்டம் தெரியும் தானே பிள்ளை?" அப்பா சொல்லும் போது எனக்கு மனது கனத்தது. அவர்களது திருப்திக்காக கம்பஸ் போனபோது குடையைக் கொண்டு போனேன். எனினும் பாவிப்பதில்லை. நாட்டின் யுத்த சூழ்நிலையிலும் பல்கலைக்கழகப் படிப்பு பயத்துடன் தொடர்ந்தது.

எம்மோடு படித்த ரசீத், பாத்திமா முதலிபோர் வெளியேற்றப்பட்ட போது மனது அழுதது. கிழக்கில் ஊர்காவல் படை செய்த கொடுமைக்காக இவர்களைப் பழி வாங்குவதா என நினைத்தேன்.

ஒரு மாதத்தில் பகிடி வதை முடிவுக்கு வந்தது.

பகிடிவதை முடிந்து விட்டமையினால் பல்கலைக்கழகத்தில் பதிய மாணவர்களும் பழைய மாணவர்களும் சுமுகமாகி விட்டனர். "வெல்கம் பாட்டியன்று "பார்சல் பாசிங்" நிகழ்வின் போது மீண்டும் ஒரு நெருடல்.

பார்சல் எனது கையில் வந்த போது இசை நின்றது. "இங்கே வழங்கபடும் குடையை விரித்துக் கொண்டு அழகு ராணியாக வலம் வரவும்.."

குடையை வாங்கி விரித்தேன். நான்கு கம்பிகள் முறிந்து கிழிந்த குடை. மனமும் முகமும் இருண்டு போனது. குடையை விரித்துக்கொண்டு சுற்றி வருவதைத் தவிர மாற்று வழி இருக்கவில்லை. எல்லோரும் "கூ" அடித்தார்கள் யாரோ ஒருவன் விசிலடித்தான். சுற்றி வந்ததும் குடையை மடித்து ஒரு மேசையில் வைத்து விட்டு வெட்கத்துடன் கூனிக் குறுகி ஓடினேன். அப்புறம் தான் கவனித்தேன். நான் குடையை வைத்தது செல்வகுமாரின் முன்னே என்பது. தற்செயலாக நடந்தது என்றாலும் ஏன் இப்படி நடந்தது என்று புரியவில்லை.

அடுத்த முறை வீட்டிற்குச் சென்று வந்தபோது செல்வகுமாரும் அதே பஸ்ஸில் பயணம் செய்தான். தற்செயலாக அவனுக்குப் பக்கத்தில் அமரவேண்டி ஏற்பட்டது. நீண்ட நேரம் இருவரும் மௌனமாகப் பயணம் செய்தோம். இப்போது முன்னரைப்போல் அவன் மீது வெறுப்பு ஏற்படுவதில்லை. எனினும் அதிகம் நெருங்கிப் பழக ஒரு விதபயம்.

செல்வகுமார் ஏதோ பலமான யோசனையில் ஆழ்ந்திருப்பது போலவும், எதையோ சொல்ல முடியாமல் தயங்குவது போலவும் உணர்ந்தேன். பஸ் வல்லை வெளியை தாண்டிய பின்னர் தான் கதைத்தான். "நீங்கள் எந்தத் துறையில் ஸ்பெஷல் செய்வதாக இருக்கிறீர்கள்?" எனது பக்கம் திரும்பிக் கேட்டான்.

"இன்னும் முடிவு செய்யவில்லை"

"நான் கெமிஸ்றி ஸ்பெஷல் செய்கிறேன்." என்றான் "நீங்கள் விடுதியில் தானே தங்கியிருக்கிறீர்கள்?"

ஓம் என்று தலையசைத்தேன்.

"நாட்டு நிலைமை சீரில்லை வெளியில் இருந்து வந்து போறது கஷ்டம். எந்த நேரம் என்ன நடக்குமோ தெரியாது. இந்த யுத்தம் முடிவுக்கு வராட்டில் யாரும் நிம்மதியாக இருக்க முடியாது.. போன கிழமை என்ர தம்பியும். வெளிக்கிட்டுப் போய் விட்டான்.. ஓ எல்லில எல்லாப் பாடமும் ஏ எடுத்தவன்.."

"கேள்விப்பட்டனான்..."

"உங்கட அம்மா சுகமில்லாமல் வைத்தியசாலையில் இருந்தவராம். இப்ப எப்படி?" அவன் அக்கறையுடன் கேட்ட போது மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

இப்படி இடையிடையே சந்திப்புகள் தொடர்ந்தன.

அன்றிரவு படுக்கையில் கற்பனைகள் விரிந்தன. வீட்டுச் சூழலையும் உறவுகளையும் பிரிந்து வாழ்கின்ற துயர சூழ்நிலையின் தனிமையில் செல்வகுமார் ஒரு நம்பிக் கையான துணையாகத் தோன்றினான். அதற்கு மேலாக எனது நட்பைப் பெறவும், என் மனதில் இடம் பிடிக்கவும் வேண்டும் எனவும் செயற் படுவதாக உணர்ந்தேன்.

அவனது உள்ளக் கிடக்கையை ஏற்க மனது தயங்கித் தவித்தது. சாதி என்கிற சாத்தான் அடிக்கடி வந்து பயமுறுத்தியது.

உறுதியாக எல்லை தாண்டா மலிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

நான் தங்கியிருந்த விடுதிக்கு சில மாலை வேளைகளில் வந்து கதைத்துக் கொள்ளும் அளவுக்கு எமது நட்பு வளர்ந்தது. எனது ஒவ்வொரு தேவைக்கும் அவனையே மனது எதிர் பார்த்தது. கடைத் தெருவுக்குப் போக கோயிலுக்குப் போக. எங்கே வெளியே போவதென்றாலும், சிநேகிதிகள் கூட வந்தாலும், நாட்டு நிலைமை காரணமாக ஒரு ஆண் துணை தேவைப்பட்ட போதெல்லாம் உரிமை யுடன் அவனையே அழைப்பேன்.

"செல்வ குமாருக்கு உன்னில லைனடி... நல்ல பையன். நீ அதிஷ்டக் காரியடி..." மலர் நெடுமூச்செறிந்து கூறியபோது. "அப்படியில்லையடி... எனக்கு அப்படி ஒரு எண்ணம் இல்லையடி"

என்று மறுத்துரைத்தேன். எனினும் இரவு யோசிக்கும்போது, அவனுக்கு என்ன குறை? கண்டறியாத சாதி... என மனது எண்ணியது.

ஒரு நாள் மாலை செல்வகுமார் விடுதிக்கு வந்திருந்தான்.

"அண்ணா வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறான்." என்ற படி என்னிடம் ஒரு பார்சலை நீட்டினான். "வேண்டாம்" என்று மறுத்தேன். அவனது முகம் கறுத்ததைக் கண்டதும் அந்தரமாக இருந்தது. பார்சலை வாங்கிக் கொண்டேன்.

அவன் விடைபெற்றுக் கொண்டு போனதும் பார்சலை கழற்றிப் பார்த்தேன். சென்ற் போத்தல், சொக்லெட் வகை, ஒரு அழகான ஸ்கேட், அத்துடன் ஒரு குடை!

குடை மிகவும் அழகாக இருந்தது. விரித்துப் பார்த்தேன். அற்புதமான குடை. கம்பஸ்சில் யாரிடமும் இப்படி ஒரு குடை இல்லை. மனதில் தென்றலடித்தது. நானும் அவனும் இந்தக் குடையுள் நடந்து போவதாக மனதில் ஒரு கற்பனை. மனதில் நாணம் ஏற்பட்டது.

குடையை வீட்டிற்குக் கொண்டு போக முடியாது. இங்கேயே வைத்துப் பாவிக்கலாம்.

அடுத்த வார இறுதியில் வீட்டிற்குப் போன போது எனது ஒன்று விட்ட அண்ணா ஒருவன், செல்வ குமாரின் உறவினரான பெட்டை ஒருத்தியை கூட்டிக் கொண்டு ஓடிவிட்ட சேதியைக் கூறி அம்மா அட்டகாசமாக ஏசினார். எனக்கு என்னவோ போலிருந்தது.

"எங்கட தாயக விடுதலைக்காக ஒன்றிணைந்து நின்று போராடுகிறம். இந்தக் காலத்திலும் என்ன சாதி பார்க்கிறியள் அம்மா?" என்றேன்.

அம்மா என்னைப் பார்த்து முறைத்தார். "என்ர பிள்ளை இப்படிச்

செய்தா நான் உயிரோட இருக்க மாட்டேன்.." எனக்கு சுரீரென்றது.

இந்த நிகழ்வுக்குப் பின்னர் செல்வகுமாருடன் பழகவே அந்தரமாக இருந்தது. நிச்சயமாக அவன் என்றோ ஒருநாள் வந்து தன் காதலைத்தெரிவிக் கத்தான் போகிறான்.

எனினும் செல்வகுமார் அன்பளித்த குடையுடன் பெருமிதமாக நடந்து போவேன் "அருமையான குடையடி எங்கேவாங்கலாம்?" எத்தனையோ பேர் கேட்டனர். எனக்குப் பெருமிதமாக இருந்தது.

செல்வகுமாருக்கு இறுதி யாண்டுப் பரீட்சை முடிந்தது. நான் எதிர்பார்த்தபடி அவன் என்னிடம் அந்தக் குண்டைத்தூக்கிப் போட்டான். "தயாழினி.. எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு உங்களுக்கும் என்னைப் பிடிச்சிருக்கும் என்று நினைக்கிறேன்.." எனக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. ஆனால் அவன் சொன்ன வார்த்தைகளிலிருந்த உண்மை உறைத்தது. மௌனமாக நின்றேன். கண்கள் பனித்தன. "செல்வா... அடைய முடியாத பொருளிலை ஆசைப் படக்கூடாது. நடக்க முடியாத சாத்திய மற்ற காதலை நாம் ஆரம்பிக்கத்தான் வேணுமா? எங்களுடைய சிநேகிதம் இறுதிவரை நல்ல நட்பாகவே இருந்து விட்டுப் போகட்டுமே.."

"தயா.. நீங்க சொல்லுறதில் யுள்ள நியாயம் எனக்குப் புரியுது. ஆனால் நாம் மனம் வைத்தால் எதுவும் சரிவரலாம்.. துணிவுதான் வேணும்.."

எனக்கு அந்தத் துணி வில்லை. பின்னுக்குள்ள என்னுடைய சகோதரிகளுடைய எதிர்காலம் என்னால் பாதிக்கப் படக் கூடாது.." உறுதியாக மறுத்தேன்.

செல்வகுமார் படிப்பு முடிந்து போய்விட்டான் நீண்ட நாட்கள் என் மனம் அவனுக்காக அழுதுகொண்டே இருந்தது.

எனது படிப்பு முடிந்து நான் ஆசிரியையானேன். வீட்டில் பல இடங்களில் திருமணம் பேசினார்கள். அவர்கள் எதிர்பார்த்த சீதனத்தை எம்மால் கொடுக்க முடியாததால் எனது திருமணம் பின்தள்ளிக்கொண்டே போனது. தலையில் வெள்ளிகூட பூக்கத் தொடங்கிவிட்டது.

இளமைக் கனவுகள் ஈடேறாத தகிப்பில் தவிக்கின்ற பொழுதுகளி லெல்லாம் செல்வகுமாரின் நினைப்பு மேலோங்கும். வலிய வந்த சீதேவி யைத் தட்டிக் கழித்துவிட்டு இன்று வாழ்வுக்காகத் தவிக்கின்ற அவலத் தை உணர்கின்ற இந்த வேளையில் இராக்காலக் கனவுகளிலும் நினைவு களிலும் செல்வகுமார் தரிசன மாவான்.

எனினும் அவனை அப்புறம் சந்திக்கவேயில்லை. இன்று சற்றும் எதிர்பாராமல் சந்தித்தபோது மனது கனத்தது. செல்வகுமாரும் மனைவியும் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் இயந்திரத்தனமாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன்.

கார் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. நான் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது சொன்னேன். செல்வகுமார் காரை நிறுத்தினான். நான் இறங்கி குடையை விரிக்கும் போது அவனது பார்வை குடையிலேயே குத்திட்டு நின்றது

நான் காரை விட்டு இறங்கிய போது "தயாக்குட்டி.. அன்ரிக்கு டாட்டா சொல்லம்மா.." என்று தன் மகளிடம் கூறினான்.

நான் அதிர்ச்சியுடன் செல்வ குமாரை நிமிர்ந்து பார்த்தேன். என்னைப் போலவே அவனது கண்களும் பனித்திருந்தன.

குழந்தைக்கு "டாட்டா"

சொல்லியபடி குடையை விரித்தேன் "படக்" கென்று ஒரு கம்பி முறியவே நெஞ்சு வலித்தது. தாங்க முடியாமல் கண்கள் பெருக்கெடுத்தன.

வீட்டிற்குச்சென்றதும் அப்பாவிடம் சொல்லி முறிந்த கம்பியை மாற்றிக் கொள்ள வேண்டுமென நினைத்தேன். வீட்டை அடைந்ததும் முதல் வேலை யாக அப்பாவிடம் குடையை நீட்டினேன்.

அப்பா குடையை வாங்கிப் பார்த்தார். "இந்தக் குடையை வீசிவிட்டு புதுக்குடை வாங்கம்மா.." என்று அன்பாகக் கூறினார்.

"நீங்கள் தானே வாங்கித்தர வேண்டும்" என்றேன். நான் சொல்வது புரியாமல் அப்பா விழித்தார்.□□□

# தேவனை அவனில் காண்பாய்

கதவினைப் பூட்டி உள்ளே
 கருமிருட் டதனில் நின்று
சுதந்திர மாக யாரைத்
 துதிக்கிறாய்? ஜபமா? மாலை
அதனையும் உருட்டு றாயே!
 ்்டலும் பாடல் தானும்
அதற்குமேல் மந்த்ர தந்த்ர
 அலுவலும் பார்க்கின் றாயே

ஐயனே அந்த வித்தை
 அனைத்தையும் விட்டாலென்ன?
செய்யுமுன் வித்தை யாலே
 தெய்வமும் தெரிவ துண்டோ?
பொய்யெனில் கண்ணை யிந்தப்
 பொழுதிலே திறந்து பார்நீ
மெய்யென உணரு வாய்உன்
 முன்பிலோ கடவுள் இல்லை

ஏர்பிடிப் பவர்தம் மோடும்
 எழில்மிகு சாலை செய்யத்
தார்வழி சமைப்போ ரோடும்
 தகித்திடும் வெய்யில் கீழும்
கார்முகில் மழையிலேயும்
 கந்தலில் தூசி தோயப்
போர்வையைப் புறத்தே போட்டு
 புவியினில் இறங்கி வாநீ

விடுதலை தேடு வோனே
 விடுதலை கிடைப்ப தெங்கே?
இடுதலை வேண்டித் தானே
 இறைவனும் தளைகள் பூண்டான்
நெடுகிலும் பிரியா தெம்மில்
 நிறைந்துமே ீங்கா தானைச்
சடுதியில் விட்டான் என்ற
 சங்கதி முற்றும் பொய்யாம்

பூவையும் நல்ல தூபப்
 புகையையும் பூசைதானும்
சேவையென் றெண்ண வேண்டாம்
 செகத்தினில் இறங்கி வாநீ
யாவையும் அழுக்கானாலும்
 அயர்ந்திடா துழைப்பா யானால்
தேவையென் றேது மில்லைத்
 தேவனை அவனில் காண்பாய்

ஆங்கிலமூலம் : ரவீந்திரநாத் தாகூர்
தமிழில் : புருஷோத்தமஞானி
(கீதாஞ்சலி - 11)

# பரஞ்சோதி முனிவர் பேசும் சைவத்துள் சாதியம்

இந்துசமயம் சைவசமயம் என்பவற்றைத் தளமாகக் கொண்டு அக்காலம் முதல் சாதியம் வளர்க்கப்பெற்றது. கடவுளுடன் சம்பந்தப்படுத்தி, சாதிவெறிபிடித்த மனிதர்கள் அதனை வளர்த்தார்கள். தமது மனக்கருத்தினை சமயத்துடன் இணைத்து உண்மைக்கருத்தென நிலைநிறுத்த முயன்றனர்.

செங்கோடன்

பக்திநெறி நின்று வழிபடும் அடியவர்களுக்கு அருள் பாலிக்கவும், தீயவர்களை ஒறுத்து நல்வழிப்படுத்தி உய்விக்கவும் உலகில் சிவன் நிகழ்த்தியதாகக் கூறப்பெறும் அற்புதச் செயல்கள் திருவிளையாடல்கள் எனப்படும். சிவனாராகிய இறைவன் புரிந்த திருவிளையாடல்கள் புலவர்களால் புராணங்களாகப் பாடப்பெற்றுள்ளன. புராணங்களுள் முதற்கண் வைக்கத்தகுந்தவை பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய இரண்டும் எனலாம். பெரியபுராணம் சோழர்காலத்தில் (கி.பி.9 - கி.பி.14) வாழ்ந்த சேக்கிழார் சுவாமிகளால் பாடப்பெற்றது. "பக்திச்சுவை நனிசொட்டச் சொட்ட" சேக்கிழார் சுவாமிகளால் இயற்றப்பெற்ற பெரியபுராணம், சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய "திருத்தொண்டர் தொகை" நம்பியாண்டார்நம்பி பாடிய "திருத்தொண்டர் திருவந்தாதி" என்பனவற்றின் அடி நின்றெழுந்த வழி நூலாகும். சிவபக்தியில் மேம்பட்டுத திகழ்ந்த அறுபத்துமூன்று நாயன்மார்களூடாக சிவனார் நிகழ்த்திய அற்புதங்களை இப்புராணநூல் எடுத்து இயம்புகின்றது.

புராணநூல்கள் எஞ்ஞான்றும் வரலாறுகள் ஆகிவிடமாட்டா. மெய்யடியார்களின் வாழ்வுச் சம்பவங்கள் சிற்சிலவற்றுடன் கற்பனை கலந்து புலவர் பெருமக்களால் உருவாக்கப் பெற்றவைகளே புராணங்கள். இறைவனிடம் கொண்டுள்ள பக்தியும் அதீத நம்பிக்கையும் காரணமாக புராணக்கதைகள்யாவும் உண்மைச்சம்பவங்கள் என்று நம்புவாரும் நம்மிடையே உண்டு. பக்திமீதுறப்பெற்ற நல்லடியார்களான நாயன்மார் அறுபத்துமூவருக்குப் பெருங்கருணைப் பேராறாகியசிவன் நல்லருள் புரிந்ததும், அவர்களூடாக அற்புதங்கள் செய்ததும், பெரியபுராணம் காட்டும் சைவத்தின் மெய்மையெனக் கண்டு கொள்ளலாம்.

திருவிளையாடற் புராணம், பெரியபுராணத்தில் இருந்து வேறுபட்ட இறைமாட்சி கொண்டு விளங்குகின்றது. மதுரை சோமசுந்தரக்கடவுள் மதுரை மாநகரில் அவ்வப்போது புரிந்த திருவிளை யாடல்கள் அறுபத்து நான்கினைச் சுவைபட எடுத்துக்கூறுகின்றது. திருவிளையாடற்புராணம் நாயக்கர் காலத்தில் பதினாறாம் நூற்றாண்டில் எழுந்த ஒருநூல். அக்காலத்தில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவரால் இந்நூல் இயற்றப்பெற்றது. இந்த நூல் தமிழில் எழுந்த முதன்நூலன்று. சோழர்காலத்தில் வாழ்ந்த பெரும்பற்றப் புலியூர்நம்பி இயற்றிய

திருவிளையாடற்புராணத்தையொட்டி வடமொழி நூலின் வழிவந்த தழுவல் நூலாகும்.

"ஹாலாஸ்ய மகாத்மியம் " என்னும் வடமொழிநூல் மதுரைச் சோமசுந்தரக் கடவுளின் பெருமையை எடுத்துரைப்பது. மதுரையை ஆண்டபாண்டியர்களின் வரலாற்றின் ஒருசிறுபகுதி இந்நூலில் உள்ளது. பெரும்பகுதி அந்த வரலாற்றுச் செய்திகளைத் திரித்தும் கூட்டியும் புதியனபுனைந்தும் கூறும் கற்பனைகளாகும். இத்தகைய கற்பனைகளினூடே சமய உண்மைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன. இவ்வாறு அமைந்ததே "ஹாலாஸ்ய மாத்மியம்", இதைத்தழுவிய மொழிபெயர்ப்பே தமிழில் திருவிளையாடற் புராணம் என்னும் நூல் ஆகும்" என திருவிளையாடற் புராணம் பற்றி டாக்டர் மு.வ. கொங்கதர வாழ்க்கை என்னும் நூலில் குறிப்பிடப்படுகின்றார்.

திருவிளையாடற்புராணத்தில் தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் ஐம்பத்துரண்டாவது திருவிளையாடலாக இடம்பெற்றுள்ளது. இத் திருவிளை யாடலின் தொடக்கம் பாண்டியன் செண்பகமாறன் (சம்பகபாண்டியன்) வாழ்வில் இடம் பெற்ற ஒருநிகழ்வுடன் ஆரம்பிக்கின்றது. செண்பகமாறன் தனது துணைவியுடன் ஓர் இளவேனில் காலத்தில் நந்தவனம் ஒன்றில் உலாவிவருகின்றான். அந்தசமயம் மேலாநறுமணம் கமழும் தென்றல் காற்று வந்து அவனைத் தழுவிக்கொண்டு செல்கின்றது. அந்தக் காற்றில் கலந்து வந்த திவ்வியநறுமணம் இதுவரை அவன் முகராத ஒன்று. காற்றுக்கு மணம் இல்லை அத்தையமேலான ஒரு நறுமணம் மலர்களிடத்துமில்லை. அவ்வாறாயின் அந்தத் திவ்விய வாசம் எங்கிருந்து வீசுகின்றது? எனச் சிந்திக்கலானான்.திரும்பி, தன்னருகே நிற்கும் அரசியை நோக்குகின்றான். அப்பொழுது அவன் மனதில் எழுந்த ஐயம் தீர்ந்துபோய் விடுகின்றது. அந்தத் திவ்விய வாசனை அரசியின் கூந்தலில் இருந்து எழுகின்றது என்பதை உணர்ந்து கொள்ளுகின்றான். அதனைத் தொடர்ந்து பிறிதோர் ஐயம் அவன் உள்ளத்தில் உதயமாகிறது. அரசியின் கூந்தலில் இருந்து எழும் திவ்விய நறுமணம் அவள் கூந்தலுக்கு இயற்கையானதா? அல்லது செயற்கையானதா, என்பதே புதிதாகத் தோன்றிய ஐயம். இத்துணைகாலம் அவனோடு துணையாக இணைந்து வாழ்ந்த அரசியின் கூந்தலிலுள்ள நறுமணத்தை அவன் அறியாதிருப்பதும் தற்பொழுது அறிந்து ஐயுறுவதும் உண்மையில் அதிசயந்தான்!

தனது மனக்கருத்தை உணர்ந்து உள்ளத்து ஐயத்தைத் தீர்த்து வைக்கும் புலவருக்கு ஆயிரம் பொற்காசு பரிசளிக்கப்படும் எனப் பாண்டியன் அறிவித்தான். புலவர்பெருமக்கள் கூடித் தமிழாயும் அக்காலச் சங்க மண்டபத்தில் அப்பொற்கிழி யினைக் கட்டித் தொங்கவிட்டான் புலவர்கள் பலர் அப் பொற்கிழியைக் கையகப் படுத்தும் வேட்கையுடன் பாடல்கள் பல பனைந்தனர். அவர்கள் பாடல்கள் பாண்டியன் மனதில் எழுந்த ஐயத்தைப் போக்குவதாக அமையவில்லை.

அந்தப் பொற்கிழியைத் தான் அடையவேண்டுமென்னும் பேரவா தருமி என்பான் உள்ளத்தில் தோன்றிற்று. தருமி மதுரையில் வாழ்ந்த ஓர் ஏழைப்பிராமணன். தாய், தந்தை அற்றவன். ஆலய அர்ச்சகனாகத் தனது வாழ்க்கையை ஓட்டி வந்தான். அவன் திருமணவயதை அடைந்தபிறகும் அவனுக்கு அந்த வாழ்க்கை வந்து கிட்டவில்லை. திருமணம் செய்யவேண்டும் என்னும் ஆசை அவனைப் பிடர்பிடித்து உந்தியது. ஈசன் பூசனை செய்யும் அந்தணன் உரிகாலத்தில் திருமணபந்தத்துக்கு ஆளாகவேண்டும். தருமி ஏழையாக இருந்தமையால் அவனுக்குப் பெண்தருவார்

எவருமில்லை. அவன் தனது மனக்குறையை மதுரை சோமசுந்தரப் பெருமான் திருக்கோவிலுக்குச் சென்று பின்வருமாறு முறையிட்டான்.

*"தந்தை தாயிலேன் தனியன் ஆகிய*
*மைந்த னேன்புது வதுவை வேட்டேனே..."*

*"வடுவில் இல்லற வாழ்க்கை இன்றிநின்*
*அடிஅ ருச்சனைக் கருக னாவனோ..."*

தருமி வதுவை செய்யப் பொருள் வேண்டியதாக இருக்கின்றது. பாண்டியன் மனக்கருத்தில் எழுந்துள்ள ஐயம் தீர்க்கும் பாடல் ஒன்று கிடைக்கப்பெறின், தமிழ்ச் சங்கமண்டபத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் பொற்கிழியைத் தான் அடையலாமென எண்ணி, சோமசுந்தரப் பெருமானிடம் வேண்டுதல் செய்தான்.

பிராமணர் அல்லாத சூத்திரர்களுக்கு அருள்பாலிப்பதாக இருந்தால் அந்த அடியவனுக்கு வேதனைமிகுந்த பல சோதனைகளைக்கொடுத்து அந்தச் சோதனைகளை எல்லாம் தாங்கி, அவன் இறையருள் எண்ணி உருகுங்கால் அவனுக்கு அருள்புரிவார் சிவனார். பிராமணனாகப் பிறந்தவன் அழைத்தமாத்திரத்தே ஓடோடிவந்து அபயம் கொடுப்பது சிவனாரின் பெருங்குணம். அந்தச்சிவனார் தருமி என்னும் பிராமணன் திருமண ஆசையால் துவண்டுபோவது கண்டு வாழாவிருப்பாரா? மதுரைச்சோமசுந்தரப் பெருமான் மனமிரங்கி பின்வரும் செய்யுளைத் தருமிக்கு எழுதிக் கொடுத்ததாகத் திருவிளையாடற் புராணம் புகல்கிறது.

*"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி*
*காமம் செப்பாது கண்டது மொழிமோ*
*பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்*
*செறிஎயிற்று அரிவை கூந்தலின்*
*நறியவும் உளவோநீ அறியும் பூவே"*

இந்தப்பாடல் சங்க இலக்கியங்களுள் ஒன்றான குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது. குறுந்தொகையில் இரண்டாவது பாடல் இது நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என்பன அகத்திணை பற்றிக்கூறும் சங்க இலக்கியங்களாகும். ஒவ்வொருநூலும் நானூறு பாடல்களைத் தன்னகத்தே கொண்டது. "கொங்குதேர் வாழ்க்கை..." என ஆரம்பிக்கும் இப்பாடலை யாத்தபுலவர் இறையனார் என்பார். சங்ககாலத்துக்குரிய இச் செய்யுளை நாயக்கர்காலத்தில் (16ம் நூற்றாண்டு) வாழ்ந்த பரஞ்சோதிமுனிவர் தமது திருவிளையாடற்புராணத்தில் தருமியின் கதையுடன் பொருந்த இணைத்துள்ளார். இவ்வாறு இணைத்து நோக்கும் கற்பனைக்கு இச்செய்யுள் இறையனார் இயற்றியதாகக் கொள்ளப்பட்டதே அடிப்படைக் காரணமாக இருந்திருக்க வேண்டும். பரஞ்சோதிமுனிவரின் எண்ணக்கருத்து இறையனார் என்பது ஒருமனிதனல்லன் மதுரையில் எழுந்தருளி இருக்கும் சோமசுந்தரப் பெருமானே என்பது அவர் முடிவு.

தருமி எக்காலத்துக்குரியவன்? என்பது மற்றொருவினா. அப்படியொரு வறியபிராமணன் பரஞ்சோதிமுனிவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருக்கலாம். ஆனால் பரஞ்சோதிமுனிவரின் கற்பனையில் தருமி சங்ககாலத்தில் வசித்த ஒருவன் ஆக்கப்பெற்றுள்ளான். திருவிளையாடற் புராணத்தில் இடம் பெறும் தருமியின் கதை, திருவிளையாடற் புராணத்தை யாத்த பரஞ்சோதி முனிவர் காலத்துக்கு, பதின்மூன்று அல்லது பதின்நான்கு நூற்றாண்டு காலத்துக்கு முற்பட்டது.

மதுரைச் சோமசுந்தரப் பெருமான் இயற்றிய செய்யுளைக் கொணர்ந்து பாண்டியனிடம் தருமி ஒப்படைக்கின்றான். பாண்டியன் அச் செய்யுளைப் படித்துப்பார்க்கின்றான் "மலர்ந்துள்ள மலர்கள் தோறும் சென்றமர்ந்து பூந்தாதினை ஆராய்வதனையே வாழ்க்கையாகக் கொண்டுள்ள அழகிய சிறகுகளை உடைய தும்பியே! உனது மனவிருப்புக்கமையப் பேசாது நீகண்ட உண்மையைச் சொல்வாயாக! பழகத்தகுந்த நட்பினை உடையவள் மயிலொத்த சாயலை உடையவள். நெருக்கமான அழகிய பற்களை உடையவளான மங்கையின் கூந்தலின் மேலான நறுமணமுள்ள பூக்கள் உள்ளனவா? நீ அறிந்து வைத்துள்ள பூக்களுள்ளே?" பாடலின் பொருள் உணர்ந்து பாண்டியன் புளகாங்கிதம் உறுகின்றான். அந்தத் திவ்வியமணம் வீசிஇடத்து உடனிருந்தவள் அவன் துணைவி பாண்டிமாதேவி. அந்த மகோன்னத மணம் அவள் கூந்தலுக்கே உரியது என துணிகின்றான்.

சங்கச் சான்றோரான புலவர் பெருமக்கள் அச்செய்யுளைப்படித்து அதன் சிறப்புக்கண்டு மெச்சுகின்றனர். பாண்டியன் உள்ளத்தெழுந்த வினாவுக்கான விடைகிடைத்து விட்டது. இனியென்ன! தருமிக்கே பொற்கிழி உரித்துடையதெனப் பாண்டியன் பணித்தான்.

தமிழ்ச் சங்கத்து மண்டபத்தில் தொங்கவிடப்பெற்ற பொற்கிழியைத் தருமி அறுத்தெடுக்க முற்பட்டபோது தலைமைப்புலவன் நக்கீரன் அங்குதோன்றி அதனைத் தடுத்தார். இந்தச் செய்யுளில் குற்றம் இருக்கின்றது" எனக்கூறினார். தருமி செய்வதறியாது திகைத்தான். செய்யுளையாத்தவன் அவனல்லவே! அவன் யாது செய்வான்! செய்யுளை யாத்துக் கையளித்த சோமசுந்தரக் கடவுள் சந்நிதானத்துக்கு ஓடினான். சோமசுந்தரர் திருமுன் வைத்து "பரம்பெருமானே! வறுமையினால் மிக வாடிப் பலகாலும் உம்மைவழிபட்டு வரும் அடியவன் யான். ஏழையாகிய எந்தனுக்கு பிழையான இப்பாடலை நீர்தந்து இப்பொழுதுயான் பெற்ற பொருளையும் இழந்தேன் என்பது எனக்குரிய மனக்குறையன்று. உலோகநாயகனாகிய உமது செய்யுளுக்கு சிற்றறிவுடைய அற்பமானிடனாகிய புலவர் குற்றஞ் சொன்னாரே! இதனால் இகழ்ச்சி உனக்கல்லவா நேர்ந்துளது" என இறைஞ்சி நின்றான்.

அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் ஒருபுலவர் வடிவம் பூண்டு தருமியை உடன் அழைத்துக் கொண்டு புலவர்கள் கூடும் தமிழ்ச்சங்கத்துக்கு வருகின்றார். "நமது செய்யுளுக்குக் குற்றஞ் சொன்னவர் யார்" என புலவர்களை நோக்கி வினவுகின்றார். அச்சமயம் நக்கீரர் தற்றுணிவுடன் "நானே சொன்னேன்" என்கின்றார். "யாது குற்றம்?" புலவராக வந்த சோமசுந்தரர் வினவ "சொற்குற்றமன்று பொருட்குற்றமுண்டு" என் கின்றார் நக்கீரர் "பொருட்குற்றம் என்ன?" புலவரான சோமசுந்தரர் வினவ "கூந்தலுக்கு நறுமணம் பூவைச்சூடுவதனால் செயற்கையாக வருமேயன்றி இயற்கையானதன்று" நக்கீரர் உறுதிபடக் கூறுகின்றார். "பதுமினியாகவுள்ள பெண்களின் கூந்தலிலும் இயற்கையான நறுமணமில்லையோ?" புலவரின் அடுத்த வினா.

பெண்களை நான்கு வகையினராக அக்காலத்தில் வகைப்படுத்தி வைத்துள்ளனர். காமசூத்திரங்களும் அத்தகைய பிரிவினை எடுத்து இயம்புகின்றன. பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி என்பவரே அந்த நான்கு வகையினர். பதுமினி மிக உயர்ந்த வகையினளாகவும் அத்தினி கடைப் பெண்ணாகவும் சொல்லப் படுகின்றது. இந்தவகைப்பாட்டினை உளம்கொண்டு பதுமினி உயர்ந்தவகையினளாகக் கருதி, அவ்வகைப் பெண்களின் கூந்தலில் இயற்கையான நறுமணம் உளதென்பதைக்

குறிப்பாகக் கொண்டு வினவப்பெறுகின்றது. இந்த வினாவுக்கும் நக்கீரன் 'இல்லை' யென்றே உத்தரமளிக்கின்றார். அதனைத் தொடர்ந்து "தெய்வமாதரின் கூந்தலிலுள்ள மணம்?" எனப்புலவர் வினவ, "அதுவும் வாசமலர்களைச் சூடியதால் வந்த நறுமணம்" என்கிறார் நக்கீரர் இறுதியாக "நீவழிபடும் திருக்காளத்தியப்பருடைய சக்தியாகி உமையம்மையின் கூந்தலிலுமா இயற்கையான நறுமணம் இல்லை?" என புலவரான சோமசுந்தரப் பெருமான் வினவ "அதுவுமில்லை" என அறுதியிட்டுக் கூறுகின்றார் நக்கீரர். நக்கீரரின் மறுதலிப்பினால் சினமுற்ற சோமசுந்தரனார் தமது நெற்றிக் கண்ணைச் சிறிது காட்ட "இந்திரன்போல அங்க மெல்லாம் கண்ணானாலும் உமது பாடல் குற்றம் குற்றமே" என நக்கீரன் வைரித்த நெஞ்சனாக நிமிர்ந்து நிற்கின்றார்.

சோமசுந்தரப் பெருமான் உள்ளத்தில் அணையாப் பெருந்தீயாகச் சினம் பற்றி எரிகின்றது. தமது கருத்தை நக்கீரன் ஏற்றுக் கொள்ளும் படி செய்ய இயலவில்லையே! தமது செய்யுள் குற்றமற்றது என்பதை அவனிடத்தில் நிறுவமுடியவில்லையே எனவே அவனை எவ்வாறேனும் இழிவுபடுத்த வேண்டுமென்னும் எண்ணம் நெஞ்சில் எழுகின்றது. சினந்து அவனை நோக்கி பின்வருமாறு வைத்து கூறுகின்றார்.

*"அங்கம் குலுங்க அரிவாளில் நெய்தடவி*
*பங்கப் படவிரண்டு கால்பரப்பி - சங்கதனை*
*கீர்கீர்என அறுக்கும் கீரனோ என்கவியை*
*பாரிற் பழுதென் பவன்"*

தன்மீது வீசப்பெற்ற பழிச் சொல் கேட்டு நக்கீரன் துவண்டு போய்விடவில்லை. சோமசுந்தரனாரை நோக்கி நக்கீரன் நிமிர்ந்து கூறுகின்றார்.

*"சங்கறுப்ப தென்குலமே தம்பிராற் கேதுகுலம்*
*பங்கமறச் சொன்னாற் பழுதாமே - சங்கை*
*அரிந்துண்டு வாழ்வோம் அரனாரைப் போல*
*இரந்துண்டு வாழ்வ தில்லை"*

இந்தத் தர்க்கத்தினை உள்ளடக்கியதாகப் பரஞ்சோதிமுனிவரால் உருவாக்கப் பெற்ற திருவிளையாடல் தருமியின் கதை. பரஞ்சோதி முனிவரின் கற்பனைத் திறன் வியந்து போற்றுதற்குரியது. சங்ககாலக் குறுந்தொகைப்பாடல் சங்காலத்தமிழ்ச் சங்கம் என்பவற்றை இணைத்து பதினாறாம் நூற்றாண்டில் திருவிளையாடற் புராணத்தை இயற்றியுள்ளார். அக்காலச் சமயக் கதையில் சாதியம் பேசப்படுகின்றது. நக்கீரனை எவ்வகையாலும் பணியவைக்க இயலாத கடவுள் அவர் குலத்தைச் சொல்லி தாழ்த்திப் பேசுகின்றார். நக்கீரனோ தன்னம்பிக்கையுடன் நிமிர்ந்து நின்று "சங்கறுப்ப தென்குலமே" எனச் சங்கநாதம் செய்கின்றார். கடவுள் பெயரில் சொல்லப் பெறும் இக்கதை வெறும் கற்பிதம். கடவுள் நேரில் எழுந்தருளவு மில்லை நக்கீரன் சாதியால் குறைந்தவன் என்று தாழ்த்திப் பேசவுமில்லை. இவையாவும் பரஞ்சோதி முனிவரின் கைச்சரக்குகள்.

பரஞ்சோதி முனிவரும் அவர்போன்று வேறுபலரும் சமயத்துக் கூடாக எவ்வாறு சாதி வேறுபாட்டை வளர்த்தார்கள் என்பதற்கு இதொரு நல்லுதாரணம். இந்துசமயம் சைவசமயம் என்பவற்றைத் தளமாகக் கொண்டு அக்காலம் முதல் சாதியம் வளர்க்கப்பெற்றது. கடவுளுடன் சம்பந்தப்படுத்தி, சாதிவெறிபிடித்த மனிதர்கள் அதனை வளர்த்தார்கள் தமது மனக்கருத்தினை சமயத்துடன்

இணைத்து உண்மைக்கருத்தென நிலைநிறுத்த முயன்றனர்.

பல்வேறு சிறப்புக்களை உடைய ஒருவனைப் பின்தள்ளுவதற்கு அவன் பிறந்த குலம் சுட்டிக் காட்டப்பெறுகின்றது. ஒருவன் தன்னை மேன்மைப்படுத்துவதற்கு வேறெந்தச்சிறப்புக்களும் இல்லாத இடத்து, தான் உயர்ந்தசாதியான் எனக் கூறிக் கொள்ளும் இழிகுணம் இன்று எம்மிடை உண்டு. இந்த இழிகுணம் சமயத்தின் பெயரால் சமயத்துக்கூடாக வெளிப்படும் அநாகரிகம் இன்னும் அழிந்து போய் விடவில்லை. சைவசமயம்.இத்தகைய இழிந்த குணத்தினைப் பேணி தாலாட்டி வளர்க்கும் தொட்டிலாக விளங்குகின்றது. தொண்டு நிறுவனங்களுக்கு மத்தியிலும் இன்று இக் குணம் கரந்து உறைகின்றது. இத்தகைய நடத்தைப் போக்கின் மூலவர்களுள் ஒருவராகப் பரஞ்சோதி முனிவரைக் குறிப்பிடலாம். சைவர்களின் சமூகமத்தியில் திருவிளையாடற் புராணத்துக் கூடாக அவர்புரிந்த திருவிளையாடல்களில் இது முக்கியமானது எனலாம்.□□□

## தவப்பொழுது

தனித்திருந்த அந்தத் தவப்பொழுதில்
என்பேச்சுத்துணையாய்
அருகே இருந்தது அத் தூயவயல்
எனக்குக் கவிதைக் குருவாச்சு ஆலமரம்
எனக்கு நிமிர்வை இயம்பிற்றுச் சிறுநாணல்
எனக்கு இசைவகுப்பு எடுத்தது அப்பேராழி
எனது கறைபற்றிச் சுட்டிற்று வட்டநிலா
எனைவலிமை யாக்க
இளகிற்று அப்பாறை
எனையே புடம்போட்டு ஜொலிக்கவைத்த
தந்தி வெயில் சிலபல
வித்தைகளை நுட்பத்தை
நானறியாப்பொழுதில்
எனக்குணர்த்திப் புன்னகைத்த தாகாயம்.
என்னை இலவம்
பஞ்சாக்கிற் றிராத் தென்றல்
துன்பம் கழுவித்துடைத்தது
ஓர் மாரிமழைஎண்ணம் விரிய
உதவிற்று வெட்டவெளி
எட்டுத் திசைகளையும்
நட்பாக்கிற் றொருபறவை
தனித்திருந்த அந்த தவப்பொழுது
கலைந்ததனால்
கனமும் துயர்வலைக்குள்
கருகிடுது எனது மனம்.

- த. ஜெயசீலன்

## காத்திருப்பு!

காலம் விதியின்
கைகளில் வரையறுக்கப்பட்டிருக்கிறது!
காலச் சக்கரம்
வெகுவாகச் சுழன்று
கொண்டிருக்கிறது!
பகல்களும் இரவுகளும்
நாளுக்கு நாள் கடக்கின்றன!

எனது நிமிடங்களை
எண்ணிப்பார்க்க - இங்கு
எவருமில்லை!
எனது சுவாசக் காற்றின்
கனத்தையளக்க - இங்கு
யாருமில்லை!

யுகங்கள்
மலர்களைப் போல்
மலர்ந்தும், உதிர்ந்தும்
போகின்றன!

நான் உனக்காக
எத்தனை காலம்
காத்திருப்பதென்பது,
எனக்கே தெரியாமல் போகின்றன!!

- றிம்ஸா முஹம்மத்
வெலிகம

# அமைதிக்காய் ஒரு வேண்டுதல்

காலையிலே எழுந்துகண்ணைக் கசக்கி வானின்
கதற்றலையிற் பவனிவரும் செய்தி கேட்டால்
சாலையிலும் கானகத்தும் வெட்டிக் கொன்ற
சடலங்கள் என்பதுதான் முதலில் பின்னர்
மாலைவரை தொடருமந்தச் செய்தி எங்கும்
மரணங்கள் மரணங்கள் என்றே கெட்ட
காலமிது ஐயய்யோ பிற்காலத்தோர்
காறியுமிழ் கின்றஇழி காலமாச்சே.

தலையில்லா முண்டம் ஒரு இடத்தில் என்பார்
தண்ணீரில் மிதப்பவைகள் வேறு என்பார்
கொலையுண்ட பிணங்கள்தெரு நாயிற் கேடாய்க்
கொழுத்திளரி கின்றகொடுஞ் செயல்கள் சொல்வார்
விலையில்லா உயிர்பறிக்கப் பட்ட பின்னர்
வெற்றுடலைச் சிதைத்தழிக்கும் கேடு கெட்ட
நிலைவந்த தேளங்கள் ஈழ நாட்டில்
நீதியழிந் திட்டதென்ன கொடுமை யாமோ.

அரசியலில் இலாபமொன்றே நோக்காய்க் கொண்டு
ஆயிரங்க ளாயிரமாய் உயிர்கள் தம்மின்
சிரசரியும் செய்கைதனை எண்ணி நெஞ்சம்
சிறிதேனும் பொறுக்குதிலை என்ன செய்வோம்
உரிமைகளைப் பங்கீடு செய்து கொள்ள
உயர்வழிகள் பலவிருந்தும் உயிர்பறிக்கும்
கருமத்தால் அமைதிஇந்த நாட்டை விட்டுங்
கடுந்தூரஞ் செல்கிறதே என்செய் வோமோ.

பிள்ளைகளை இழந்தவர்கள் வேறு கூடப்
பிறந்தவரைப் பிரிந்தவர்கள் வேறு தம்மை
அள்ளிஅணைத்(து) இருந்ததந்தை தம்மைத் தேடி
அழுகின்ற குழந்தைகளும் நூறு நூறாம்
எள்ளளவுந் துயிலற்றுச் சோகத்தாலே
ஏங்குகின்ற மனைவியர்கள் எத்தனைபேர்
கொள்ளைகொள்ளை யாமிவற்றை எடுத்துக் கூறக்
கோன்முறையுஞ் சீர்கெட்டுப் போனதையோ.

கொன்றொழித்த லால்என்ன நன்மை தேறும்
கூடியொன்றிப் பேசிடிலே தீர்வு தோன்றும்
என்றும்மனப் பகைமைதனை வளர்ப்ப தாலே
ஏற்படுவ தில்லைசமா தானம் மக்கள்
ஒன்றுபட வேண்டுமவர் வேற்றுமைகள்
உருமாறித் தோழமையும் தோன்ற வேண்டும்
நன்றன்றோ நாமெல்லாம் ஒருதாய் பெற்ற
நல்மக்க ளாய்வாழ்ந்த தெண்ணிப் பாரீர்

இந்தமண்ணிற் பிறந்தவர்கள் அனைத்துப் பேரும்
இந்தமண்ணின் சொந்தங்கள் தாமே என்னும்
பந்தம்எண்ணும் பண்பிருந்தால் வேற்றுமைகள்
பிறந்திருக்கா வாய்ப்பொழிந்தே போயிருக்கும்
வந்துற்ற இடர்களைந்து மாற்றந் தோன்றும்
வழிதேடும் வழியொன்றே இன்று நம்முள்
புந்தியுள்ள செயலாகும் அனைத்துப் பேரும்

- ஜின்னாஹ்

# புலவி

- த. கலாமணி

அரியணையில் வீற்றிருந்த நெடுஞ்செழியனின் உள்ளம் ஏனோ ஒரு நிலைப்பட மறுத்தது. முதல்நாள் நினைவுகள் அவன் நெஞ்சை அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

சபாமண்டபத்திலிருந்து எழுந்துசென்ற தன்தேவியை உடனடியாகக் கவனியாமல் விட்டுவிட்டோமே என்று அவன் மனம் ஒரு கணம் ஏங்கியது.

அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த அவள் எழுந்திருக்கும்போதே யாரும் பார்க்காதவாறு அவளின் கையைப்பற்றி அமர்த்தியிருக்கலாம். ஆனால் சபாமண்டபத்தில் கண்டுகளித்துக்கொண்டிருந்த ஆடலிலும் பாடலிலும் தான் அவன் தன்நிலை மறந்திருந்தானே.

ஒரு தருணம் தன் தேவியை அவன் திரும்பிப்பார்த்தவேளை தலைக்குக் கைகொடுத்தபடி அவள் அமர்ந்திருந்தாள். சாதாரணமான தலைவலியாயிருக்கும் என்றுதான் அவன் முதலில் நினைத்தான். ஆனால், அவள் எழுந்து சென்றவேளை அவளின் சேடிப்பெண்களும் கூடவே புறப்பட, எல்லோரின் கவனமும் அவர்களை நோக்கி ஈர்க்கப்பட்டபோதுதான் அவனும் அதனைக் கவனித்தான்.

அவனுக்கு எல்லாமே விளங்கியது. அவனுக்குத்தான் தன்தேவியை நன்கு தெரியுமே. அவளுக்குத் தலைவருத்தம் எதுவுமில்லை என்பதை அவன் அறிவான். தன்மீது கொண்ட ஊடலினாலேயே அவள் அப்படிச் செல்கிறாள் என்பதை உடனடியாகவே அவன் அநுமானித்தான்.

அன்று என்னவோ அவன் தன் சிந்தையை முற்றாகத்தான் இழந்திருந்தான். ஆடல் அரங்கில் நாடகமகளிர் அற்புதமாகவே தமது ஆற்றலை வெளிப்படுத்தினர். ஆடலின்போது அம்மகளிரின் முகத்தோற்றம் தேவலோக மங்கையரை நினைப்பூட்டிற்று. ஆடலுக்கேற்ற பாடலின் வேறுபாடும் யாழிசையின் பயன்களும் அவன் உள்ளத்தை நன்றாகவே கவர்ந்தன. வழமைக்குச் சற்று மாறாகவே தன் தலையை அசைத்தும் பாராட்டுவார்த்தைகளை உதிர்த்தும் ஆடல் மகளிரை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான. விளைவு....?

கோப்பெருந்தேவியின் ஊடல் அவன் அறிந்தது தான். அந்த ஊடலின் பேறாய் அவர்கள் பெற்றுக்கொள்ளும் இன்பம் இருவருக்குமே இனிப்பது தான்.

அவளின் ஊடலைத்தணிக்க ஒரு சமயம் அவளின் சௌந்தர்யத்தை அவன் புகழ்ந்துரைப்பான். இன்னொரு சமயம் அவளின் சேவகத்திற்காகக் காத்திருப்பவன்போல் அவள் முன் மண்டியிடுவான். அவளுக்கு அவன் சொன்ன உறுதிமொழிகள் தான் எத்தனை! வழங்கிய பரிசுப்பொருள்கள் தான் எத்தனை எத்தனை!

ஊடல் தணித்து அவளை வசப்படுத்தும் அவனின் சமத்காரத்தை எண்ணி அவள் நாணுவாள். நாடாளும் மன்னன் தன்பெண்மையின் முன் பணியும் தன்மை கண்டு வியப்புறுவாள்.

அவள் ஊடும்போது பதிலுக்கு அவனும் சிலவேளைகளில் ஊடியதுண்டு. ஆனால் அது கத்திவிளிம்பில் நடத்தலை ஒத்தது என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். எந்த நேரத்திலும் வரம்பு மீறாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லையெனில் அதோ கதிதான்.

நேற்றைய தினமும் அதுதான் நடந்தது.

நெடுஞ்செழியன் ஒருமுறை தன் உடலைக் குலுக்கிக் கொண்டான். கோப்பெருந்தேவியின் ஊடல் தந்த வெப்பம் இன்னும் அவனுள் காங்கையாக வீசிக்கொண்டிருந்தது. கடந்த இரவின் தனிமையை எண்ணி அவன் தனக்குள்ளேயே குமைந்து கொண்டிருந்தான்.

தன் மன்னவன் ஆடல் மகளிரிடத்து ஈர்க்கப்பட்டான் என்று ஊடல்கொண்டு சபாமண்டபத்திலிருந்து கோப்பெருந்தேவி நீங்கியவேளை அவனும் அம்மண்டபத்தினின்றும் நீங்கி, ஏவல் மகளிர் சிலருடன் அவளின் அந்தப்புரம் செல்ல விழைந்தான். ஆனால் அந்த நேரம் பார்த்துத்தானா பொற்கொல்லன் அவனை எதிர்கொள்ளவேண்டும்?

"மன்னர் மன்னா! ஒரு தாழ்மையான விண்ணப்பம்.
மகாராணியின் சிலம்பு கவர்ந்த கள்வன் என்
மனைக்கருகில் உள்ளான்...."

பொற்கொல்லனின் வார்த்தைகள் அவனுக்குத் தேன்வார்த்தன அவன் வேகமாகவே சிந்தித்தான்.

"இந்நேரம் களவுபோன என்தேவியின் சிலம்பும் கிடைத்து
விட்டால்... அவள் ஊடலின் தேவையை விரைந்து
நிறைவேற்றலாம்...."

தன் எண்ணத்தைச் செயலாக்க விரும்பிய நெடுஞ்செழியன் ஊர்காப்பாளரைக் கூவி அழைத்தான்.

"ஊர்காப்பாளரே, வாருங்கள்! இப்பொற்கொல்லன்
தெரிவிப்பது போல் என் தேவியின் காற்சிலம்பு அக்கள்வன்
கையதாகில் கொன்றச் சிலம்பு கொணர்க."

அவனுக்கு எதற்கும் பொறுமையில்லை. அவனுக்கு வேண்டியதெல்லாம் விரைவு. தன் தேவியின் ஊடலைத் தணிக்க விழையும் விரைவு. கட்டுக்கடங்காது வேகப்பாய்ச்சல் பாயும் அவன் மனக்குதிரையை இழுத்துப்பிடித்து நிறுத்துவதென்பது இனி இயலாத காரியம். ஆனாலும் அவன் சிந்தையில் ஒரு பொறிதட்டிற்று.

'அந்தப்புரம் நுழையுமுன் தேவியின் சிலம்பு கிடைத்துவிட்டால்..'

இந்த எண்ணம் தலைதூக்கியதுமே பாதையில் ஒரு கணம் அவன் புரவி இடறிற்று. அந்த இடறலில் சிலம்புக்காகச் சற்றுத்தாமதித்தான்.

இந்தத் தாமதமே நேற்றைய இரவின் தனிமைக்குக் காரணமானது என்று நினைத்துப்பார்த்தபோது, நெடுஞ்செழியனுக்கு ஊர்காப்பாளர்மீது கோபம் கோபமாக வந்தது.

"கையாலாகாதவர்கள்! கொடுத்த கருமத்தை விரைந்து
செய்யத் தெரியாதவர்கள்..."

கோபம் கொப்பளித்துக் கொண்டு வருகின்றபோதே கடந்த இரவுச் சம்பாஷணையும் நெடுஞ்செழியனின் செவிப்பறைகளில் ஓங்கி ஒலித்தது.

"தேவி! மன்னர் வந்திருக்கின்றேன்."

மன்னரின் அறிவிப்பைக்கேட்டு. சேடியர் கோப்பெருந்தேவியை விட்டு அகல முயன்றனர்.

"என்ன ஆச்சரியம்! அதற்குள்ளாகவா ஆடல் அரங்கம் முடிவுற்றது?"

"இல்லை தேவி! நின்நிலைகண்டு ஆடலரங்கை விட்டு விரைந்து வந்திருக்கின்றேன்..."

"என்ன! மன்னர் விரைந்து வந்திருக்கின்றாரா? அப்படியானால் சபா மண்டபத்திலிருந்து அந்தப்புரம் வருவதற்குள் மன்னரின் புரவி ஏதும் இடக்குப் பண்ணிற்றோ...?"

நெடுஞ்செழியனுக்குப் பொறுக்கமுடியவில்லை. சேடியர் அகன்றும் அகலாதநிலையில் அவர்களின் முன்னிலையிலேயே மன்னரை இகழ்வதென்றால்.. வெட்கக்கேடு!

பதிலுக்கு அவனும் வார்த்தைகளை அள்ளிவீசினான்.

"ராஜாவின் குதிரைக்கு இடக்குப்பண்ணத் தெரியாதுதேவி! ராணிக்குதிரைதான் இடக்குப்பண்ணுகிறதே..."

"ஓஹோ! ஆடல் மகளிரின் மயக்கத்தில் மன்னருக்கு ராணிக்கும் புரவிக்கும் வித்தியாசமே தெரியவில்லையோ.."

"இல்லை, ராணி! மயக்கமில்லை ஆனால் கலைஞரைப் புகழ்தல் மன்னர் கடன்தானே..."

"இருக்கலாம் அதற்காக, அருகில் தேவி இருப்பதையும் மறந்து அப்படியா ஆகாரமும் ஊகாரமும் கொட்டுவார்கள்?"

"கலை, நயத்தற்குரியதுதானே...மன்னர்க்குத்தெரியுமா மகாராணி பொறாமைத்தீயில் வேகுவாரென்று..."

வார்த்தைகளை அளந்து கொட்டவேண்டும் என்ற முன் எச்சரிக்கையும் நெடுஞ்செழியனுக்கு எழாமலில்லை. ஆனாலும் ஊடலில் இது சகஜமே என்று நினைத்தான்.

கோப்பெருந்தேவியால் தாங்க முடியவில்லை. பொறாமைத்தீயில் அவள் வேகுவதாக மன்னன் சொன்னதும் விம்மத்தொடங்கினாள்.

நெடுஞ்செழியனுக்கு சங்கடமாகிப் போய்விட்டது. அவளை எடுத்தணைத்து ஆறுதல் சொல்ல எண்ணி அருகில் நெருங்கினான்.

"கிட்டநெருங்காதீர்கள்!"

கோப்பெருந்தேவி ஊடல் மயக்கம் தெளிந்து சீறினாள்.

இப்போது அவனின்முறை. அவள் கோபம் நீக்குவதற்கு ஏதாவது சொல்லியாக வேண்டும். ஊடல் மயக்கம் விலகாத நிலையிலேயே அவன் குழறினான்.

"தேவி! காணாமற்போன உனது காற்சிலம்புகிடைத்ததாகப் பொற்கொல்லன் சொன்னான். அதனாற்தான் சற்றுத் தாமதிக்க நேர்ந்தது..."

யாருக்கு வேண்டும் உங்களது சிலம்பு? வேண்டுமானால் அந்த ஆடல்
நங்கையருக்கு அணிவித்து அழகுபார்க்க வேண்டியது தானே..."

சொல்லியதோடு மட்டும் நின்றுவிடாமல், மஞ்சத்தைவிட்டெழுந்து சேடியர் பக்கமாக அவள் விரைந்து சென்றாள்.

அவனுக்கு ஒன்றுமே செய்யமுடியவில்லை. தூக்கமுமின்றி இரவை ஏகாந்தமாய்க் கழித்தான்.

காலை அரசவைக்காக அரியணையில் அமர்ந்திருக்கின்ற இவ்வேளையிலும் நெடுஞ்செழியனின் நெஞ்சை நேற்றைய நிகழ்வுகள் அரித்துக்கொண்டிருந்தன. ஊடல் வரம்பு மீறியது எக்கட்டத்தில் என்று அவன் எண்ணிப்பார்க்கத் தலைப்பட்டான். அவ்வேளை திடீரென எழுந்த வாழ்த்தொலிகேட்டு அத்திசை நோக்கினான்.

"ஈண்டு நீர் வையம் காக்கும் பாண்டியன் பெருந்தேவி வாழ்க!"

அணிகளையும் அழகியகலன்களையும் ஆடைகளையும் வண்ணச் சாந்தினையும் மகளிர்சிலர் ஏந்திவர, குற்றேவல் மகளிர் நெருங்கிவர, முதுமகளிர் பலர் வாழ்த்துக்கூற, மகளிர்புடை சூழ வந்துகொண்டிருந்த கோப்பெருந்தேவியைக் கண்டு மன்னன் மனம் மகிழ்ந்தான்.

அவனுக்குத்தன் கண்களையே நம்பமுடியவில்லை. நேற்றைய சம்பவங்களினால் மகாராணி அரசவைக்கு வராமல் இருந்து விடுவாளோ என்று இதுவரை இருந்த தவிப்பு அவளின் வருகையைக் கண்டு அடங்கியதுமே பேருவகை கொண்டு அவளை அவன் நோக்கினான்.

கோப்பெருந்தேவியின் கண்களில் இப்போது கோபம் தெரியவில்லை, சோகம் தெரிந்தது. அவளின் கண்களின் சோர்வைக்கண்டு, அவளும் இரவுத்தூக்கமின்றி உழன்றிருப்பாளோ என்று அவன் எண்ணினான்.

அரசவை நெறிமுறைப்பிரகாரம் மன்னனுக்கு வணக்கமும் வாழ்த்தும் சொல்லி அவள் அவன் அருகமர்ந்தாள். அவன் அவளின் கண்களையே துருவி நோக்கினான். அவனின் பார்வையின் ஊடுருவல் அவளுக்கு விளங்கியது. தன் கண்களின் கலக்கத்துக்குக் காரணமாய் அமைந்த, முதல்நாள் இரவில் தான் கண்ட தீய கனவின் தன்மையை அவள் எடுத்துரைத்தாள்.

அவன் எல்லாவற்றையும் பொறுமையாய்க்கேட்டான். குலவழக்கில் தீயகனவுகளை அலட்சியம் செய்யும் மரபு இல்லை என்பது அவனுக்குத் தெரியும், ராஜாங்க விசாரணை முடிந்ததும் நிமித்திகனை அழைத்து கனாத்திறம் பற்றிக் கேட்டறிய வேண்டுமென முடிவுசெய்து அவன் அமைதியுற்றான். அந்த அமைதிக்கும் பங்கம் வந்தது.

அலறிப் புடைத்துக்கொண்டு தன்முன் விழுந்தடித்து ஓடிவந்து நிற்கும் வாயிற் காவலனைக் காண அவனுக்குச் சினமாக வந்தது. அவன் ஆட்சியில் அது என்றுமே நிகழாதது. அதிர்ச்சியுடன் காவலனை அவன் நோக்கினான்.

"கொற்கை வேந்தே, வாழ்க!
தென்னம் பொருப்பின் தலைவ, வாழ்க!
பழியொடு படராப் பஞ்சவ வாழ்க!"

சொல்ல வந்த சேதியைச் சொல்லாமல் மன்னர் புகழ்பாடும் அக்காவலன் மீது

மதிப்புவரவில்லை, ஆத்திரம்தான் வந்தது. சேதியை விரைவாகக் கூறுமாறு சைகையாற் காட்டினான்.

"கொற்றவை அல்லள்,
பத்திரகாளியும் அல்லள்,
ஏக்கம் தரும் காளி அல்லள்;
துர்க்கையும் அல்லள்..."

காவலனின் பீடிகை அவனின் பொறுமையைச் சோதித்தது. வாயிற்காவலன் தொடர்ந்து அரற்றினான்.

"உள்ளத்தில் கறுவுகொண்டவளாய் கோபத்தோடு காணப்படும் அவள்
கணவனை இழந்தவளாம். கையிலே பொற்சிலம்பு பொன்றோடு நம்
வாயிலின்கண் நிற்கிறாள் வேந்தே..."

காவலன் கூறிய செய்தி அவனுக்கு வியப்பைத் தந்தது. 'கையிற்சிலம்போடு நிற்கின்றாள் எனின் அவள் யாராக இருக்கும்? என ஐயுற்றவன், அவளை அழைத்து வருமாறு ஆணையிட்டான். வாயிற் காவலனின் வருகையால் கோப்பெருந்தேவி கலவரப்பட்டிருப் பாளோ என்ற உணர்வு உறுத்த அவளை அவன் திரும்பி நோக்கினான். அவள் கண்கள் கலக்கத்தைக் காட்டி நின்றன. அவளுக்கு என்ன ஆறுதல் மொழி கூறலாமென அவன் ஆழ்ந்து சிந்திப்பதற்குமுன், அரசவையுள் கையிற் சிலம்போடு இளம்பெண்ணொருத்தி வந்து கொண்டிருந்தாள். அவளைக் கைகாட்டி நிறுத்தி அவன் வினவினான்.

"அழுதுகொண்டு வந்துநிற்கும பெண்ணே, யார்நீ?"
"தேரா மன்னா, செப்புவது உடையேன்"

நெடுஞ்செழியன் அதிர்ந்தான். மன்னவனை ஒருகுடிமகள் 'ஆராய்வு இல்லாதவனே' என்று விளிப்பதென்றால்... சினம் மூண்டெழுந்த போதும் அரசவையில் தன் கடமைப்பொறுப்பை உணர்ந்து அவளைச் செவிமடுத்தான்.

"புறா ஒன்றின் துயர்தீர்த்த சிபிச்சக்கரவர்த்தியும் ஒரு பசுவின்
கன்றைக் கொன்றமைக்காக நீதிசொல்ல தன் அரும்பெறற் புதல்வனை
தேர்ச்சில்லிலிட்டுக் கொன்ற மனுநீதி சோழனும் செங்கோல்
செலுத்திய புகார் நகரில் பிறந்தவள் நான்"

நெடுஞ்செழியனுக்கு எரிச்சலாக வந்தது. 'இவள் சோழ நாட்டவள், இவளுக்கு நம் பாண்டி நாட்டுப் பெருமை தெரியாது போலும்' என்று மனதிற்குள் கறுவினான்.

"மன்னா! புகார்நகரில் புகழுடன்விளங்கிய மாசாத்துவான் எனும்
வணிகனுக்கு மகனாகப் பிறந்து, பொருளீட்டி வாழ்க்கை
நடத்தலை எண்ணி நினதுமதுரைநகரில் புகுந்து, என் காற்சிலம்பை
விற்றல் காரணமாக நின்னிடத்துக் கொலையுண்ட கோவலன் மனைவி
கண்ணகி நான்...."

திடீரென்று நெடுஞ்செழியனுக்கு உணர்வில் ஏதோ ஒன்று உறைத்தது. தன் காதற்கிழத்தியின் ஊடல் தணிக்க, களவுபோன அவளின் காற்சிலம்பு கிடைத்ததே என்ற மகிழ்வில், அச்சிலம்பைப் பெற்றுக்கொண்டமுறையில் இரத்தக்கறை படிந்துவிட்டதோ என்று முதன்முதலாக நினைத்துப் பார்த்தான். சற்றுக் கலவரப்பட்ட நிலையிலும் அதனை மறைத்து அவளுக்கு நீதி கூறினான்.

"பெண்ணே! உன் கணவன் என் மனைவியின் காற்சிலம்பைத்
திருடினான் கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோன்மை
அன்று! அதுவே அரசநீதி!"

கண்ணகி சீறிச் சினந்தாள்.

"அரசநீதி உரைக்கும் மன்னா! நீ நீதி வழங்குமுன்
தீர விசாரித்து அறிந்து கொண்டிருக்கவேண்டும். என்கால்
பொற்சிலம்பு மாணிக்கக் கற்களைப் பரல்களாகக்கொண்டது!..."

நெடுஞ்செழியனுக்கு அவள் மொழிந்ததில் ஒரு பிடி கிடைத்தது. கோவலனிடமிருந்து பெற்ற சிலம்பைக் கொண்டுவருமாறு ஏவலர்க்குக் கட்டளையிட்டான். அவர்கள் விரைந்து தொழிற்பட்டனர்.

ஏவலர் கொணர்ந்த சிலம்பை கண்ணகியின் முன் வைத்து நெடுஞ்செழியன் இறுமாப்புடன் உரைத்தான்.

"பெண்ணே! நீ நீதியை நிலைநாட்ட உதவும் மொழிபகன்றாய்
இதோ, இங்கிருப்பது உன் கணவன் வைத்திருந்த என் மனைவியின்
காற்சிலம்பு என் மனைவியின் சிலம்பு முத்துப் பரல்களைக் கொண்டது"

தான் அணியும் காற்சிலம்பு கண்ணகிக்குத் தெரியாததா? விரைந்து அதனை எடுத்தாள். தன் முறைப்பாட்டை நிறுவ எண்ணி, அவன் முன் நிலத்தில் அச்சிலம்பை வீசி எறிந்தாள்.

எல்லோரின் கண்களும் சிலம்பை மொய்த்தன.

"மாணிக்கப் பரல்கள்!"

அவற்றுள் ஒன்று நெடுஞ்செழியனின் வாயருகே முகத்தில் பட்டுத் தெறித்துக்கீழே வீழ்ந்தது.

அவன் திடுக்கிட்டு அதிர்ந்தான் செங்கோலைப் பற்றியிருந்த அவன்கை அதிலிருந்து மெல்ல நழுவியது. உள்ளம் குமுறியது.

'பொற்கொல்லன் பொய்யுரை கேட்டு நீதி தவறிய யானோ அரசன்?
இல்லை, கோவலன் சிலம்பை எனதாகக் கொண்டதால் நானே கள்வன்!

நெடுஞ்செழியனுக்கு உடலும் உள்ளமும் பதறின. பாண்டிநாட்டு ஆட்சிக்கு தன் காரணமாகப் பழிநேர்ந்து விட்டதே' என்று துடித்தான். இவ்வாறு நிகழ என்ன காரணம் என்று விரைந்து சிந்தித்தான். அவன் சிந்தையில் தீப்பொறி ஒன்று பறந்தது. அண்டகோடிப் பிரகாசமாய் அது வெளிச்சம் காட்டியது.

"கெடுக, என் சிந்தை'

வெட்கத்தை விட்டு அவன் உரத்துக் கூவ நினைத்தான். ஆனாலும் முடியவில்லை. அவனுள்ளேயே அவ்வார்த்தைகள் அடங்கிப் போயின. தனக்குத்தானே தண்டனை விதித்துக்கொண்டு எழுந்து நின்று உரைத்தான்.

"கெடுக. என் ஆயுள்."

இதய அதிர்ச்சியில் மாய்ந்து வீழ்ந்த மன்னனைக் கண்டு அனைவரும் பதறினர். □□□

# நேர்காணல்



## பேராசிரியர் சி. மௌனகுரு

**சந்திப்பு - க.பரணீதரன்**

நாடகவியலாளரும் பேராசிரியருமான கலாநிதி.சி.மௌனகுரு அவர்கள் ஈழத்துத் தமிழ் அரங்கியல் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றி வருபவர். நவீன நாடகமரபின் இன்றியமையாத ஓர் அங்கமாக கூத்துமரபினை இணைத்தவர் இவர். ஆட்ட மோடிமையை கல்வி அரங்குக்குக் கொண்டு சென்று வழமையான மோடிமைக்கு அப்பாலான ஆட்ட அரங்காக்கிய வகையில் கூத்தின் ஆட்டத்தையும் அரங்கின் நாடகத்தன்மையையும் ஈழத்தின் நாடகத் தன்மையையும் ஈழத்தின் சிறுவர் அரங்கில் இணைத்துள்ளமை இவரது முக்கிய பங்களிப்பாகும். இலங்கையின் மிகச்சிறந்த நாடகவியலாளரான பேராசிரியர் சி.மௌனகுருவுடனான இந்நேர்முகத்தைப் பதிவு செய்வதில் "ஜீவநதி" மகிழ்ச்சிகொள்கிறது.

**1: நீங்கள் நாடக உலகை நாடக் காரணம் என்ன?**

சிறு பராயத்தில் அவ்வுலகில் ஏற்பட்ட ஒரு கவர்ச்சி அதில் ஈடுபடுவதால் கிடைத்த பிரபல்யம். நடுப்பராயத்தில் அதனூடாக மக்களுடன் நேரடியாக நிறையப் பேசலாம் என்ற ஆர்வம் வயது போன நிலையில், அது காட்டும் மனித குணாம்சங்கள் பற்றிய ஆழமான புரிதல். எல்லாவற்றிற்கும் மேலாக நாடக மூலம் கிடைக்கும் அற்புதமான மனித உறவுகள்.

**2: நாடக உலகில் உங்களது பங்களிப்பு அளப்பரியது. அவற்றைப் பற்றிக் கூற முடியுமா?**

அப்படியா? அளப்பரியது என்ற வார்த்தை மிகப் பெரிய வார்த்தை. அப்படிச் சொல்லக் கூடாது. என் நாடகப் பங்களிப்பு பற்றி நான் கூறுவதை விட மற்றவர் கணிப்பதுதான் சரியானது என்று கருதுகிறேன்.

**3: கூத்துக்கள் அழிந்து வருகிற இக்காலகட்டத்தில் மட்டக்களப்பில் கூத்துக்கள் பேணப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இது பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?**

ஈழத்துத் தமிழர் மத்தியிலே 17ம் நூற்றாண்டு தொடக்கம் 20ம் நூற்றாண்டு முற்பகுதி வரை மிகப் பிரபலமாக இருந்த அரங்க வடிவம் கூத்து. அக்காலச் சமூக அமைப்புக்கும் செயற்பாட்டுக்கும் கூத்துக்குமிடையே நெருக்கமான தொடர்பு இருந்தது. கூத்து ஒரு வகையில் சமூக அரங்காகவே நாமறிந்த காலம் தொட்டு இருந்து வந்திருக்கிறது. சமூக ஒற்றுமை, சமூக அற ஒழுக்கக் கருத்துக்கள், சமூக, சாதி விழுமியங்களைப் பேணுதல், சமூக உறவுகள், சமூக அழகியல் என்பனவற்றையெல்லாம் கூத்து தந்திருக்கிறது. தனி ஒரு அண்ணாவியார் அதில் முதன்மை பெறினும் முழுச் சமூகமும் இணைந்து உருவாக்கும் ஓர் அரங்காகவே இரு

இருந்துள்ளது. எனினும் 20ம் நூற்றாண்டு, ஈழத்தின் சமூக அடித்தளத்தை உலுக்கியுள்ளது. ஆங்கிலக் கல்வி, சமூக மேனிலையாக்கம், தொலைக்காட்சி வருகை, நகரமயமாக்கம், உலகமயமாக்கம் என்பன பழைய சமூக அமைப்பைச் சின்னா பின்னமாக்கியுள்ளன. தொலைக்காட்சி உலகைக் கிராமத்துக்குள் கொண்டு வந்து விட்டது. இந்நிலையில் முன்னையப் போல கூத்துக்களைப் போடும் சமூக அமைப்பு இன்று இன்மையினால் கூத்துக்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. விடிய விடிய வட்டக்களரியைச் சுற்றி இருந்து கொட்டக் கொட்டக் கண் விழித்து கூத்துப் பார்க்கும் தலைமுறையினர் இன்று இல்லை. இன்றிருப்போர் வேறு தலைமுறையினர். கூத்துக்களின் அழிவு என்பது சமூக மாற்றத்தோடு பிணைந்துள்ளது. மட்டக்களப்பும் ஈழத்தில் ஒரு பகுதிதானே. இங்கும் இப்போது பழைய கூத்துக்கள் அழியும் நிலையில் தான். மட்டக்களப்பிலே கூத்துக்கள் பேணப்பட்டு வருகின்றன என்பதில் மிகச் சிறிதளவு உண்மையுமுண்டு. மட்டக்களப்பின் சில பகுதிகளில் நான் சொன்ன மாற்றங்கள் அதிகம் ஏற்படாத பகுதிகளில் இவை பழைய முறைப்படியே ஆடப்படுகின்றன. (அதிலும் பல மாற்றங்கள் வந்து விட்டன). இன்னும் சில வருடங்களின் பின் அங்கும் மாற்றங்கள் ஏற்பட்டு விடும். கூத்து முன்னய போல இல்லாது போய்விடும். ஆனால் அதன் வன்மைப்பாடு காரணமாக அது வேறு வகையான முறையில் வளர்வதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன.

4: பாரம்பரியக் கூத்துக்கள் அழிந்து விடாமல் பாதுகாப்பதற்குரிய வழிமுறைகளைக் கூறுங்கள்.

பாரம்பரியம் என்பது யாது? எதனை நாம் பாரம்பரியம் என்கிறோம். சில கூத்துக்களைப் பார்த்து விட்டுச் சிலர் இது பாரம்பரியம் இல்லை என்கிறார்கள். ஆனால் அவர்கள் போடும் கூத்துக்களைப் பார்க்கும் சிலர் இது பாரம்பரியம் இல்லை என்கிறார்கள். அப்படியானால் எது பாரம்பரியம்?

காலம் என்பது கறங்குபோல் சுழல்வது. இச்சுழற்சியில் எல்லாம் மாறும். மாற்றத்தில் ஏதோ ஒன்று அடி நாதமாக ஓடிக்கொண்டிருக்கும். அந்த அடிநாதம் அறாமல் தொடரும். அதனைத்தான் நாம் பாரம்பரியம் எனக் கூறுகிறோம் என்று நான் நினைக்கிறேன். கூத்தின் ஆடலும் பாடலும் கதையமைப்பும் பாரம்பரியத் தன்மையைக் காட்டும் சில குறியீடுகள். அதனை நாம் வளர்த்துக் கொண்டு சென்றால் பாரம்பரியத்தை அழிந்து விடாமல் பாதுகாக்கலாம்.

ஜப்பானில் கபுகி, நெர் என்பன அவர்களது பாரம்பரிய நாடகங்கள். ஆனால் நவீன வசதிகளுக்கியைய அவற்றை அவர்கள் புதுப்பித்துப் போடும் போது உலகம் வியந்து பார்க்கிறது.

வழிமுறைகள் ஆயிரம் கூறலாம். செயற்பாடுகள் தான் முக்கியமானவை. பரத நடனம் ஆரம்பத்தில் இருந்து பயில்வது போல நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணாக்கருக்கு கூத்தை வரன்முறையாக ஆரம்பத்திலிருந்து பயிலும் வாய்ப்பு ஏற்படுத்தப்படுவது இவற்றுள் ஒன்று. கூத்து என்பது வெறுமனே குதிப்பதோ, கத்திப் பாடுவதோ அல்ல. அது ஓர் அழகியற்கலை. அதன் ஆடல் அழகை அதன் பாடல் அழகை நம் சிறார்கட்கு நாம் சொல்லித் தர வேண்டும். அந்த அழகுதான் இளைய தலைமுறையை அதன்பால் ஈர்க்கும். அவர்களை ஈர்க்க வைத்து விட்டால் உலகையும் அதன்பால் ஈர்த்து விடலாம்.

**5: தாங்கள் ஒரு நடிகராகவும் திகழ்கிறீர்கள் என்ற வகையில் நாடகமொன்றில் பங்கேற்கும் நடிகருக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள் பற்றி விளக்குவீர்களா?**

மேடையில் நடிக்கும் போது கிடைக்கும் மகிழ்ச்சி நடித்துப் பார்த்தால் தான் தெரியும். பார்வையாளருடன் ஊடாடி அவர்களை உணர்வுமயப்படுத்தி அதனால் நாம் உணர்வுமயமாகி நிற்கும் அற்புத கணங்கள் அவை. இடர்ப்பாடு எப்போது ஏற்படுமெனில் நம்மோடு மற்ற நடிகர் வார்த்தைகளாலோ, உடல்மொழியாலோ முறையான தொடர்பு ஏற்படுத்தாதபோது அது பெரும் இடர்பாடாக இருக்கும். வெள்ளம் போல் பொங்கி வரும் உணர்வுகள் அடங்கி ஒரு செயற்கை நிலைக்கு மனம் வந்து விடும். பெரும் அலுப்பும் வந்து விடும்.

**6: மௌனகுருவின் நாடக பலம் அவரது ஆட்டத்திறன் எனப் பேரா. சிவத்தம்பி குறிப்பிடுகிறார். இது பற்றித் தங்கள் கருத்து.**

ஆட்டத்தை நடிப்பாக்கும் திறனை எனக்குள் வளரச் செய்தவர். பேரா. சிவத்தம்பிதான். இராவணேசனின் உதவி நெறியாளராக அவர் இருந்து எமக்கு நடிப்புப் பயிற்சி தந்தார். அந்தப் பயிற்சி எனக்குக் கந்தன் கருணையில் நன்கு கை கொடுத்தது. பக்தரின் போராட்டம் கந்தனின் ஆட்டமாகிவிட்டது என்று பத்தண்ணா கூட அது பற்றி தாசீசியஸ் எழுதிய இரை மீட்டலிற் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியரின் கருத்து அது. ஒவ்வொருவருக்கும் சுதந்திரமாகக் கருத்துக் கூற உரிமையுண்டுதானே.

**7: இன்று பல்கலைக்கழகங்கள் மத்தியில் ஊமம் நாடகத் தயாரிப்புகள் அதிகமாக உள்ளன. இது ஆக்கபூர்வமாக உள்ளதா?**

ஊமம் நாடகத்தின் ஒரு பகுதியே தவிர அதுவே நாடகமாகி விடாது. இவை காளான்கள் போல வேகமாக வளரும் அளவு வேகமாக அழிந்தும் விடும். ஊமம் ஒரு திறன் அவ்வளவே.

**8: பிரயோக அரங்கின் வளர்ச்சி பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் குறிப்பிடுங்கள்.**

நாடகம் என்பது ஒரு கலை வடிவம். இதற்கு ஒரு நீண்ட கால வரலாறுண்டு. நாடகம் மனிதரை மகிழ்விக்க, யோசிக்க வைத்திருக்கிறது. அவ்வகையில் நாடகத்திற்குள் ஒரு பிரயோக அரங்கின தன்மையுமுண்டு. நாடகத்தை அறிவூட்டலுக்குப் பயன்படுத்திய பேட்டல் பிரஃட் கூட ஒரு வகையில் நாம் பிரயோக அரங்கியலாளர் எனலாம். இவர்கள் அனைவரும் நாடகத்தின் தன்மை கெடாமல் பிரயோக அரங்கேற்றினார்கள். இன்றைய பிரயோக அரங்கு அவ்வாறில்லை. பின்நவீனத்துவம், பின் காலனியம், பெண்ணியம், தலித்தியம் என்ற நவீன இயல்களின் வருகை மரபு வழி அம்சங்கள் சிலதை அசைத்து விட்டன. நியம அரங்கு அதற்கு விதிவிலக்காகுமா? பாதிக்கப்பட்ட மக்கள் சிறைச்சாலைக் கைதிகள், மன நோயர்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று உதவி தேவைப்படுவோரை இனம் கண்டு பிரயோக அரங்கு இன்று செயற்படுகிறது. பிரயோக அரங்கியலாளர் சமூக அக்கறையும் பொறுப்புணர்வும் கொண்டவர்கள். அவர்கள் மீது எனக்கு மிகுந்த மரியாதையுமுண்டு. எனினும் அரசு சாரா நிறுவனங்களின் ஆக்ஞைகளுக்கியைய ஆடும் பொறுப்பற்றவர்கள் சிலரைக் காணும் போது பெரு வெறுப்பும் ஏற்படுகிறது.

**9: உங்களது நாடகங்கட்கான பார்வையாளர்களின் எதிர்வினை பற்றிக் கூறுங்கள்.**

கடந்த 45 வருடங்களாக நாடக உலகுடன் எனக்குத் தொடர்புண்டு எனது நாடகப் பிரவேசம் என்னுடைய 5வது வயதில் ஆரம்ப பாடசாலையில் ஆரம்பமானது. 20 வயது வரை இடை நிலைப் பாடசாலையில் 25 வயது வரை பல்கலைக்கழகத்தில் 40 வயது வரை மக்கள் மத்தியில் 40 வயதுக்குப் பின்னர் நான் நடிப்பதை விட நாடகங்களை நெறியாள்கை செய்யத் தொடங்கி விட்டேன். கூட்டு மொத்தமாக பார்த்தால் எனது நாடகத்தின் பார்வையாளர்கள் பாடசாலை மாணாக்கர், பல்கலைக்கழக மாணாக்கர், பொதுமக்கள் என விரியும். யாழ்ப்பாணத்தில் புதியதொரு வீட்டையும், சங்காரத்தையும் மிகமிகச் சாதாரண மக்கள் மத்தியில் கொண்டு சென்றோம். அவர்கள் மத்தியதர வர்க்கத்தினரல்ல. இவர்கள் அனைவரதும் எதிர் வினைகளை மீள நினைத்துப் பார்க்கிறேன். நம்பிக்கையும், மகிழ்ச்சியும் வருகிறது. எனது நாடகங்கள் பெரும்பாலும் ஆடல் பாடல் சார்ந்தவை. ஒழுங்கானவை செய்நேர்த்தி அதிலுண்டு என்பர். அந்த நேர்த்திக்காக நான் நிறையப்பாடுபடுவேன். நேர்த்தி வரும்வரை மற்றவர்களையும் உழைக்கப்பண்ணுவேன். இதனால் எனது நாடகங்கள் மக்களுக்கு அறிவை மாத்திரமல்ல மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியிருக்குமென்றே நினைக்கிறேன். அவர்களின் எதிர் வினைகள் மகிழ்வு தருபவை.

**10 கூத்துக்களின் நவீனமயப்பாட்டால் உருவாகும் தயாரிப்புக்களின் தேவை உண்டா? அல்லது கூத்துக்களை அப்படியே கிராமத்தின் பொக்கிஷமாக இருக்க விடுவது அவசியமா? அல்லது கூத்து வடிவில் பழைய கதைகளை புதிய பார்வையில் (சாதி வேறுபாடு, பெண்ணடிமை, அரசியல்) படைப்பது பொருத்தமானதா?**

நிறையக் கேள்விகளை அடுக்கடுக்காக கேட்கிறீர்கள். ஒரே வசனத்தில் விடை கூறுவதானால், தேவை உண்டு, இருக்க விடுவது அவசியம், புதிய பார்வையில் படைப்பது பொருத்தமானது

இது ஒவ்வொன்றும் கூத்து பற்றியும் கலைபற்றியும் நாடகம் பற்றியும் அதில் ஈடுபடுவோரின் தத்துவச்சார்பு, அரசியல் சார்பு, சமூகச் சார்பு கொண்ட விடயங்களாகும். நாங்கள் இங்கு இவற்றைத்தான் செய்கிறோம். எமது பல்கலைக்கழக நாடக விழாக்களில் வெளியே வட்டக்களரி அமைத்து கிராமத்தின் பொக்கிஷங்களை அப்படியே மாணவர்கட்குக் காண்பிக்கிறோம். அதனை ஆடும் கலைஞர்களை அண்ணாவிமாரைக் கௌரவித்து மகிழ்கிறோம். அதே வேளை நவீனமயப்பாட்டிலும் எமக்கு நம்பிக்கையுண்டு. பழைய கதைகளை புதிய வடிவில் 1960களிலிருந்து அளித்து வருகிறோம். 2004 இல் மேடையேறிய இராவணேசன் யுத்தத்தை எதிர் கொண்ட வீரன் ஒருவனின் மன உணர்வுகளையும், போராட்டங்களையும் சித்திரிக்கும் ஒரு நாடகமாகும். 1969ல் மேடையேறிய சங்காரம் மனித குலத்தை பீடித்த சாதி, நிற, இன வர்க்க மதபேத அரக்கர்களை தொழிலாளர் தலைமையில் மக்களும் புத்திஜீவிகளும் இணைந்து தொழிற்பட்டுச் அவ்வரக்கர்களைச் சங்காரம் பண்ணும் நாடகமாகும்.

இவையெல்லாம் கூத்தின் அடியாக எழுந்த புதிய படைப்பு. கூத்தைக் கெடுக்கிறேன் என்ற குற்றச்சாட்டும் எனக்குண்டு. நான் கூத்தைக் கெடுக்கவும் இல்லை.

கூத்தை வளர்க்கவும் இல்லை. கூத்தின் அடியாகப் புதிய வடிவங்களைத் தேடுகிறேன். அது ஒரு Creative Pleasure. படைப்பு மகிழ்ச்சி. அதைச் சிலரால் தான் புரிந்து கொள்ள முடியும்.

**11: சடங்கின் அடியாகவே நாடகம் தோன்றியது எனப்படுகிறது. இது பற்றித் தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

இதுபற்றி மேற்கு நாடுகளில் நிறையவே ஆய்வுகள் நடந்துள்ளன. அண்மைக்காலமாக தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் தமிழ் நாடகங்களின் மூல வேர்களைச் சடங்குகளில் காணும் வகையில் குறிப்பிடத் தக்க சில ஆய்வுகள் வந்துள்ளன. பேரா. சிவத்தம்பியின் தமிழ் நாடக ஆய்வு இவற்றிற்கெல்லாம் முன்னோடி ஆய்வாகும்.

சடங்கு மனித வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உருவானதாகும். சடங்கிற்கு முற்பட்ட வாழ்வும் மனித குலத்திற்கு இருந்துள்ளது. தான் கண்ட ஒரு மிருகத்தைச் செய்கை மூலம் மற்றவருக்குக் கூறும் போதே நடிப்புத் தோன்றி விடவில்லையா? எப்படி ஒரு மிருகத்தைப் பிடிக்க வேண்டும் என்று புராதன மனிதர்கள் கூட்டாகச் செய்து பார்க்கையில் ஒரு நாடகம் தோன்றி விடவில்லையா? எனினும் சடங்குகள் தோன்றிய பின்னரே அதில் ஆடல் பாடல் அபிநயம் இசை ஒப்பனை பார்வையாளர் பங்கேற்பு என்பன அதிகம் இடம் பெற்றமையினால் சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது என்பது பிரபல்யமாகி விட்டது. எனது மட்டக்களப்பு மரபுவழிநாடகம் புத்தக உருவில் வந்த போது தமது கோயிற் சடங்குகளை நாடகம் போல இருக்கிறது என்று சொன்னேன் என்று கோபப்பட்டு என்னை நீதிமன்றத்திற்கு இழுக்கக் கூட சிலர் நினைத்தமை இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. நாடகத்தின் தொட்டில் மாத்திரமன்று சிற்பம், ஓவியம், கட்டிடம் இசை, நடனம் எல்லாவற்றினதும் தொட்டில் சடங்குகள் தான். அதிலும் சமயச் சடங்குகள் தான். சமயச் சடங்குதான் எல்லோரையும் இணைக்கும் பெருவிழா.

**12: தமிழ் நாடக வளர்ச்சிக்கு நீங்கள் கூற விரும்பும் ஆலோசனைகள் என்ன?**

தமிழ் நாடக்காரர்கள் கிணற்றுத் தவளைகளாக இருக்கக் கூடாது. நமது பாரம்பரியத்தில் ஆழமான பற்றுறுதியும், பிடிப்பும் கொள்ளும் அதே வேளை வளர்ந்து விட்ட உலக நாடகப் போக்குகளையும் அதன் பரிமாணங்களையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். மரபிலே காலூன்றி புதியதை நோக்கிச் செல்ல வேண்டும். அப்போதுதான் உலகத் தரத்துக்கு நாமும் ஏதும் செய்ய முடியும்.

குழுச் சண்டைகளையும் மற்றவர்களைக் குறை சொல்லிக் கொண்டே இருப்பதையும் விடுத்து அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும்.

நாடகச் சாதிக்குள் எந்த வித பேதமும் இருக்கக் கூடாது. இத்தனைக்கும் மேலாக நாடகத்தைப் படித்து அறிவதுடன் மேடையில் நிகழ்த்தவும் வேண்டும். நாடகம் பற்றிப் பேசும் ஆயிரம் அறிஞரை விட நாடகம் போடும் 5 கலைஞர்களை நான் அதிகம் மதிப்பேன். ஆனால் அந்த ஐந்து கலைஞர்களும் நான் மேற்சொன்ன நாடக அறிவு பெற்றவர்களாயிருக்க வேண்டும். இறுதியாகச் சொன்னால் நம் நாடகக் கலைஞர்கட்கு இருக்க வேண்டியவை

உழைப்பு, உழைப்பு, உழைப்பு.

அர்ப்பணம், அர்ப்பணம், அர்ப்பணம். □□□

# பிரயோக அரங்கு - அறிமுகம்

**கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்**

அரங்க வரலாற்றில் காலந்தோறும் வெவ்வேறு அரங்குகள் செயல்பட்டு வந்துள்ளன.அந்த வகையில் மரபுசார் அரங்குகளை அந்தந்த நாடுகளின் அல்லது பிரதேசங்களின் பெயரால் அழைப்போம். கிரேக்க அரங்கு, சீன அரங்கு, யப்பானிய அரங்கு, இந்திய அரங்கு , ஐரோப்பிய அரங்கு என வருபவை அவை. ஆனால் புதிய கலாசாரத்துக்கும் புதிய சிந்தனைகளுக்குமேற்ப வேறு பல அரங்குகளும் மேற்குறிப்பிட்ட நாடுகளில் வந்து சேர்ந்தன.அது மட்டுமல்லாது யதார்த்த அரங்கு மோடிமைப்படுத்தப்பட்ட அரங்கு, தெருவெளி அரங்கு, சமூக மாற்றத்துக்கான அரங்கு எனப் பலவும் செயல்பட்டன. அந்த வகையிலே புதிய அரங்க வடிவமாக இன்றைய அரங்கிலே வந்து சேர்ந்திருப்பது பிரயோக அரங்கு ( Applied Theatre ) ஆகும். இந்த பிரயோக அரங்கு அல்லது பிரயோக நாடகம் (applied Drama) என்ற சொற்பிரயோகம் 1990களில் நாடக ஆர்வலராலும் செயற்பாட்டாளர்களாலும் புழக்கத்துக்கு கொண்டு வரப்பட்டது.இந்த அரங்கு முக்கியமாக தனிநபர்களையும் (individuals) குழுமங்களையும் (community) சமூகங்களையும் (Societies) அடிப்படையாகக் கருத்திற் கொண்டது.கல்விஅரங்கு, கல்வியில் அரங்கு சுகாதாரக்கல்வியில் அரங்கு, சிறைச்சாலைகளில் அரங்கு, குழும அரங்கு எனப்பல இதற்குள் செயல்படுகின்றன. பிரயோக அரங்கு பொதுவாக தனிநபர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும் சிறந்த சமூகங்களை உருவாக்குவதற்கும் நாடகத்தை உபயோகிப்பதாகும் என்பர் ஜூடித் அக்ரொய்ட்(Judith Ackroyd).

பிரயோக அரங்கு பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன.

1. நாடகத்துக்காகத் தனிநபர்களுடன் அல்லது விசேட குழுமங்களுடன் தொழிற்படும் போது இடையிடுதல் (intervention), தொடர்பாடல் (Communication), வளர்ச்சி (Development), வலுவூட்டல் (empowerment) வெளிப்படுத்துகை (expression) என்பவற்றைக் கொண்டிருக்கும் *இது மன்செஸ்டர் பல்கலைக் கழகத்தினால் இன்னும் வளர்த்தெடுக்கப்பட்டது.*

2. Applied theater researcher என்ற அவுஸ்திரேலிய மின் சஞ்சிகை(online journal ) மரபுசாராப் பின்புலங்களில் இயங்கும். குழுமத்தில் அரங்கு, வணிகத்திலும் தொழிற்சாலைகளிலுமான அரங்கு, அரசியற் செயற்பாட்டிலும் விவாதத்திலுமான அரங்கு, வாணாட்கல்விக்கும் கற்றலுக்குமான அரங்கு எனக்கூறும்.

இந்த அரங்கின் தன்மைகள் ஏனைய அரங்குகளில் இல்லாமலில்லை என்பதையும் கணக்கில் எடுக்கவேண்டும்.பிரயோக அரங்கு பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது. *மரபு சாரா செற்றிங்குகளில் நிகழ்த்தப்படும்.அத்துடன் விளிம்பு நிலைப்பட்ட சமூகக் குழுமங்களைச் சேர்த்து நிகழ்த்தப்படும் அரங்கு. இது பொதுமக்களின் கல்வி, குற்றவியல் நீதி , பாரம்பரிய பிரதேச விளக்கம் , அபிவிருத்தி பொதுசனப் பண்பாடு ஆகிய சமூக பண்பாட்டுக் கொள்கை சார் விடயங்களை கவனத்தில் கொள்கின்றது. .*

அது மட்டுமல்லாது அது கல்வி அரங்கின் ஒருபகுதியாகும்.

1.இது எழுத்துருவிலும் புதிதாக்கத்திலும் அதன் அளிக்கையிலும் பயிற்சிப் பட்டறைத் தன்மையைக் (workshop) கொண்டிருக்கும்.

2.எல்லா மாணவரையும் ஆகக் குறைந்தது அதன் அளிக்கையின் போது என்றாலும் பங்குபற்ற வைக்கும்.

3. பாரம்பரியமான கருவிகளையும் புதிதாக உருவாக்கிய நாடக மரபுகளையும் உள்ளடக்குதல் . குழுவின் அத்தனை பேரும் பங்குபற்றல் பொறுப்பெடுத்தல்

4.இவ்வரங்கினூடாக கல்வி இலக்குகள் அடையப்படல்

5.குறிப்பிட்ட வயதினர்க்காக(குழந்தைகள், கட்டிளமைப் பருவத்தினர் வயோதிபர்)குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்காக நிகழ்த்தப்படுதல். 6.மாணவரின் கேள்விகளையும் பிரச்சினைகளையும் எழுப்ப இடமளிப்பது. 7 மாணவர் தமது பொறுப்பை தாமே ஏற்குமாறு வடிவமைக்கப் பட்டிருத்தலும் ஆசிரியரின் தேடுதல் அளவுக்கு மாணவரும் தேடுதற்கு வலுவூட்டப்பட வழியேற்படுத்தல்

பிரயோக அரங்கென்பது ஒரு விசேட பின்னணி அல்லது சந்தர்ப்பத்தில் விசேட பார்வையாளர்களுடன் ஒரு விசேட செற்றிங்கி் (Setting ) நடத்தப்படுவது. (அதாவது அங்கு பாரம்பரிய மேடை இருக்காது. விசேட பிரச்சினை அதில் கையாளப்படும். உதாரணமாக இடம்பெயர்ந்தோரினை மீள்குடியேற்றுவது பற்றியதாக.அல்லது குடிப்பழக்கத்தின் கேடுகளைச் சொல்வதாக அல்லது சூழல் மாசுபடல் தொடர்பாக இருக்கலாம்.

இவ்வரங்கில் பார்வையாளரின் பங்களிப்பு மிகவும் அவசியமானது எல்லாப் பார்வையாளரும் பார்வையாளராகத் தொடர்ந்து இருக்க மாட்டார்கள்.தாங்களும் இத்தயாரிப்பில் சுறுசுறுப்பாக இணைந்துவிடுவர்

பிரயோக அரங்கு பற்றி கவனஞ்செலுத்தும் போது அவ்வரங்கில் பேசப்பட வேண்டிய பிரச்சினை அல்லது விடயங்கள் பற்றிய தெளிவு இருக்கவேண்டும்.பிரயோக அரங்கு வெறுமனே பொழுது போக்காகவோ மகிழ்ச்சிக்காகவோ இருக்க முடியாது.இவ்வரங்க அளிக்கையின் போது சில பார்வையாளர் பங்குபற்றுவதில்லை. காரணம் தமக்கு நடிக்கத்தெரியாது என நினைப்பது தான். ஆனால் அவ்வரங்கு நடிப்பை எதிர்பார்க்கவில்லை. அது குறிப்பிட்ட பிரச்சினை பற்றிய மக்களின் (பார்வையாளரின் ) கருத்தை அல்லது புலக்காட்சியையே எதிர்பார்க்கிறது.அதனால் பிரயோக அரங்க அளிக்கையாளர்கள் தமது நாடகத்திற்கென எடுத்துக்கொண்ட குறிப்பிட்ட கருப்பொருள் பற்றிய பார்வையாளர்களின் முன்எண்ணப் பதிவுகளை நீக்கக்கூடிய வல்லமை யுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

இந்த அரங்கின் களம் நிச்சயமாக பாரம்பரியமான களமல்ல.ஒருமுதியோர் மடமாகவோ அனாதை விடுதிகளாகவோ பாடசாலை களாகவோ சிறைச் சாலைகளாகவோ இருக்கலாம் அதனை திறமைவாய்ந்த பயிற்று விப்பாளர்கள் அக்குழுமத்துப் பங்கேற்பாளர்களுடன் நடத்துவர்

**பிரயோக அரங்கின் பயன்பாடு.**

*1.சிறிய செய்தியைச் சொல்லப் பயன்படும். உதாரணம் : குழந்தைகளுக்கான சுகாதாரப் பழக்க வழக்கங்களை எடுக்கலாம் (பல் விளக்க வேண்டியதன் அவசியம் குழந்தைகள் பெரியோர் இதன் பார்வையாளராகவும் பங்காளராகவும் இருக்கலாம்.)Bob Elkinton என்பவர் ரயில் தண்டவாளத்தில் விளையாட வேண்டாம் என்ற செய்தியை பிரயோக அரங்கின் மூலம் பிரசாரம் செய்துள்ளார்.*

*2. உணர்ச்சி அலைகளைத் தூண்டக்கூடிய (sensitive) தகவல்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய உதவும். உதாரணமாக தமது அயலில் நடக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகம். வீட்டு வன்முறை போன்றவற்றை நேரடியாகக் கையாள்வதைவிட பிரயோக அரங்கின் மூலம் வெளிப்படுத்துவது. விவாதிப்பது. தீர்வுகாண்பது சுலபமாகும்.*

*3. சில விடயங்களை எடுத்துச்சொல்ல உதவும். (எயிட்ஸ்பற்றிய விழிப்புணர்வு)*

*4. ஒரு கருப்பொருளை வளர்த்துச்செல்ல அல்லது எடுத்துக் கொண்ட பிரச்சினை பற்றிய மக்களின் பிழையான மனப்பதிவுகளை மாற்ற உதவும். (பெண்கல்வி பற்றிய பிழையான மனப்பதிவை மாற்றலாம். சாதி பற்றிய மனப்பதிவு .விதி பற்றிய மனப்பதிவு. நம்பிக்கைகள் பற்றிய மனப்பதிவு என்பவற்றை மாற்றமுடியும்)*

பிரயோக அரங்கு ஒருவிடயத்தை பல முறையிலும் விவாதிக்கிறது. அதனால் குறிப்பிட்ட ஒரு பிரச்சினை பற்றிய ஆழமான பார்வையை அது கொண்டிருக்கும்

எனவே அதில் ஈடுபடும் நடிகர்கள் மிக அவதானமாக பிரச்சினைகளை விளங்கிக் கொள்பவர்களாக் மக்களிடையே கொண்டு செல்பவராக இருக்க வேண்டும். இலங்கையைப்பொறுத்தவரை தமிழில் நாடகங்களைத் தயாரிக்கும் போது முக்கியமாக பாடசாலை நாடகங்களைத் தயாரிக்கும் போது குழந்தை ம.சண்முகலிங்கம் மாணவர்களுடன் உரையாடி அதனூடாக அவர்களின் பிரச்சினைகளை நாடகமாக்குவதை மேற்கொண்டவர். சிதம்பரநாதனால் கடைசியாக மேற்கொள்ளப்பட்ட நாடக முயற்சிகள் சில மக்களுடன் பேசி பிரச்சினைகளை வெளிப்படுத்தின. இவை முற்றுமுழுதாக பிரயோக அரங்கின் தன்மைகளைக் கொண்டிருக்காவிட்டாலும் மக்களின் பிரச்சினைகளை நாடகமாக்க முயலும் போது பிரயோக அரங்கின் தன்மைகள் தாமாகவே வந்து சேருவது தவிர்க்க முடியாததாகும் என்பதை இவை நிரூபித்தன.

இவ்வாண்டு அக்டோபர் மாத நடுப்பகுதியில் நடத்தப்படவிருக்கும் வடக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் ஆளுநர் விருது வழங்கி கௌரவிக்கப்படவிருக்கும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த தமிழ் அறிஞர்களான

* கந்தையா நடேசு (தெணியான் - இலக்கியம்)
* கந்தையா நாகப்பு (நாட்டுக்கூத்து)
* வைத்தீஸ்வரன் சிவசுப்பிரமணியம் (ஓவியம்)
* இராசா சுந்தரமூர்த்தி (நாதஸ்வரம்)
* முத்தர் நடராசா (பாகவதர்)
* லயன்ஸ் திலகநாயகம் போல் (சங்கீதம்)
* பேதுருப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (சிறுவர் இலக்கியம்)
* இலட்சுமண ஆச்சாரி கெங்காதராச்சாரியார் (சிற்பம்)
* ஆசை இராசையா (ஓவியம்)
* கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் (மொழியியல் ஆய்வு)

ஆகியோரை ஜீவநதி இதயபூர்வமாக வாழ்த்துகின்றது.

# மெல்லப் புரியும்

- சி. சிவாகர்

"கீழே - அடி மரத்தடியில் காய்க்கலாந்தானே... அதுகளை நம்பித் தானே எறும்புகள், பூச்சிகள், அணில் பிள்ளையள் எல்லா மிருக்குதுகள். மண்ணுக்குள்ளே அடி வேர் முனு முனுத்தது சூரியனையே உறிஞ்சிக் கொள்கிறேன் பார் என்று வானத்தை நோக்கும் பலாமரத்தின் காதுகளில் தெளிவாகவே கேட்டது.

"உச்சியில காய்க்கிறதுதான் நல்லது. கனக்க காய்ச்சுக்குலுங்குறன் என்று பெயர் எடுக்கலாம். அதுமட்டுமோ... பலதுகளை பார்க்கலாம். வானவில்த் தொங்குபாலம், நட்சத்திரக் காசுகள், மாளிகை நிலா..."

"என்ர பழத்தை தின்னவரும் காகங்களும் பிறபறவையளும் எனக்கு பலதைச் சொல்லுங்கள் இந்த மரத்தின்ரபழம் நல்ல ரேஸ்ட்டாம்."

"அந்தப் பறவையளின்ர கதையளை கேட்டாலே காணும்... இதுகளெல்லாம் உங்க - கீழ கிடைக்குமோ..."

"உதுகள் மரந்தாவுறதுகள், நீ இல்லாட்டாலும் அதுகள் வேற எங்கயாவது போகுங்கள். எம்மையே நம்பி எங்கட வேரடியில இருக்கிற எறும்புகள், வண்டுகள் எங்கபோகும் எண்டு என்ர அம்மா, அப்பா, அதுதான் நீங்கள் சொல்லுவிங்களே "அடிவேர்" அது என்னைப் பேசும். எறும்புகள் தானே புத்துவைச்சு நிலத்தை பண்படுத்துகள் அதுகளுக்கு பழம் குடுக்கிறதுதான் பண்பு எண்டு நியாயம் வேற சொல்லும். இப்படி அடிக்கடி எங்களுக்கை சண்டை வரும்"

அண்டைக்கும் இப்படித்தான். எனக்கும் அவையளுக்கும் சண்டை முத்திப்போச்சு

"அம்மா கத்தாதேங்கோ... உங்களுக்கொண்டும் தெரியாது. இருட்டுக்கை இருக்கிறனீங்கள் வெளி உலகம் தெரியாதனீங்கள் அதுதான் உந்த அற்பபிராணியளுக்காய் வாய் காட்டுறீங்கள்... நான் பேசிப்போட்டன்.

"ஓ...எனக்கொண்டும் தெரியாது தான் நான்தானே உன்னை பெத்து வளர்த்து ஆளாக்கி விட்டுவிட, அது சொல்லுது எனக்கொண்டும் தெரியா தாம்" அம்மா இப்படி என்னை பேசு வாண்டு நான் நினைக்கவே இல்லை.

நானும் விடவில்லை "நீங்கள் இல்லாட்டிக்கும் நான் நல்லாத்தான் வளர்ந்திருப்பன். என்ர நண்பர்கள் பனங்கத்தாளை குருவிச்சை அவையெல்லாம் தாங்களாத்தானாம் வளர்ந் தவையள்" என்று சொன்னன்.

"உங்களோட கதைக்கேலாது இருந்து பாருங்கோவன் நீங்கள் இல்லாமல் எப்படி நான் வளர்றனெண்டு"

*******

"ச்சி.. படிச்சு முடிச்சுப்போட்டு இஞ்சதானாம் டொக்டராய் வேலை செய்யோணுமாம். அப்பான்ர இம்சை தாங்கவே முடியலை. எங்கட சனம் பாவமாம்... சிங்கள டொக்டர்மார் கூட இஞ்ச வேலை செய்ய வருகினமாம். அது மட்டுமோ... சனத்தின்ர காசில தானாம் நான் படிச்சனான்... எப்படா படிப்பு முடியும் வெளிநாட்டுக்கு போகலாம்... அங்க போனால்த்தான் முன்னேறலாம். நல்ல பேரும், பணமும் சம்பாதிக்கலாம். இஞ்ச என்னதான் கிடக்குது...

தாங்கள் நல்லாத்தானே இருக்கிறம். என்னையும் வாவெண்டு நிக்கிறாங்கள் என்ர பிரண்டுகள்...

அப்பா என்ன சொல்லுறது.. நான் அங்கதான் போப்போறன்.

*******

"என்ன, ஒரே வெக்கையப்பா.. முந்தி

யெண்டா இதமா.. ஈரமா... மண்ணுக்க இருந்து அப்பா அம்மா ஏதோ அனுப்பு வினம் இப்ப அதையும் நான் வேண்டா மெண்டுட்டன். இந்த வெய்யில தாக்குப் பிடிக்கேலாது. இலையளும் உதிருதுகள். பிஞ்சுகளும் அரை குறையா வெம்பி விழுகுது. பழமும் முந்தினமாதிரி இனிப் பில்லையாம். அண்டைக்கு காகங்கள் பேசிக் கொண்டது காதை விட்டு இப்பவும் போமாட்டனெண்டுது. "பக்கத்தில புதிசு புதிசா இனிப்பான பெரிய பழமர இனங்க ளெல்லாம் நட்டுப்போட்டாங்களாம்... இந்த பிலாப்பழத்தைவிட அதுகள் நல்லா யிருக்குது. பார்க்கவும் வடிவா இருக்குது.. இனி அங்க தான் போவேணுமாம் எண்டு காகங்கள் சொல்லுதுகள்.

"எவ்வளவு கஸ்ரப்பட்டு, எங்கட யளுக்கும் குடுக்காமல் நான் தாற னென்டுறன். இதுகள் வேண்டாமாம்..."

"என்னதான் இருந்தாலும் மாற்றான் மாற்றான் தான். எங்கடையள் எங்கடையள் தான்.

"வீட்டுக்காரர் சொல்லுறது போல இனி கீழ் மரத்திலதான் காய்க் கோணும் அதுகள் என்ன வடிவா ஆசை ஆசையா தின்னுங்கள். அதை காணுறதை விட பெரியசந்தோசம் வேறையென்ன இருக்கப்போகிறது என்று எண்ணியபடி குனிந்து அடிமரத்தைப் பார்த்தது பலாமரம்.

- கீழே -

எங்கிருந்தோ வந்துமுளைத்த கொவ்வைச்செடியொன்று அடிமரத்தில் படர்ந்து கொத்துக் கொத்தாய் பூத்துக் கொண்டிருந்தது.□□□

## நூல் அறிமுகம்

***நூல்*** :- செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்



ஆசிரியர் :- சு.ஸ்ரீகுமரன்

விலை :- 100/-

***வெளியீடு*** :- சமூகவிஞ்ஞானமன்றம் பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தர பாடசாலை.


***நூல்*** :- எதுவரை (தமிழ் நாடகம், குறும்பட விமர்சனங்கள்



ஆசிரியர் :- சு.வரதன்

விலை :- 150/-

***வெளியீடு*** :- சண்முகலிங்கம் கல்வியியல் அரங்கு. (SET)




***நூல்*** :- மழை (நிருத்திய நாடகம்)

***ஆசிரியர்*** :- சி. மௌனகுரு

***விலை*** :- 180/-

***வெளியீடு*** :- விபுலம் வெளியீடு

# வாங்கிக் கட்டி வழி விடுதல்

ஆழம் தெரிந்துதான் அளந்தார்!
அதன் பாலம் உயர்ந்ததைச்!
சீலம் என நினைக்கவில்லை
பாலமோ அத்திவார மில்லாது
அசைவுடைய தெனப்
பார்த் தறிந்தும் ஓசையெழுப்பாது
ஒட்டுதல் காட்டிக் கொடுத்ததால்
கண்ட விரிசலிது விரவியது

ஒட்டி வாழ்தலில் உரசி நிற்பதை
பட்டழிந்த பின் பலமற்றதைப்
பார்த்த லவசியம்!
கட்டுமட்டில்லாக் கண்டவை
விண்டிடல் கால அளவுக்கு
உட்பட்ட செய்கையாம்
மட்டிடா விட்டுவிட்டால்
மடமை விழித் தெழும்!

மடமை விழித்திடின் சிதைவதோ
அறிவுடைமைதான்! அதையே
கடிகைமுத்துவை வாலைவாருதி
கடிந்தொழித்திட நினைத்ததில்
உமறுடனடி உதைத்து வீழ்த்திய
கதையும் இலக்கியம் கூறுமே!
சண்டித்தனத்தில் வாருதி
வாதிட்ட கதையே முடிந்தது!
மடமை மடமைதான்
வாங்கிக் கட்டிய பின்புதான்
வழி விடுவது நம் வழமை!

சிந்தனை யற்றுச் சிலையெழுப்பி
அந்தரத்திலாடும் அறிவீனர்கள்
சந்தியில் சத்தமிடுவதால்
உயர்ந்ததாய் எண்ணுவர்!
எண்ணம் பிழைத்ததும்
ஏறிய பக்கம் இறங்க முடியாமல்
அந்தரத்தில் நின்று கவுவர்!
நம்தரம் தெரிந்து உடனறிந்து
விழி பிதுங்கி வழிவிடுவர்!

- கவிஞர் ஏ.இக்பால்

# எந்த மொழி பேசினும்...

எந்த மொழியில் பேசினும்
கண்களால்
காவியம் பேசும்
காதல் மொழி புரிகின்றது
- காதலர்க்கு

எந்த மொழியில் பேசினும்
செல்லமாய்
பிஞ்சுகள் சிந்தும்
மழலை மொழி புரிகின்றது
- பெற்றோர்க்கு

எந்த மொழியில் பேசினும்
தேன்
குடிக்க ரீங்கரிக்கும்
வண்டின் மொழி புரிகின்றது
- மலர்களுக்கு

எந்த மொழியில் பேசினும்
பிரிந்தவர்
கூடும் வேளை
மௌன மொழி புரிகிறது
- சேர்ந்தவர்க்கு

எந்த மொழி பேசினும்
புரிந்து கொள்ள முடிகிறது
உண்மையின் மொழி மட்டும்
ஏன் புரிவதில்லை?

-விஸ்ணுமைத்திரேயி

# சித்தாந்தமும் சிந்தனா வாதமும்

சோசலிஷ ஆட்சியில் ஆடம்பரத்துக்கு இடமில்லை, ஒவ்வொருவரின் தேவைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற ஊதியம் என்பதும், எல்லாமே எல்லோருக்கும் சொந்தமானது என்பதும் சோசலிஷம் பற்றிய பாமரத்தனமான விளக்கம். ஆனால் மனித மனம் இயல்பாக ஆடம்பரப் பொருள்களுக்கு அங்கலாய்க்கும் என சரியாகவே மேற்குலக முதலாளிகள் புரிந்து வைத்திருந்தார்கள்.

ஆசி கந்தராஜா

கம்யூனிச கொள்கைகளின் கேள்வி ஞானத்தில், பொதுவுடமை சித்தாந்தம் பற்றி முழுதாக ஒரு புத்தகத்தைதானும் படிக்காத பலர், கம்யூனிச ஆட்சி நடக்காத நாடுகளிலே முதலாளித்துவம் வழங்கிய சுகபோக வாழ்வு வாழ்ந்துகொண்டு, தீவிர கம்யூனிசம் பேசுவதைக் கண்டிருக்கிறேன். கம்யூனிசம் பேசுதல் "புத்திஜீவிதத்தன"த்தை அடையாளப்படுத்துவதாக அவர்கள் நினைக்கிறார்களோ என நான் நினைப்பதும் உண்டு.

சோசலிஷ நாடொன்றில் நான் கல்வி கற்ற காலங்களில், மாற்றுக் கருத்துடன் அங்கே வாழ்ந்த கிழக்கு ஜேர்மன் பேராசிரியர் சொல்லும் வாக்கியம் ஒன்று, அடிக்கடி ஞாபகத்துக்கு வரும்.

"சோசலிஷம், கம்யூனிசம் பேசும் பலருக்கு பணத்தையும் பதவியையும் கொடுத்துப்பாருங்கள், மறுகணமே அவர்கள் முதலாளித்துவம் பேசத்துவங்கி விடுவார்கள்." பொதுவுடமை ஒரு சிந்தனாவாதம் மட்டும்தான், நடைமுறைக்கு உதவாது என்பது பேராசிரியரின் நம்பிக்கை. "ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது" என்கிற நம்மவர் பழமொழியை அவர் அநுசரித்துப் பேசுவார்.

சோசலிஷம் பேசிய நாடுகள் பல இன்று சின்னாபின்னப் பட்டுப் போனதுக்கும், முதலாளித்துவ முறைகளைப் பின்பற்றி இப்போது அவை வீறுநடை போடுவதற்கும் காரணம் என்ன? நடைமுறையில் அவை தோற்றுப்போனதற்கு பேராசிரியர் சொன்னது மட்டுமே காரணமாகுமா? சித்தாந்தங்களிலும் பார்க்கச் சிக்கலானவை நடைமுறைகள் என்பதை நான் ஜேர்மனியில் வாழ்ந்த காலத்தில் அநுபவ வாயிலாக அறிந்து கொண்டேன்.

எனது இளமைப்பருவத்தில் ஏழு வருடங்கள் சோசலிஷ நாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட கிழக்கு ஜேர்மனியிலும், பின்பு ஆறுவருடங்கள் ஜனநாயக நாடாக உரிமை பாராட்டிக் கொண்டு, முதலாளித்துவ பொருளாதாரத்தைப் பயின்ற மேற்கு ஜேர்மனியிலும் படித்திருக்கிறேன். அங்குள்ள பல்கலைக்கழகங்களில் பணிபுரிந்திருக்கிறேன். இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின் ஜேர்மனி பிளவு பட்டதால் தோன்றிய இரு நாடுகளும், ஒன்றுக் கொன்று பரமவிரோதம் பாராட்டிய காலம் அது! மார்ச் மாதம் 15ம் திகதி 1939ம் ஆண்டு செக்கோ சிலவாக்கியா மீதும், அதே ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாந் திகதி போலந்து மீதும் அடொல்வ் ஹிட்லர் படை யெடுத்ததைத் தொடர்ந்து இரண்டாம் உலக யுத்தம் துவங்கியது. ஆறு வருடங்கள் நடந்த கொடூர யுத்தம் அது. அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ருஷ்யா ஆகிய நான்கு நேச நாடுகள், ஜேர்மனி மீது நடாத்திய படையெடுப்பால் 1945ம் ஆண்டு யுத்தம் ஐரோப்பாவில் முடிவுக்கு வந்தது. ஹிட்லரின் படை தோல்வியைத் தழுவ, நான்கு நாடுகளும்

பொட்ஸ்டம் என்ற இடத்தில் கூடி, உடன்படிக்கையொன்றின் மூலம் ஜேர்மனியை நான்காக பங்கு போட்டுக் கொண்டன.

முதலாளித்துவ பொருளாதார அமைப்பினை முன்னெடுத்து வாழும் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் நாடுகளால் கம்யூனிச சித்தாந்தங்களில் ஊறிய ரூஷ்யாவுடன் ஒத்துப்போக முடியவில்லை. இதனால் தமது பகுதிகளை ஒன்று சேர்த்து மே மாதம் 1949ம் ஆண்டு ஜேர்மன் "சமஷ்டிக் குடியரசு" என்ற பெயரில் மேற்கு ஜேர்மனி என்னும் நாட்டை உருவாக்கினார்கள். நம்மூர் பாஷையில் சொல்வதானால் மேற்கு ஜேர்மனி, மூன்று பங்காளிகளுக்குச் சொந்தமான சொரியல் காணியாக இருந்தது. இருப்பினும், அமெரிக்கா - பிரித்தானியா - பிரான்ஸ் அரசுகள் தங்கள் எல்லைகளை தெளிவாகவும் கச்சிதமாகவும் வரைந்து உறுதி எழுதிக் கொண்டார்கள். ஏட்டிக்கு போட்டியாக சோவியத் ரூஷ்யாவும் அதே ஆண்டு ஏழாம் திகதி ஒக்டோபர் மாதம் தனது கால் பங்கு பிரதேசத்தை "ஜேர்மன் ஜனநாயகக் குடியர"சாக பிரகடனப்படுத்திக் கொண்டது. இதுதான் கிழக்கு ஜேர்மனி என மேற்குலகால் அழைக்கப்பட்ட பிரதேசமாகும்.

ஜேர்மனியின் தலைநகரம் பேர்ளின். அதுவே அடொல்வ் ஹிட்லரின் காலத்தில் மட்டுமல்ல, பன்னெடுங்காலமாக ஜேர்மன் நாட்டின் தலைநகராக பெருமை பெற்றிருந்தது.

ஜேர்மனியை தமக்குள் பங்கு போடும்போது, பேர்ளின் நகரம் ரூஷ்ய ஆதிக்கத்துக்கு விடப்பட்ட கிழக்குப் பகுதிக்குள் வந்துவிட்டது. பழைமை வாய்ந்த அந்த பேர்ளின் நகரை சோவியத் ஆதிக்கத்துக்கு விட்டுவிட பங்காளிகள் விரும்பவில்லை. தலைநகராக இருந்த பேர்ளின் நகரமும் நான்காகப் பிரிக்க வேண்டுமென பங்காளிகள் மூவரும் வாதாடிப் பெற்றுக் கொண்டார்கள். பேர்ளின் நகரின் முக்கால் பங்கு மேற்கு பேர்ளினாக பிரகடனப்படுத்தப்பட, சோவியத் ரூஷ்யாவின் கால்பங்கு கிழக்கு பேர்ளினாகி "பேர்ளின்" என்ற பெயரில் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் (கிழக்கு ஜேர்மனி) தலைநகராகியது. கிழக்கு பேர்ளின் என்றில்லாமல் "பேர்ளின்" என்ற பெயரில் அது கிழக்கு ஜேர்மனியின் தலைநகராகத் தொடருதல் சோவியத்ரூஷ்யாவின் பெருமைக்கு உகந்தது என சோவியத் ஆட்சியாளர் கருதினார்கள்.

கிழக்கு ஜேர்மனியில் சோவியத் ரூஷ்யாவின் நண்பனாய் ஆட்சியில் அமர்ந்த சோசலிஷ ஆட்சிக்குத் தொல்லை கொடுக்கும் முதல்படியாக "மேற்கு பேர்ளின்" நகரத்தில் ஆடம்பர கார்களும், கவர்ச்சிகரமான நுகர் பொருள்களும் குவிக்கப்பட்டன.

சோசலிஷ ஆட்சியில் ஆடம்பரத்துக்கு இடமில்லை. ஒவ்வொருவரின் தேவைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற ஊதியம் என்பதும், எல்லாமே எல்லோருக்கும் சொந்தமானது என்பதும் சோசலிஷம் பற்றிய பாமரத் தனமான விளக்கம். ஆனால் மனித மனம் இயல்பாக ஆடம்பரப் பொருள்களுக்கு அங்கலாய்க்கும் என சரியாகவே மேற்குலக முதலாளிகள் புரிந்து வைத்திருந்தார்கள். வசதியான வாழ்வு தேடிய மக்கள் கிழக்கு ஜேர்மனியில் இருந்து மேற்கு பேர்ளின் நகரத்துக்கு தப்பியோடத் துவங்கினார்கள்.

"இது நம் ஆட்சிக்கு சரிப்பட்டுவராது" என்று எண்ணிய ரூஷ்ய சார்பு கிழக்கு ஜேர்மன் அரசு, 13ம் திகதி ஆகஸ்ட் மாதம் 1961ம் ஆண்டு இரவோடிரவாக மேற்கு பேர்ளின் நகரத்தைச் சுற்றி உயர்ந்த மதில் சுவரை எழுப்பியது. அத்துடன் கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளின் எல்லைகளுக்கும் கடுங்காவல் போட்டது. கட்டுக் காவலையும் மீறி பாய்ந்தோடிய கிழக்கு ஜேர்மன் மக்களை குருவி சுடுவது போல கிழக்கு ஜேர்மனியின் காவல் படைகள் சுட்டு வீழ்த்துவதாய் பங்காளிகள் மூவரும் பிரசாரம் செய்தார்கள்.

இலங்கையில் 1983ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தின்பின், தமிழர்கள் பெருமளவில் மேற்கு ஐரோப்பாவை நோக்கி வரத் துவங்கினார்கள். இதற்கு வசதியாக

அமைந்தது உலக அகதிகள் இறங்குதுறையாக அக்காலத்தில் செயற்பட்ட கிழக்கு பேர்ளின் நகரம்.

கிழக்கு ஜேர்மனியின் பொருளாதாரத்திலும், மக்களின் ஆடம்பர மோகத்திலும் மேற்கு ஜேர்மனி புகுந்து விளையாடி நெருக்கடி கொடுக்க, வந்திறங்கும் உலக அகதிகள் மூலம் மேற்கு ஜேர்மனிக்கு தொல்லை கொடுத்து, கணக்கை சரிசெய்யும் முயற்சியில் கிழக்கு ஜேர்மனி ஈடுபடலாயிற்று. இதற்கு பிளவு பட்ட ஜேர்மனியின் பூகோள அமைப்பும், பேர்ளின் நகரம் குறித்த பொட்ஸ்டம் உடன்படிக்கை விதிகளும், வசதியையும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது. மேற்கு பேர்ளின் நகரம் கிழக்கு ஜேர்மனிக்குள் இருந்தாலும், அது மேற்கு ஜேர்மனியின் ஆளுகைக்கு உட்பட்டதால், மேற்கு பேர்ளினுக்குள் வந்து சேர்ந்துவிட்டால், மேற்கு ஜேர்மனியில் வசிப்பதற்கான அகதி அந்தஸ்து கோருதல் சாத்தியமாக அமைந்துவிடும். பின்னர் அங்கிருந்து வேறு பல மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், தரை எல்லையை கடந்து சென்றடைதல் அப்போது சாத்தியமாக இருந்தது.

1980ம் ஆண்டுகளில் நடைமுறையில் இருந்த ஐரோப்பிய நாடுகளின் குடிவரவு விதிகளில், தற்போது புகுத்தப்பட்டுள்ள கெடுபிடிகள் இருக்கவில்லை. எனவே அகதிகள் பிரான்ஸ், சுவிஸ், ஒல்லாந்து, டென்மார்க் நோர்வே என்றும், பின்னர் அங்கு தமது வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக் கொண்டு பிரித்தானியா; கனடா என ஆங்கிலம் பயிலும் நாடுகளுக்கும் இடம் பெயர்தல் சாத்தியமாயிற்று.

பிளவுபட்ட ஜேர்மனிகள் 1990ம் ஆண்டு இணையும்வரை பூமிப்பந்தெங்கும் தமிழன் பு[illegible]பெயர்வதற்கு நுழைவாயிலாக அமைந்தது, கிழக்கு பேர்ளி[illegible]ம், அதனுடன் இணைந்த மேற்கு பேர்ளினின் பூகோள அமைப்புமே என்பது இதுவரை பதிவு செய்யப்படாத உண்மையாக உள்ளது.

சோவியத்யூனியனும் கிழக்கு ஜேர்மனியும் அகதிகள் விடயத்தில் "ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் அடித்ததை" ஊன்றிக் கவனித்தவர்களுக்கு நன்கு விளங்கும். பெருந்தொகை அகதிகள் ருஷ்ய விமானத்தில் பறந்ததின்மூலமும், ஒருநாள் கடவை விசாவுக்கு கிழக்கு ஜேர்மன் அரச நிர்வாகம் பணம் அறவிட்டதின் மூலமும் பெருந்தொகையான வருமானம் பெற்றார்கள். கிழக்கு ஜேர்மனிக்குள் இருக்கும் "குப்பைத் தொட்டியாக" மேற்கு பேர்ளினைப் பாவித்து பல்லாயிரக்கணக்கான உலக அகதிகளை வகை தொகையின்றி மேற்கு பேர்ளினுக்குள் தள்ளித் தொல்லை கொடுத்தார்கள். இதனால் எண்பதாம் ஆண்டுகளில், சுற்றிவர மதில் சுவரால் தனிமைப்படுத்தப்பட்ட மேற்கு பேர்ளின் நகரம் அகதிகளால் நிரம்பி வழிந்தது. அகதிகளின் இத்தகைய படையெடுப்பு மேற்கு ஜேர்மன் அரசுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்தது.

கிழக்கு ஜேர்மனி, ஜேர்மன் ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டு நாற்பது ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாட, 1989ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ம், 7ம் திகதிகளில் சோவியத் தலைவர் கொபச்சோவ் கிழக்கு பேர்ளின் வந்ததும், காலத்துக்கேற்ப மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும்படி கிழக்கு ஜேர்மன் அரசை வற்புறுத்தியதும், அதற்கு SED கட்சி தயக்கம் காட்டியதும் பின்னர் வெளிவந்த சமாச்சாரங்கள். ஆனால் இரு துருவங்களாக திகழ்ந்த இருநாடுகள் ஒன்றிணையும் என்பது யாருமே எதிர்பார்க்காத சடுதியிலே நிகழ்ந்த சம்பவமாகும்.

ஒக்டோபர் மாதம் மூன்றாம் திகதி 1990ம் ஆண்டு ஜேர்மன் நாட்டின் அதிபராக இருந்த ஹேல்மூட் கோல் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு என்ற கிழக்கு ஜேர்மனியின் பெயர் இனிச் செல்லாது என அறிவித்தார். இதன் தொடர்ச்சியாக கிழக்கும் மேற்கும் ஒன்றிணைந்த

ஜேர்மனியாகியது. பொருளாதாரப் பிரச்சினையை சமாளிக்க முடியாத சோவியத் யூனியன்,மிகப் பெருந்தொகைப் பணத்தை மேற்கு ஜேர்மனியிடம் பெற்றுக் கொண்டதன் பின்னரே இரு நாடுகளின் ஒன்றிணைப்பை அனுமதித்தார்கள் என்று அப்போது பேசிக் கொண்டார்கள்.

இரு ஜேர்மனிகளும் இணைந்த பின்பு, 1990ம் ஆண்டு டிசம்பர் மாதம் பேர்ளின் சுவர் முற்றாக இடித்து அகற்றப்பட்டது. இடிக்கப்பட்ட பேர்ளின் சுவரின் சிறிய கொங்கிறீற் துண்டுகள் ஞாபகச் சின்னங்களாக 1990ம் ஆண்டுகளில் விற்கப்பட்டன.

கிழக்கிலும் மேற்கிலுமாக, சோசலிஸ, முதலாளித்துவ அமைப்பின் கீழ், ஜேர்மனியில் பலகாலம் வாழ்ந்து அனுபவித்தவன் என்ற உணர்வின் உந்துதலினால், ஒன்றிணைந்த ஜேர்மனியின் நிலவரத்தை நேரில் காண ஆசைப்பட்டேன். பழம் நழுவிபாலில் விழுந்த மாதிரி, நான் கல்வி கற்ற ஜேர்மன் தொழில் நுட்ப பல்கலைக்கழகம், விஞ்ஞான மகாநாட்டுக்கு சிறப்பு பேச்சாளராக என்னை அழைத் திருந்தது. உலக வாழ்வின் இயல்புகளை இனங்கண்டு, தீதும் நன்றும் பகுத்தறியும் பதின்மூன்று முத்தான வாலிபப் பருவத்து ஆண்டுகளை நான் ஜேர்மன் மண்ணிலேதான் ஆண்டு அநுபவித்தேன். என் வாழ்க்கையின் அர்த்தங்களைக் கற்பித்த மண், என் வாழ்க்கைக்கும் உழைப்புக்கும் ஏற்ற கல்வியை எனக்களித்து என்னை மனிதனாய் நிமிர்ந்து நிற்கச் செய்த மண், என் இரண்டாவது தந்தை மண்ணைத் தரிசிக்கும் ஒரு மனோபாவத்துடன். நான் விமானத்தில் ஏறினேன்.

விஞ்ஞான மாநாடு முடிந்தது!

மறுநாள் கிழக்கு ஜேர்மனியில் என்னுடன் ஒன்றாகப் படித்த நண்பன் எரிக்கிடம் சென்றேன். அவன் இப்போதும் அங்கேதான் குடும்பத்துடன் வாழ்கிறான். படிக்கும் போது அவன் பொதுவுடமைத் தத்துவங்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் வாழ்ந்தவன். உருக்குத் தொழிற் சாலையொன்றிலே வேலை செய்த சாதாரண தொழிலாளியின் மகனாக அவன் பிறந்தான். அன்றைய சோசலிஷ ஆட்சி அமைப்பு இல்லையேல், அவன் உயர்கல்வி கற்கும் வாய்ப்பையே பெற்றிருக்கமாட்டான்.

எரிக்கும் மனைவி மேரியும் என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். சோசலிஷ ஆட்சியின்போது அவர்கள் அரசு கொடுத்த, ஒப்பீட்டளவில் வசதியான இரண்டு அறைதொடர் மாடிக் குடியிருப்பில் குறைந்த வாடகையில் குடியிருந்தார்கள். நான் சென்றபோது அவர்கள் வாழ்ந்த வீடு முன்புபோல் வசதியானது என்று சொல்வதற்கில்லை. கிழக்கும் மேற்கும் இணைந்த பின்பும் கிழக்குப் பகுதியில் பொருளாதார முன்னேற்றத்தைக் குறிக்கும் பௌதீக மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதை என்னால் அவதானிக்க முடியவில்லை.

மேரி கோப்பி தயாரித்துக் கொண்டிருந்தாள். எரிக்குடன் பலதையும் பேசிக் கொண்டிருந்த நான் "ஒன்றிணைந்த ஜேர்மனியில் உன்வாழ்க்கையில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?" என நட்புரிமை பாராட்டிக் கேட்டேன்.

வரவேற்பறையை ஒட்டிய சமையல் அறையில் நின்ற மேரி என்னைப் பார்த்து புன்னகைத்தாள்.

எரிக் மௌனம் காத்தான்.

"எனது கேள்வி தவறென்றால் மன்னித்துக் கொள்" என்றேன்.

"இதில் தவறெதுவுமில்லை" என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டவன், வார்த்தைகளைக் கவனமாக தெரிந் தெடுத்து பேசத் துவங்கினான்.

"வயிறார உணவும், வசிப்பதற்கு வீடும், வருமானத்திற்கு ஒரு தொழிலும்

இருந்துவிட்டால் மனித மனம் ஆடம்பரத்தை நாடும். அன்றைய சோசலிஷ ஆட்சியில் கிழக்கு ஜேர்மனியில் வாழ்ந்த நாம், மேற்கு ஜேர்மனியில் முதலாளித்துவ அமைப்பின் கீழ் பாலும் தேனும் வீதிகளில் வழிந்தோடுவதாக நினைத்தோம். ஆனால் இப்போது அது மாயை எனத் தெரிந்தது மட்டுமல்லாமல், அடிப்படை வசதிக்கே எலியோட்டத்தில் ஈடுபடும் அவதி வந்துவிட்டதை உணர்கிறோம்."

இதைச் சொன்னபின் எரிக் பெருமூச்சொன்றை விட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

"சோசலிஷ அமைப்பின்கீழ் வேலை நிரந்தரம் என்ற நிலைமை மாறி, வருடாவருடம் வேலை ஒப்பந்தம் நீடிக்கப் படவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இப்பொழுது எழுந்துள்ளது. "அமெரிக்கா hire and fire கொள்கைதான் இங்கும்" எனத் தன் கருத்தைக் கூறியபடி மேரியும் எங்களுடைய உரையாடலிலே கலந்து கொண்டாள்.

ஜேர்மனியில் பலவகையான ருசிமிக்க கேக் வகைகளைச் செய்வார்கள். Torte எனப்படும் ஒருவகையை நான் விரும்பிச் சுவைப்பேன். கேக் மாவின் மேலே பலவகை பழத்துண்டுகளைப் போட்டு அதன்மேல் ஜெலி ஊற்றி அந்த கேக்கை சுவையுள்ளதாக்குவார்கள்.

அன்று மேரி வாழைப்பழ Torte செய்திருந்தாள். வாழைப் பழத்தைப் பார்த்ததும் புன்னகைத்தேன். எனது புன்னகையின் அர்த்தத்தை சரியாக ஊகித்தவள், "உண்மைதான், சோசலிஷ ஆட்சியில், அன்று வாழைப்பழம் எமக்கெல்லாம் ஆடம்பரப் பொருள். வாழைப்பழ இறக்குமதி அப்போது இல்லை. ஆனால் ஒன்றிணைந்த ஜேர்மனியில் இப்போது வாழைப்பழம் தாராளமாகக் கிடைக்கிறது. ஆனால் ஆடம்பரப் பொருள்களைக் காட்டி மேற்கு ஜேர்மன் நிறுவனங்கள் எம்மை ஏமாளியாக்கியது சுவாரஸ்யமான சோகக்கதை" எனச் சொன்னாள் மேரி.

"ஆடம்பரம்" என்ற சொல் மேரியை எரிச்சலடைய வைத்ததை அவளின் பேச்சிலிருந்து உணர்ந்து கொண்டேன். எதையும் ஒளிவு மறைவின்றிப் பேசுதல் அவள் சுபாவம். அவளிடமிருந்து கதை பிடுங்கும் "யாழ்ப்பாணக் குணம்" என்னுள் புகுந்து கொள்ளவும், "அது என்ன ஏமாளியாக்கிய கதை?" எனத் தூண்டிலை அவளை நோக்கி வீசினேன்.

"கிழக்கும் மேற்கும் தொண்ணூறாம் ஆண்டு ஒன்றிணைந்த புதிதில், முதலாளித்துவ நிறுவனங்கள் கிழக்கு ஜேர்மனியை புதிய சந்தையாக நினைத்து படையெடுத்தது.." எனக் கதையை துவக்கிய மேரியை இடைமறித்து, "மக்களிடம் வாங்குவதற்கு பணமிருந்ததா?" என என் ஊகங்களுக்குத் தெளிவு பெறுவதற்காகக் கேட்டேன்.

பென்ஸ்கார் ஒன்றை வாங்கி எரிக் கடனாளியாக இருப்பதையும், அதற்கு பெற்றோல் ஊற்றுவதற்கே கஷ்டப் படுவதையும் மேரி விரிவாகவே விளக்கினாள்.

"கார் விற்க வந்தவர்கள் வட்டிக்கு பணம் கொடுக்கும் நிறுவனங்களையும் கூடவே அழைத்து வந்தார்கள். சுவர்க்க வாசல் திறந்ததாகவே நினைத்து விலை உயர்ந்த கார்களையும் ஆடம்பரப் பொருட்களையும், கடன் பத்திரத்தில் கையெழுத்து வைத்து கணக்கு வழக்கின்றி மக்கள் வாங்கினார்கள். இந்தப் போக்கிலே அள்ளுண்ட எரிக்கும் ஒரு பென்ஸ் கார் வாங்கினான். அதுவரை சோசலிஷ பொருளாதாரம் மட்டும் தெரிந்த கிழக்கு ஜேர்மன் மக்கள் முதலாளித்துவ தில்லு முல்லுகளின் ஆழ அகலத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதன் காரணமாகப் பலர் இன்று, கடனாளியாக இருக்கிறார்கள். அத்துடன் அதிவேக கார்களுக்கு பழக்கப்படாத பலர் விபத்துக்களைச் சந்தித்ததும்

உண்டு. நாம் வாங்கிய பென்ஸ் காரின் பெறுமதி ஒருவருடத்தில் கால்பங்கு குறைந்துவிட்டது. ஐந்து வருடத்தில் அதன் பெறுமதி பூஜ்ஜியமாகிவிட்டது. இதற்காக வாங்கிய கடனோ இப்போது பலமடங்காகி விட்டது."

தனது வாழ்க்கை நிலையைக் கூச்சப்படாமல் கூறினாள் மேரி.

சோசலிஷ ஆட்சியின்போது கிழக்கு ஜேர்மனியில் இரண்டு வகைக் கார்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

இரண்டு சிலிண்டர், இரண்டு Stroke என்ஜின் பூட்டிய Traband கார். மிகவும் வேகம் குறைந்த 700cc என்ஜினைக் கொண்டது. 1955ம் ஆண்டு உற்பத்தியாகி விற்பனைக்கு வந்தன. உலகத்திலே முதலில் உற்பத்தி செய்யப் பட்ட பிளாஸ்ரிக் (Plastic body) கார் இதுவே பார்ப்பதற்கு நெருப்புப் பெட்டி போல் இருக்கும். இக்காரை வாங்குவதற்கு பதிவு செய்த பின் சோசலிஷ ஆட்சியின் கீழ் ஆறு வருடங்களுக்கு மேல் காத்திருக்கவேண்டும்.

அடுத்த வகை கார் மூன்று சிலிண்டர் Wartburg என்னும் கார். இதுவும் இரண்டு Stroke என்ஜின் பொருத்தியது. ஒப்பீட்டளவில் Traband காரிலும் ஆடம்பரமானது. முன்னதிலும் பார்க்க இது வேகமாக ஓடக்கூடியது.

Autobahn எனப்படும் நெடுஞ்சாலைகளில் மேற்கு ஜேர்மனியின் அதிவேக ஆடம்பரக் கார்களைப் பார்த்தவர்களுக்கு தாமும் அப்படி ஒரு ஆடம்பர காரில் செல்ல வேண்டுமென விரும்பியதில் வியப்பேதுமில்லை. இருப்பினும் விரலுக்கேற்ற வீக்கம் வேண்டுமென்பதை ஆடம்பர மோகத்தை நாடிய வேகத்தில் மறந்து போனது அவர்களைச் சிக்கலில் மாட்டி விட்டது.

எரிக்கின் தந்தை பணிபுரிந்த உருக்குத் தொழிற்சாலையில் நானும் பல்கலைக்கழக விடுமுறைகளின்போது பணி புரிந்திருக்கிறேன். எரிக்கின் தந்தையே எனக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருந்தார். அவரின் ஞாபகம் வரவே அவரின் சுக நலம் விசாரித்தேன்.

"உனக்குத்தான் தெரியுமே, சோசலிஷ ஆட்சியின்கீழ் இங்கிருந்த தொழிற்சாலைகளெல்லாம் அரசுக்கு சொந்தமானவை என்பது. இரவோடிரவாக ஜேர்மனி ஒன்றிணைந்தபின், சோசலிஷ ஆட்சியின் கீழ் அரசுடமையாக்கப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் தனியார் மயப்படுத்தப்பட்டன. எரிக்கின் தந்தை பணிபுரிந்த உருக்கு ஆலையை, மேற்கு ஜேர்மனியில் கொடிகட்டி பறந்து, பெரும் லாபம் ஈட்டிய தனியார் உருக்கு ஆலையொன்று, "அடையாளமாக" (Symbolic) ஒரு ஜேர்மன் மார்க் பணம் கொடுத்து அரசிடம் வாங்கியது. தொழிற்சாலையை நிர்வகிக்கவும் தொழில்நுட்பத்தை நவீனப்படுத்தவும் ஒன்றிணைந்த ஜேர்மன் அரசு பெருந்தொகை பணம் கொடுத்தது. இந்த வகையில்தான் கிழக்கு ஜேர்மன் நிறுவனங்கள் எல்லாம் நவீன மயப்படுத்தப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் இந்த நவீனமயப்படுத்தல் மூடுவிழாக்களுக்கான துவக்கமாகவே இருந்தது. அரசிடம் இருந்து கிடைத்த பணத்தை மேற்கு ஜேர்மனியில் உள்ள தமது ஆலைகளுக்குச் செலவு செய்த முதலாளித்துவ நிறுவனங்கள், திட்டமிட்ட செயற்பாடுகள் மூலம் இரண்டு மூன்று வருடங்கள், கிழக்கு ஜேர்மனியில் உள்ள ஆலைகளை நட்டத்தில் இயங்கவிட்டன. இறுதியில் அந்த ஆலைகளிலே வேலை செய்த திறமைமிக்க ஊழியர் சிலரையும் நல்ல நிலையிலுள்ள இயந்திரங்களையும் மேற்கு ஜேர்மன் ஆலைக்கு எடுத்துச் சென்றபின், இங்குள்ள ஆலையை மூடிவிட்டார்கள். இதனால் கிழக்கு ஜேர்மனியிலே வாழ்ந்த தொழிலாளர்களிலே அநேகர் வேலையற்றோராக நடுத்தெருவில் விடப்பட்டார்கள்.

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்கிற கதையே தான்! சோசலிஷ ஆட்சியின் கீழ் கிடைத்த, அடிப்படை வசதிகளுக்கான உத்தரவாதத்தைப் பின்னர்தான் கிழக்கு ஜேர்மன் மக்கள் நினைத்துப் பார்க்கத் துவங்கினார்கள்...' என மேரி விபரம் சொன்னாள்.

இந்த அவல நிலை குறித்து ஒரு சோக உணர்வு என்னுள் படர்ந்தது. நான் மௌனித்தேன். என் உடலின் பாஷையை மேரி புரிந்திருக்க வேண்டும்.

'அந்த கதைகளை விடு வாழைப்பழ Torte சாப்பிடு. இது உனக்காகவே செய்யப்பட்டது. முன்னரென்றால் இவ்வளவு தாராளமாகச் செயற்பட்டிருக்கமாட்டேன். இப்போது ஆடம்பர முதலாளித்துவ அமைப்பில் வாழ்கிறேனல்லவா..? எனக்கூறிச் சிரித்தாள்.

சோகத்திலும் வெடித்த அந்த நகைச்சுவைக்குறிப்பிலே நானும் கலந்து சிரித்தேன்.

'நீங்கள் முன்பு இருந்த அரச தொடர்மாடியும் தனியார் மயமாகிவிட்டதா?' மேரி தந்த வாழைப்பழ கேக்கைச் சாப்பிட்டபடி, கேட்டேன்.

'சும்மா விட்டு வைப்பார்களா? இரண்டாம் உலக மகாயுத்தத்தின்முன் கட்டப்பட்ட கட்டிடங்களை தமதென பலர் ஆட்சி உரிமை கோரி பழைய காணி உறுதிகளுடன் வந்தார்கள். பொதுவுடமை சொத்தாக சோசலிஷ ஆட்சியின் கீழ் இருந்த கட்டிடங்கள் மீண்டும் தனியார் கைவசம் போனவுடன் வாடகை கூடியது.

'அத்துடன் போட்டியும் அதிகரித்தது. சோசலிஷ ஆட்சியில், குடும்ப நபர்களின் எண்ணிக்கை அடிப்படையிலேயே வீடு கொடுக்கப்பட்டது. தேவைக்கேற்ற விசாலம். ஆனால் இப்போது இரண்டு பேர் உள்ள குடும்பத்தினர் பணமிருந்தால் அதிக அறைகளுள்ள பெரிய வீட்டிலே வாழமுடிகிறது. இதனால் பணமற்ற பலர் தங்கள் குடியிருப்பு வசதிகளை இழந்தார்கள். நாம் இப்போதிருக்கும் இந்த வீட்டை வாடகைக்கு எடுக்கப்பட்ட பாடுகள் கொஞ்சம் நஞ்சமல்ல...' என விவரித்தாள் மேரி.

'முன்பு கம்யூனிசம் போதித்த பேராசிரியர்களும், நிறுவனங்களில் பணிபுரிந்த கம்யூனிச சார்பு SED கட்சி செயலாளர்களும் இப்போது என்ன செய்கிறார்கள்?' எனக் கேட்டேன். இவர்களே சோசலிஷ ஆட்சியின்கீழ் தனிக்காட்டு ராஜாக்களாக சுகபோக வாழ்வு வாழ்ந்தவர்கள். அவர்கள் நிலை என்ன என்பதை அறிவதில் இயல்பாகவே எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. எரிக் அப்போது பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் SED கட்சி செயலாளராகவிருந்து பொதுவுடமைத் தத்துவங்களை உசாராகப் பேசியவன்.

எனது கேள்வி அவனது உணர்வுகளை உசுப்பியிருக்கவேண்டும். இதை அவனது முகபாவம் காட்டிக் கொடுத்தது. இருப்பினும் அமைதியாகப் பேசத்துவங்கினான். ஜேர்மனியர்களின் சுபாவமே அதுதான். மலையே போனாலும் பதட்டப்படாது மிக அமைதியாக இருப்பார்கள்.

'அவர்களில் பலர் பச்சோந்திகளாக மாறி முதலாளித்துவம் பேசத்துவங்கி விட்டார்கள். கம்யூனிசம் நடைமுறையில் தோற்றதற்கு இவர்களைப் போன்ற பச்சோந்திகளும் ஒரு காரணம்' என்று நொந்து பேசிய எரிக்கை இடைமறித்து, 'அவர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள்' என்று அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தாள் மேரி.

நாளை சிட்னி நோக்கிய எனது பறப்பு!

பெட்டியில் இருந்த பொருள்கள் அனைத்தையும் கீழே கொட்டித் தேடினேன். வரும்போது அணிந்து வந்த கால்சட்டை, சேட், கோட் பொக்கற்றுக்குள்ளும் கைவிட்டுப் பார்த்தேன். அந்தப் பட்டியலோ அகப்படவில்லை.

நான் வெளிநாடு போகும் போதெல்லாம் என் மனைவி எதைத்தான் மறந்தாலும், வீட்டுக்கு வாங்கிவர வேண்டிய சாமான்கள் பட்டியலைத் தர மறப்பதில்லை. தான் சொல்ல மறந்த மேலும் சில சாமான்களை, நேற்று மின் அஞ்சல் மூலமும் அனுப்பியிருந்தாள். முடிந்த வரை மூளையை கசக்கி நினைவுபடுத்தி மனைவி சொன்ன சாமான்களைக் குறித்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் புறப்பட்டேன்.

வணிக வளாகத்தில் ஒரு எதிர்பாராத சந்திப்பு. பல்கலைக் கழகத்தில் எனக்கு சோசலிஷ பொருளாதாரம் கற்பித்த ஜேர்மன் பேராசிரியர் புதிய கோலத்தில் வந்திருந்தார். இலகுவில் என்னை இனம் கண்டவர், "எப்படி இருக்கிறாய்? எப்போது வந்தாய்?" எனக் குசலம் விசாரித்தார். அவர் அணிந்திருந்த ஆடை எனக்கு வியப்பைக் கொடுத்தது. தொழிலாளர்கள் அணியும் நீலநிற அங்கி அணிந்து, தச்சு வேலைகள் செய்வதற்கான ஆயுதங்கள் அடங்கிய பையொன்றை வைத்திருந்தார்.

"இதுவென்ன புதுக்கோலம்?" என பேராசிரியரைக் கேட்டேன்.

சிறிது நேர மௌனத்தின் பின், தன்னிலை விளக்கம் கொடுக்கும் தோரணையில் பேராசிரியர் பேசத்துவங்கினார்.

"சோசலிஷ சமுதாய அமைப்பில் அனைவரும் தொழிற் கல்வி பெற்றிருக்க வேண்டியது அவசியம் என்பதை நீ அறிந்திருப்பாய். அந்த வகையில் நான் தச்சுத் தொழில் கற்றவன். எனக்கு உயர்கல்வி வாய்ப்பைத் தந்தது மட்டுமல்லாது பேராசிரியராக உயர்வு தந்ததும் சோசலிஷ கட்டமைப்பே. அதற்கு நான் என்றும் கடமைப்பட்டவன் பொதுவுடமை கொள்கையை நான் அன்றும்இன்றும் முழுதாக நம்புகிறேன். பலரின் கண்களுக்கு அது தோற்றுப்போன சங்கதியாக இருக்கலாம். கம்யூனிசம் என்றும் தோற்றதில்லை. அதை கடைப்பிடித்த முறைதான் தோற்றுப்போனது.

"கிழக்கும் மேற்கும் ஒன்றிணைந்த பின் இரவோடு இரவாக என் கொள்கைகளை மாற்றிக் கொள்ள என்னால் முடியவில்லை. என்னையே ஏமாற்றிக் கொண்டு முதலாளித்துவ அமைப்பில் பச்சோந்தியாக வாழ என் மனம் என்றும் இடம் கொடாது. இதனால் என் பேராசிரியர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு எனக்குத் தெரிந்த கைத்தொழிலில் இறங்கிவிட்டேன். இப்போது எனக்கு நான்தான் ராஜா, தனிக்காட்டுராஜா என வைத்துக் கொள்ளேன்" எனக்கூறிச் சிரித்தார் பேராசிரியர். கிழக்கு ஜேர்மனியில் சோசலிஷ ஆட்சி நடைபெற்ற காலத்தில் SED என அழைக்கப்பட்ட பொதுவுடமை கட்சியில் சேராதவர்கள் எந்தவொரு உயர் பதவியையும் வகிக்க முடியாது. இதற்குப் பல்கலைக்கழக பேராசிரியர்கள் விதிவிலக்கல்ல. சந்தர்ப்பத்துக்கேற்ற வகையில் பொதுவுடமைவாதம் பேசித்திரிந்த பல பேராசிரியர்களும், அரச சலுகை பெற்ற உயர் அதிகாரிகளும் இரவோடிரவாக முதலாளித்துவ சிந்தனைவாதிகளாக மாறி பதவிகளைப் பாதுகாத்த சங்கதிகள் பல உண்டு. இருப்பினும், பேராசிரியரைப் போன்ற கொண்ட கொள்கை மாறாத பொதுவுடமைவாதிகள் பலர் இன்னமும் கிழக்கு ஜேர்மனியில் வாழ்கிறார்கள் என்பது உண்மை.

மேற்கு ஜேர்மனியில் உள்ள அரச நிறுவனங்களில், கிழக்கு ஜேர்மன் மக்களை வேலைக்கமர்த்த வேண்டுமென்கிற நல்லெண்ணத்தில் பலரை வேலைக்கு அமர்த்தியிருந்தார்கள். ஆனால் கிழக்கு ஜேர்மன் மக்களால் புதிய அமைப்பிலே இலகுவில் இரண்டறக் கலக்க முடியவில்லை என்பதை, அவர்களின் நடத்தை மறைமுகமாகக் காட்டியது. பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது என்கிறரீதியிலே, தனித்தனிக் குழுக்களாகவே, வேலை செய்த இடங்களில் செயல்பட்டார்கள். கிழக்கு ஜேர்மன் மக்கள் மனதில் அப்போதிருந்த தாழ்வு மனப்பான்மையும் இதற்கு ஒரு காரணமாக

இருந்திருக்கலாம். முதலாளித்துவம் அளிக்கும் தனி நபர் முயற்சிகளின் வெற்றிகள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களை, அவர்கள் நான்கு சகாப்தங்களாக இழந்தமையே, இதற்கு காரணம் என மேற்கு ஜேர்மன் நண்பன் ஒருவன் பிறிதொரு விளக்கம் சொன்னான்.

அடொல்வ் ஹிட்லர், அகண்ட ஜேர்மனியைக் காணும் கனவுகளை ஜேர்மனிய மக்கள் மனதில் எழுப்பி ஆட்சியைக் கைப்பற்றினார். பதவி ஏற்றதிலிருந்து அதனைச் செயற்படுத்தும் பல திட்டங்களை முடுக்கிச் செயற்பட்டார். இறுதியில் யுத்தத்தில் தோல்வியுற்றதால் நாடு பிளவுற்றது. அரசியல் காரணங்களுக்காக ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களை இருநாடுகளாக்குவது நீண்ட நாள்களுக்கு நிலை பெற்றிருக்க மாட்டாது என்பதற்கு உதாரணங்களுண்டு. அரசியல் சித்தாந்த வேறுபாடுகளுக்காக, ஒரே இன மக்கள் வாழும் நாட்டினைக் கூறாக்கி, இருவேறு நாடுகள் அமைத்தால் அதிக காலம் நீடிக்காது என்பதை ஜேர்மன் வரலாறு நிரூபித்தது. இதுவே பிறிதொரு வகையில் வியட்நாமிலும் நடந்தது. கொரியப் பிரிவினை இன்னும் எத்தனை காலத்துக்கு நீடித்து நிற்கப் போகிறது என்று எதிர்காலம் ஆவலுடன் காத்திருக்கிறது. அதேபோன்று அரசியல் காரணங்களுக்காக இருவேறு இனங்களைச் சேர்ந்தவர்களின் நாடுகளை ஒன்றிணைப்பதும் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க மாட்டாது என்பதற்கு எறிற்றியாவும் எதியோப்பியாவும் உதாரணம். உலகமயமாகல் வேறு நாடுகளின் இறையாண்மை வேறு என்பதாகவே எனக்குத் தோன்றுகிறது!□□□

# உடன் "பாடுகள்"!

நான்
உன்னுடையவளாகப் போகும்
நாளை எண்ணியெண்ணியே இதயம் பலமிழந்து
விட்டதாய் ஓர் உணர்வு!
வருடங்கள் காத்திருக்க தெரிந்த
எனக்கு... நாழிகைகளை சமாளிப்பது தான்
காயங்கள் தோறும் உப்பால்
கழுவுவது போலிருக்கிறது!
அரிதாக முதலில் நான் கண்டிருந்த கற்பனைகள் யாவுமே
பெரிதாக எனை தன்னுலகுக்குள்
அழைத்துச் செல்கிறதே!
சொல்வாக்கு தவறாத உன் குணம் கண்டதாலோ என்னவோ
செல்வாக்கை குறைவின்றி பெற்றுவிட்டாய் என்னிடத்தில்...
கற்கண்டை சாப்பிட்டாற் போல.. காதல்
சொற்கொண்டு நீ பேசுகையிலே...
ஆனந்த அருவியின் அலை வந்து
மோதுகிறது உள்ளத்தில்!
முரண்பாடுகளின் தடயங்கள்
அழிந்து போன அன்பொன்றில் கட்டுப் பட்டிடத் தான்
என் உயிருக்குள்
உடன்பாடுகள் அதிகமாக!

- தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா

# ஒரு தாயின் சுயகதை

- கயிலை

நான் வறுமைக் குடும்பத்தில் பிறந்தவள். பிறிலிம் (Prelim) படித்துக் கொண்டு இருந்தேன். இன்றைய ஓ.எல் (O/L) க்குச் சமன் என்று நினைக்கிறன்.

படிப்பு முடியும் முன் அப்பு இறந்து விட்டார். ஆச்சி என்னையும் தம்பியையும் கஷ்டப்பட்டு வளர்த்தா. என் படிப்பு நிறுத்தப்பட்டது. தம்பியின்ரையும் தான். ரீச்சராக வருகிற என் கனாக் கலைந்தது.

அவசரப்பட்டு என்னை ஒருவருக்கு இரண்டாம் தாரமாக கட்டிக் கொடுத்தா. அவரிடம் கொஞ்சம் "சொத்துப்பத்து" ஆறு பரப்பு வீட்டுக் காணி, பத்துப்பரப்புத் தோட்டக்காணி . குத்தகைக்குக் கொடுத்து இருந்தார் தோட்டக்காணியை. அவரது தொழில் தரகு பிசினஸ். தரகில், குத்தகையில் கிடைத்த பணம் செலவைச் சுருக்கி வாழப்போதுமானதாக இருந்தது.

அப்பு இருக்கிற காலத்தில் நான், தம்பி அப்புவின் கமத்தில் உதவி செய்வம். சாமி, குரக்கன், பயறு, மரவள்ளி, பயிரிடுவார். பணப்பயிர் புகையிலையும் நடுவார் எனக்கு தண்ணி கட்டத் தெரியும் தம்பிக்கு தண்ணி கட்ட,இறைக்க, துலா மிதிக்க எல்லாம் தெரியும்.

குத்தகைக்கு கொடுத்த காணியை நிறுத்தினம். கமத்தை நாங்கள் செய்தம். அவர் இறைக்க, தம்பி, இன்னொருவர் துலாமிதிக்க, நான் தண்ணி கட்ட, வரும் விளைவுகள் எமது கட்டுப்பாடான வாழ்க்கைக்கு உதவியது.

நாலு பெண் குழந்தை களுக்கும், கடைக்குட்டி மகனுக்கும் தாயானேன். எல்லாப் பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பினம். எங்களிடம் இருப்பது கொஞ்சச் சொத்துதானே! படிப்பும் கல்விச் செல்வந்தானே! யாழ்ப் பாணத்தில் சீதனக் கொடுமை நாடறிந்த இரகசியம்.

நாலு பெட்டையள் பெற்ற எனக்குக் கொடுக்கக் கூடிய போதுமான சொத்து இருக்கா! கடவுள் கிருபையால் மூத்தவள் பார்வதியைத் தவிர மற்ற மூன்று மகள்களும், மகனும் நல்லாகப் படிச்சினம் பள்ளி ஆசிரியைகளாக மூன்று மகள்களும் வேலை செய்யினம்.

பார்வதிக்கும் ஒரு பள்ளி ஆசிரியருக்கும் திருமணம். குடும்பம் எங்களோடுதான். அவளுக்கு ஒரு கவலை. தன் கணவர் கால்ச்சட்டை போடுவதில்லை எண்டு. அவளின் சிறுபிள்ளைத் தனமான ஆசை, எனக்கும் இவருக்கும் கவலை தருகுது. கால்ச்சட்டை போடுவது தான் நாகரிகம் எண்டு ஏமாறுகிறாளே! ஏங்குகிறாளே!

இப்ப ஆண் - பெண் வித்தியாசம் இல்லாமல் எல்லாரும் கால்ச்சட்டை போடுகினம். என்ன தொழில் செய்யினம்? எண்டு கேட்டுப் பாருங்கோ!

எங்கட காலத்தில் இங்கிலிஸ் படித்து அரச உத்தியோகம் செய்தவை தான் கால்ச்சட்டை போட்டினம். ஆனால் இப்ப!.

இரண்டாவது மகள் ஈஸ்வரி. அவள் அழகை, ஆசிரியத் தொழிலை அயல் கிராமத்து இளைஞன் விரும்பினான். கச்சேரியில் வேலை. ஈஸ்வரிக்குப் பொருத்தமானவனாகத் தெரிந்தது. சம்மதித்தோம், கல்யாணம் நடந்தது.

அக்கா பார்வதியின் குணம் ஈஸ்வரிக்கு நல்லாகத் தெரியும். கால் சட்டையுடன் தன் கணவர் உலா வுவது அவளுக்குப் புகைச்சலைக் கொடுக்கும். தனிக்குடித்தனம் நடத்தப் போய் விட்டினம்.

மற்றப் பிள்ளைகளின் காட்சியைக் கண்டு களிக்காமல், இவரும் போய்விட்டார். ஆறாத்துயரம். பிள்ளைகள் இருப்பது ஆறுதலைத் தருகுது.

'திரு- மறந்துவிட்டன், அவள் பெயர் திருமகள். கடைசிமகள் கலைமகள் மூலம் அறிந்தன், திருவுக்கும் அவளுடன் படிப்பிக்கும் ஆசிரியர் மாதவனுக்கும் காதலாம். பிள்ளைகளின் சந்தோசந்தான் பெற்றோருக்கு முக்கியம், திருவின் விசயத்தில் நான் தலையிடவில்லை

அவரும் இருந்தால் சம்மதித்து ஆசீர்வதித்திருப்பார். தர்மவான்.

கொஞ்ச நாளாகக் கவனித்து வருகிறன். திருவின் முகத்தில் செந்தெளிப்பு இல்லை. வாடி இருந்தது.

'திரு'வும் கலாவும் சகோதரிகள் எண்டு சொல்வதை விட நண்பிகள் எண்டு சொல்வதுதான் மிகப் பொருந்தும். சரியானதும் என்பேன்.

திருவின் சோகத்தின் காரணத்தைச் சொன்னாள். கலா எனக்கு மாதவனுக்கு ஒரே தங்கை. தாய் தந்தை இறந்து விட்டினம். அண்ணன்தான் தாயின் அன்பையும் தந்தையின் கண்காணிப்பையும் கச்சிதமாகச் செய்து தங்கையைச் செல்லமாக வளர்த்தவர்.

இப்பொழுது ஒரு தர்ம சங்கடமாம். மாதவனுக்கு

மாற்றுச் சம்பந்தம் வந்திருக்கு. மாதவனின் தங்கைக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கு.

மாதவன் கவலைப் படுகிறாராம். கேட்கிறாராம் 'திரு'விடம் மாதவன்.

"என்ன செய்யிறது எண்டு தெரியல்ல 'திரு' முழிக்கிறன்". 'திரு' அக்கா சொன்னாவாம்.

"நீங்கள்தான் முடிவு எடுக்க வேணும். நானா? தங்கையா?". அவர் சொன்னாராம்,

"நீரும் வேணும். என் தங்கையும் வேணும் எப்பிடிப் பிரச்சினையைத் தீர்க்கிறது. என்ரை மூளை குழம்புது!

"நல்ல வேடிக்கையாக இருக்கு. நல்லா யோசியுங்கோ பெற்றோர் எண்டால் பிள்ளையின் ஆசையைப் பூர்த்தி செய்வினம் நீங்கள் பெற்றோர் இடத்தில் இருக்கிறியள்இல்லையா? சொல்லுங்கோ!"

"உமக்கு என்னிடம் உண்மையான அன்பு இல்லை அதுதான் இப்பிடிச் சொல்கிறீர்..."

"நல்லா யோசிச்சன். எனக்கு அம்மா எண்டாலும் இருக்கிறா என்ரை சுயநலத்தை உதறினேன். அவ்வளவுதான்"

"அப்ப நீர்? உம்முடைய எதிர்காலம்...!" "சிந்திப்பன். விரும்பியோ விரும்பாமலோ ஒரு முடிவுக்கு வரத்தானே வேணும். முடிவுக்கு ஏற்ப என்னைத் தயாராக்குவேன். கஷ்டம்தான் முயற்சி செய்வேன்..." என்றாளாம் திரு. இப்படிச் சொல்லி தம் சம்பாஷனைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டாளாம். 'திரு'வின் எதிர்காலத்தை நினைக்கக் கவலையாக இருக்கு. இதற்கிடையில் ஒரு மகிழ்ச்சியான செய்தி என்செல்லமகன் குமரேசனுக்கு அரச உத்தியோகம் கிடைத்து விட்டது.

மாதவன், அவரின் தங்கை இருவருக்கும் மாற்றுக் கல்யாணம் நடந்து நிறைவேறியது.

, தங்கை ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டாள். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறு ஒன்று நினைக்குதோ?! என் மனம் விசனப்பட்டது. அந்தச் செய்தியைக் கேள்விப் பட்டதும். மாதவனின் தங்கையின் கணவன் ஒரு விபத்தில் இறந்து விட்டானாம்.

'திரு' எனக்குச் சொல்லிக் கவலை. அந்தப் பெண்ணின் திருமணத்துக்குத் தானும் ஓரளவு பொறுப்பாளியல்லோ! தன் நலம் பாராது தன் காதலை வில்லங்கப்பட்டுத் துறந்ததும் அவளை வருத்திக் கொண்டிருந்தது. தனியாக வாழ விரும்புபவளைப் போல அவளது நடை, உடை, பாவனை.

கலாவும், பாடசாலைத் தோழிகளும் அவளைக் கலகலப்பாக நடமாடப் பலவிதம் முயற்சி செய்து கொண்டிருக்கினம்.

கொழும்பில் இருக்கும் மகன் குமாருக்கு, இங்கத்தை நடப்புகளை 'திரு' அக்காவின் கவலையை, அவள் தேடும் தனிமையை விளக்கமாக எழுதுவேன்.

செவ்வாய், வெள்ளியில் அருகில் அமைந்த கோயிலுக்குப் போவேன். முன்னே யாழ்ப்பாணத்தில் குமர்ப் பிள்ளைகள் கோயிலுக்குப் போகாயினம். பெற்றோர் விடாயினம். அவ்வளவு கட்டுப்பாடு நான் பழைய ஆள்தானே. இவை இந்தக் காலப் பிள்ளைகளுக்குத் தெரியாது.

நான் இரு மகள்களையும்

அருகிலுள்ள கோயிலுக்குக் கூட்டிச் செல்லத் தீர்மானித்தேன். மகனுக்கும் அறிவித்தேன். ஆன்மீகம் அமைதியைத் தரும்தானே செவ்வாய், வெள்ளி சென்று வருகிறோம்.

தமிழகப் பெரியாரின் வருகை. அவரது சொற் பொழிவு. நேரம் மாலை. கோயில் மண்டபத்தின் முன் வரிசையில் நாம் மூவரும்.

'தாய்மையை முக்கியமாகக் குறிப்பிட்டார் 'ஆதியில் இப்பூமியில் பூச்சியமாக ஒன்றும் இல்லாது இருந்தது. பல்லாயிரம் ஆண்டுகளின் பின் புல், பூண்டு, விதை, அமீபா (Amoeba) போன்ற வையின் தோற்றம் - பெருக்கம், உச்சக் கட்டம் மனிதர் - ஆண் பெண். மணிவாசகரும் இதையே பாடினார்.

"...புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி..."

...மனிதராய்த் தேவராய்..." தொடர்கிறது பாடல் "ஆண் பெண் ஈர்ப்பு, இலக்கு பெருக்கம், மழலைகளின் மலர்வு. எனவே பெண்ணின் கடமை அதி முக்கியமானது. தாய்மை, குழந்தையைப் பராமரித்தல் போன்றவை இயற்கையின் நியதி. இறைவனின் விருப்பமும் அதுவே"

உரையை வரவேற்றுச் சபையில் 'கலகல' என்ற கரகோசம் திருமகள் பேச்சில் இலயித்து ஒன்றியிருந்தாள்.

மகன் எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தான். 'எனது 'பொஸ்' எங்கள் ஊரைச் சுற்றிப் பார்க்க விரும்புகிறார். அவருடன் நானும் வருவேன் வீட்டை வளவை சுத்தப் படுத்தி, அழகாக வையுங்கள் இப்ப அக்காக்களுக்குப் பாடசாலை விடுதலை அவர்கள் செய்வார்கள் நீங்கள் பார்த்துக் கொண்டு இருந்தால் போதும்'

'பொஸ்' தன் காரில் என் மகனுடன் மதியத்துக்கு முன் வந்தார். குமார் என்னை பிள்ளைகளை அவருக்கு அறிமுகப்படுத்தினான்.

குளித்து ஒருமித்து உணவருந்தி அவர் கண் அயர்ந்தார். பின்னேரம் அவர் காரில் எமது கிராமத்தைச் சுற்றி உலா கடைசியில் ஒரு சிவன் கோயிலுக்குச் சென்றோம். முதலில் வலதில் இருக்கும் சிறு கோயில் பிள்ளையாரை வணங்கினோம். குமார் மகிழ்வான மனநிலையில் 'பொஸ்' எண்டும் பாராது பகடி விட்டான்.

"பிள்ளையாரைப் போல 'பொஸ்ஸீம் பிரமச்சாரி"

"இல்லை, இல்லை சித்தி, புத்தி என இரு மனைவிகள் பிள்ளையாருக்கு.

குரல் வந்த திசைக்கு எல்லாரும் திரும்பிப் பார்த்தம். அப்படிச் சொன்னவ திருமகள்தான். எமக்கு வியப்பு. கற்பக்கிருக சிவன் - உமையை வணங்கி, இடது சிறுகோயிலில் இருப்பவர் முருகன்.

"அவருக்கும் இருவர்தானே மனைவிமார்" குமரேசன் சொன்னான். "அப்படிச் சொல்லக்கூடாது. மணந்தது தேவயானையை ஆட் கொண்டது வள்ளியை"

திருமகளின் அறிவை அறிந்து வியப்பு, மெச்சினர். உள்ளப் பூரிப்புடன் வீடு திரும்பினோம்.

மறுநாள்.

குமரேசன் என்னுடன் தனித்துப் பேசினான்

நான் மகள் திருமகளை அழைத்தேன்

தம்பி குமரேசன் சொன்னதை, இறைவனையும் அவரையும்

மானசீகமாக வணங்கிச் சொன்னேன்

திருமகளின் புன்னகை சம்மதத்துக்கு அறிகுறிதானே!

அமைதி கண்டது என் 'தாய் உள்ளம்'. □□□

---

**'ஜீவநதி' சந்தா விபரம்**

ஆண்டுச்சந்தா - 400/= ஓராண்டுக்கு உரிய சந்தா செலுத்த விரும்புவோர், காசோலை மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம். மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய பெயர்\ முகவரி - K . Bharaneetharan,
Kalaiaham,
Alvai North west,Alvai.

# பூஜ்ஜியத்தின் சொந்தக்காரர்கள்

**- செ.கிருஷ்ணராஜா**

பூஜ்ஜியம்! இக்கணனி யுகத்தில் பூஜ்ஜியத்துக்கான பெறுமதி தான் என்ன? இன்று எமது வாழ்வினைக்கூட எடுத்தோமாயின் அதிற்கூட எல்லாமே பூஜ்ஜியமாகவே உள்ளது. பண்பாடும் பூஜ்ஜியம் ! ஒழுக்கமும் பூஜ்ஜியம்!! கல்விச்சுட்டெண்ணும் பூஜ்ஜியத்தினையை சுட்டுகின்றது. அதாவது பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு ராஜ்ஜியம் அமைக்க நாம் முற்படுகின்றோமா? யாழ்ப்பாணத்தில் இன்று வாழ்வுச்சுட்டியும் பூஜ்ஜியத்தை நோக்கியே நகர்கின்றதா? ஒட்டு மொத்தமாக நாம் எதைநோக்கிப் பயணிக்கின்றோம் ? வெறு வெளியையா? அதாவது ஒன்றையும் உருவாக்க முடியாத ஒன்றை நோக்கியா ? அதாவது பெறுமதியே இல்லாத ஒரு பூஜ்ஜிய மணித்துளியை நோக்கியா? (Towards zero hours?) மரணம்? இந்தப்பூஜ்ஜியம் அறிவியல் துறையில் வகிக்கின்ற பங்கு எப்படிப்பட்டது? இக்குறியீட்டினை ஓர் அளவைக் குறியீடாக யார் முதன் முதலில் பயன்படுத்தினார்கள்? இந்தப்பூஜ்ஜியத்தினால் என்ன பயன்? யார் இந்தப் பூஜ்ஜியத்துக்குரிய பெறுமானத்தைக் கண்டுபிடித்தது? இந்தச்சிந்தனையும் எமக்குப் பூஜ்ஜியந்தானா? இவ்வாறு நாம் கேள்விகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போகலாம் . ஆனால் பூஜ்ஜியத்தின் சொந்தக்காரர் நாம் தான் என்பதனை யார் அறிவார்? உலகின் முதற்கணிதப் பேராசான்கள் நம் முன்னோர் என்பதனை நினைத்தால் எமது உளம் பூரிக்கின்றதல்லவா? இது இப்படி இருக்க சைவர்கள் நவீன விஞ்ஞானத்திற்கு ஆற்றிய பங்களிப்பு என்ன என்று கேட்டால் சைவர் என்கிறார்களே! அதன் அர்த்தம் தான் என்ன? நீங்களும் ஒருமுறை சிந்தித்துப் பாருங்களேன்.

கி.பி 11ம் நூற்றாண்டு வரைக்கும் ஐரோப்பாவில் கணிதத்துறை ஓர் அறிவியல் துறையாக வளர்ச்சி பெற்றிருக்க வில்லை காரணம் அதுவரைக்கும் அங்கு பூஜ்ஜியம் என்ற ஒரு தானம்\ எண் \ அளவைக்குறியீடு அந்நூற்றாண்டு வரைக்கும் அங்கு பாவனையில் இருந்திருக்கவில்லை. ஆனால் கட்டிடக்கலைக்கான கணித முறை, நீர்க்கடிகார நேரக்கணிப்பு என்பன அறிவியல் துறையில் காணப்பட்டிருந்த போதிலும் பூஜ்ஜியத்தின் மதிப்பு பற்றிய அறிவு ஐரோப்பிய மக்களிடம் இருந்திருக்கவில்லை. பூமி உருண்டை அல்லது கோள வடிவமானது என்பதனை கிரேக்க விஞ்ஞானிகள் சூரிய- சந்திர கிரஹணங்கள் மூலம் அறிந்திருந்த நிலையிலும் பூஜ்ஜியம் பற்றிய சிந்தனை ஐரோப்பாவில் அந்நூற்றாண்டு வரைக்கும் தோற்றம் பெறாமல் இருந்தமை வியப்பிற்குரியதாகவே காணப்பட்டது.

அராபியப்பேரரசு உருவாக்கத்தின் ஊடாகவே கீழைத்தேயத்து அறிவியல் கண்டுபிடிப்புக்கள் யாவும் வாணிபமார்க்கத்தின் ஊடாக பாக்தாத்தினையடைந்து. பின்னர் கொன்ஸ்தாந்திநோப்பிள்ஸ் ஊடாக ஐரோப்பிய நகரமெங்கும் பரவின. இந்தியாவில் ஓலைச்சுவடிகளில் வரையப்பட்ட ஏராளமான அறிவியல் தொகுப்புக்கள் அராபியரால் பாக்தாத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன. கீழைத்தேய வாசனைப் பொருட்களுடன் இணைந்து சென்ற இந்திய இலக்கமிடும் முறையானது தசாம்ச முறையில் பெருக்கமடைந்து செல்கின்ற உத்தியை பூஜ்ஜியத்துடன் தொடர்பு படுத்தப்பட்டு காட்டப்பட்டிருந்த இந்திய சரக்குமுதல் கணக்கீடு வாயிலாக ஐரோப்பியரை ஒரு புதிய அறிவியல் பாய்ச்சலுக்குள்ளே தள்ளி விட்டது. அணையில் இருந்து

திறந்து விடப்பட்ட வெள்ளம் போல் இடைக்கால ஐரோப்பிய பல்கலைக் கழகங்கள் எங்கும் கணித முறை ஓர் அறிவியல் பாடமாக வளர்த்தெடுக்கப்பட்டதைக் காண்கிறோம். இதன் விளைவாக கப்பல் ஓட்டக்கலை திடீரென முகிழ்த்தது. சீனாவில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட திசையறி கருவியும், வெடிமருந்தும் இக்கப்பலோட்டக்கலையுடன் இணைந்து ஒரு புதிய யுகத்தை தோற்றுவித்து விட்டிருந்தது. ஸ்பானியரே உலகில் முதன் முதலாக கப்பல்களை உருவாக்கி பெரும் சமுத்திரங்களைக் கடந்து நாடு காண் படலங்களை ஆரம்பித்து வைத்தவர்கள் ஆவர். ஐரோப்பாவில் ஏற்பட்ட இம்மாற்றங்களுக்கு எல்லாம் காரணமாக இருந்தது கணிதவியல் ஒரு அறிவியலாக பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்பட்டு வந்தமையே ஆகும். அதற்கு எமது பூஜ்ஜியம் வழியைத்திறந்து விட்டது என்றால் அதைக்கண்டுபிடித்து பயன் படுத்திய எமது முன்னோரது அறிவுத்திறனை எவ்வாறு மதிப்பிடுவது. விஞ்ஞானத்தின் மூலங்கள் யாவும் எம்மிடமிருந்தே கவர்ந்தெடுக்கப்பட்டு ஐரோப்பாவில் அவை செய்முறை வடிவம் பெற வைக்கப்பட்டன. அணுபற்றிய ஆரம்பஅறிவும் அமெரிக்காவை அவ்வாறே சென்றடைந்திருக்கின்றது அராபியர்கள் இந்துக்களிடமிருந்து எடுத்துச் சென்றவையும் . இந்துக்களுக்கு கொடுத்தவையும் என அறிவியல் தேட்டம் ஒரு நீண்ட பட்டியலாக உள்ளதுIndo- Arabian Numerals - 1,2,3.4.5.6.7.8.9.0........Alchemist - ரசவாதம் என்று கூறப்படுகின்ற இரும்பினைப் பொன்னாக்குகின்ற கலையும் அராபியரால் இந்தியருக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஓர் அறிவியல் தான். இந்த ரச வாதத்தில் கூட பூஜ்ஜியம் மிக முக்கியமான மதிப்பினை வகித்து நிற்கின்றது என்றால் அது " நாம் தாழாலே கொடுத்தது தலையாலே பெற்றதை" போன்றல்லவா உள்ளது.□□□

## காலத்தை வென்றவன்

பாரதியாரின் 86 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது

**இலட்சுமி பெற்றெடுத்த சரஸ்வதி – இவன்**
**சின்னச்சாமி தந்திருந்த பெரியசாமி**

**பெண்ணியம் பேசி நின்ற பெருங்கவி – இவன்**
**பேரொடு புகழ் பெற்ற அருங்கவி**

**தமிழினைச்-சுவைத்திட்ட சுவைஞன் – இவன்**
**தமிழுக்குச் சுவைதந்த கலைஞன்**

**அடிமைத்தளை அகற்ற வந்த அரசன் – இவன்**
**அவனியெலாம் போற்றிடும் புருசன்**

**கவியொடு கலைசேர் கவிஞன் – இவன்**
**கவிக்கெனவே பிறந்திட்ட ஒருவன்**

**பாட்டொடு பண் தந்த பாவலன் – இவன்**
**காலத்தை வென்றிட்ட காவலன்**

**உலகத்தில் தமிழுக்குச் சாரதி – இவன்**
**உலகத்தார் வியந்து போற்றும் பாரதி**

**கைதடி- ந. உதயலதா**

# மூன்று அஞ்சலிகளும் முயன்று செயலாற்ற வேண்டியவைகளும்

- பா.இரகுவரன் -

1) லா.ச.ரா(1916.10.30 - 2007.10.29)

சாதாரணமக்களால் அதிகம் அறியப்படாத லா.ச.ரா என்ற மூன்றெழுத்துள் அடங்கிய லால்குடி சப்தரிஷி ராமாமிர்தம் என்ற எழுத்தாளர் மறைந்து விட்டார். ஓர் அரசியல் வாதியாக இனம் காணப்பட்டு பல எதிர்ப்புக்குரல்களிற்கு மத்தியிலும் தமிழிலக்கியப்பரப்பில் மொழி நடை பற்றிய பிரக்ஞையை நிலைநாட்டிச் சென்றுள்ளார்.

70 வருடங்களாகப் படைப்புத் தொழிலை தவமாகச் செய்து கணிப்புப் பெற்றவர். இவர் ஒரு சிறுகதையை எழுதிமுடிக்க நீண்டகாலம் எடுக்கும். மொழி என்னும் சமுத்திரத்தில் முக்குளித்து சொற்களை எடுத்து தனக்குத் திருப்தியான மொழிநடையைப் பெறும்வரை மீண்டும்மீண்டும் செதுக்கி பலதடவைகள் எழுதிமுயற்சிசெய்வார்.

சொல்லிற்கும் அதன் பொருளுக்குமான இடை வெளியை அகற்றுவதில் தீவிர கவனம் செலுத்தினார். நெருப்பு என்று எழுதினால் அதன் சூட்டை வாசகன் உணரக்கூடியதான மொழிநடை யுடன் சொல் இணைந்திருக்க வேண்டுமென்றார்.

லா.ச.ரா வின் படைப்புகளில் சமூக அக்கறை இல்லை என்று குறைகூறுவர் ஆயினும் இவரது பெரும் பாலான படைப்புகளில் நடுத்தர உயர்தரவர்க்க பிராமண சமூகத்தின் மன ஓசையை உணரலாம்.இந்திய சமயதத்துவ பார்வையும், பழமை பேணும் அடிப்படை வாதியாகவும் இவர் எழுத்துக்களூடாக இனம் காணப்பட்டார்.

லா.ச.ராவின் அதிகமான படைப்புக்களின் கதைத்தலைப்புகள் (த்வனி) மட்டுமன்றி பாத்திரங்களின் பெயர்களிலும் (ஸீனாதனி) மொழிநடையிலும் வடமொழி சொற்கள் கலந்து நின்று வாசகனின் புரிதலுக்கு தடையாக இருக்கும். தனது எழுத்துக்கள் புரியாமல் போவதால் விபரிதம் ஏதும் நேர்ந்துவிடாது என மிக அலட்சியமாகப் பதிலளிப்பார். இது சரியான பதிலா என்பது விவாதத்துக்குரியது (வடமொழி சொற்களின் அர்த்தத்தை தேடி அறிந்து மீண்டும் வாசித்தால் கூடுதலான புரிதல் ஏற்படும்தானே) லா.ச.ராவின் கவித்துவமான மொழிநடை மீண்டும் மீண்டும் வாசி... வாசி... வாசித்து விளங்கிக் கொள் என வேண்டி நிற்கும் வனப்பும் வலிமையும் பெற்றிருப்பதை வாசித்து அறிவோர் புரிந்து கொள்வர்.

இவரது படைப்புக்கள் நனவோடை உத்திமுறையில் அமைந்தது என்பர். லா.ச.ராவின் பாத்திரச்சித்திரிப்புகளில் மொழிநடையால் சிதைக் கப்படுவதையும், அதேமொழிநடையே அவரின் தனித்துவத்தையும் நிலைநாட்டியது. பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் தனது எழுத்தை ஜனரஞ்சமாக்கி, வியாபாரம் பண்ணவில்லை. எவற்றுடனும் சமரசம் செய்து கொள்ளவில்லை, படைப்பாக்கத்தில் மொழிநடையின் வலுவை தமிழுக்குத்தந்திருக்கிறார். நேரமின்மை பொறுமையின்மை, உடன் திருப்தி காரணமாக அவசரத் தயாரிப்புக்காய் எழுதும் படைப்பாளிகள் லா.ச.ராவிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

2) சுஜாதா (1935 - 2008)

இந்தியாவின் ஆற்றல் மிக்க கணணிப் பொறியியலாளரான எஸ். ரங்கராஜன் 'சுஜாதா' என்ற புனைபெயரில் எழுத்துலகில் மிகப் பிரபலம் வாய்ந்தவரின் மறைவு பலரும் அறிந்த தொன்றாகும்.

அறிவியல் நோக்கு, சுருங்கச்சொல்லிவாசகர் மனதில் காட்சிப்படிமங்களை தோற்றுவிக்கும் மொழிப்பிரயோகம் இவருடையது. வேகமும் விறுவிறுப்பும், புதிர்தன்மையும் அனைவரையும் இலகுவாக வசீகரிக்கும் தன்மையும் இவரின் எழுத்துகளுக்கு இருந்தன.

சுஜாதாவிற்கு இயல்பாகவே அமைந்து விட்ட அறிவுக்கூர்மை இவரின் எழுத்து நடையில் பல நுட்பங்களை மிக இலகுவாக இணைத்து வெளிப்படுத்த உதவியாக இருந்தது. புதுமைப்பித்தனுக்குப்பிறகு தமிழ் இலக்கிய பரப்பின் எழுத்து நடையை தீர்மானித்தவர் என்று பெருமை பெறவைத்தது.

தரமான இலக்கியரஸனை கொண்ட சுஜாதாவை கணையாழியில் இவர் தொடர்ந்து எழுதிய கடைசிப்பக்கம் என்ற பகுதியில் தரிசிக்கலாம். சுஜாதாவின் அறிவுக்கூர்மையும் அவதானிப்புசக்தியும் பல்துறை அறிவும் பன்முகப்பட்ட ஆளுமையின் துணையுடன் உலகத்தரம் வாய்ந்த தமிழ் இலக்கியத்தை இவரால் படைத்திருக்க முடியும். ஆனால் சுஜாதா வியாபார எழுத்தின் அனைத்து சமரசங்களுக்கும் தன்னை உட்படுத்தி மலினமான படைப்புகளையே தந்தது கவலைக்குரிய விடயமாகும்.

சுஜாதாவின் அறிவியல் சார்ந்த எழுத்துக்களும், படைப்புகளும் கவனிப்புக்குரியவை ஆகும். குறிப்பாக தமிழ் இலக்கியத்தில் விஞ்ஞானப் புனைகதை (Science fiction) மரபுக்கு அடித்தளமிட்டதை நிராகரிக்க முடியாது. சுஜாதாவிட்டுச் சென்ற அறிவியல் புனைகதைப்பகுதி மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். விஞ்ஞான யுகத்தில் தமிழ் இலக்கியத்தில் விஞ்ஞானப் புனைவுகள் அருகி இருப்பது எமது விஞ்ஞான அறிவின்மையை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்தநிலையை நாம் மாற்ற வேண்டும்.

3) ஆதர்.சி.கிளார்க் (1917.12.16 - 2008.03.19)

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானபுனைகதை எழுத்தாளர் ஆதர்.சி.கிளார்க் பிரித்தானிய நாட்டவர். பவளப் பாறைகளை நீரின் அடியில் சென்று பார்ப்பதற்காக 1954ல் இலங்கைக்கு வந்தார். இலங்கையின் இயற்கை எழிலும் அமைதியான சூழலும், குறைந்த வாழ்க்கைச் செலவும் இவரை வசீகரித்தன. 1956முதல் இலங்கையிலேயே தங்கி 1975ல் இலங்கை பிரஜா உரிமை பெற்றார். இலங்கையிலே தனது இறுதி மூச்சையும் கலக்கவிட்டார்.

இவரது விஞ்ஞானப்புனைகதைகள் உபயோகமற்ற கற்பனைகள் என பல அறிவு ஜீவிகளாலும் இலக்கியக்காரர்களாலும் கேலிசெய்யப்பட்டது. ஆனாலும் ஆதர்சி.கிளார்க் மனம் தளராமல் தொடர்ந்து எழுதினார்.சந்திரனுக்கு மனிதன் செல்வது பற்றி 1948ல் இவர் எழுதிய விஞ்ஞானப் புனைகதை 1968ல் அண்ட வெளியில் ஒரு நெடும்பயணம்.(2001. A Spaces odyssey) என்ற பெயரில் திரைப்படமாகியபோது உலகளாவிய பிரபல்யம் பெற்றார். 1969ல் தாங்கள் முதன்முதலில் சந்திரத்தரையில் காலடி வைப்பதற்கு ஆதர்.சி.கிளார்கின் கருத்துக்களே உந்து சக்தியாக இருந்தது

என அமெரிக்கா தெரிவித்தபோது. இவரை போலி எழுத்தாளர் என்று கிண்டல் செய்தவர்கள் வாயடைத்து நின்றனர்.இவரது புனைகதைகளினூடாக வெளிப்பட்ட விண்வெளி ஆய்வு கூடம் இன்று நனவாக்கப்பட்டு பல ஆராட்சிகளை செய்யும் தளமாக விளங்குகிறது.

1945ல் கம்பியில்லாத்தந்தி உலகம் (wireless world) என்ற சஞ்சிகைக்கு இவர் எழுதிய கட்டுரையின் (Extrate rrestrial Relays) கருத்துகளின் உந்துசக்தியே செய்மதிகளை அமைத்து செய்மதி தகவல் தொழில் நுட்பத்துறையின் பெருவளர்ச்சிக்கு காரணமாக இருந்தது. செய்மதி தொலைத் தொடர்பின் தந்தை என்று இவர் அழைக்கப்படுகிறார்.

1964ல் வெளிவந்த விஞ்ஞானச் சிறுகதையினால் தூண்டப்பட்ட பிரித்தானியாவின் கணணி விஞ்ஞானி டிம்பேர்னல்லீ (Dim Benerlee) உலகளாவிய இணையத்தள வலைப்பின்னலை 1989ல் உருவாக்க உதவியது.

கலையும். விஞ்ஞானமும் எதிரானவை அல்ல விஞ்ஞானபுனைகதைகள் கலை வடிவங்களினூடாக எம்மத்தியில் வெளிப்படவேண்டும். குறிப்பாக எமது எழுத்தாளர் மத்தியில் உள்ள விஞ்ஞானயுகத்துக்குப் பொருத்தமான படைப்புகளும் வெளிவர வேண்டும். முதற்கட்டமாக ஆதர்.சி.கிளார்கின் விஞ்ஞானப்புனை கதைகளை தமிழுக்கு கொண்டுவருதல் மிகவிரைவில் சாத்தியமாக வேண்டும்.□□

# கலை இலக்கிய நிகழ்வுகள்.

1. எழுத்தாளர் அமரர் து.வைத்திலிங்கத்தின் நினைவஞ்சலியும் ஜீவநதி மீள்பார்வையும் நிகழ்வு யாழ் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் 2.08.2008 நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தலைவர் செங்கை ஆழியான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில்அமரர் து.வைத்திலிங்கத்தின் அஞ்சலி உரையை மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் தெணியான் நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஜீவநதி கலைஇலக்கிய சஞ்சிகையின் மீள்பார்வைகளை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் அவர்களும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு அவர்களும் நிகழ்த்தினர். பதிலுரையை ஜீவநதி இணையாசிரியர் சி.விமலன் நிகழ்த்தினார்.

2. சுப்பிரமணியம் வரதகுமார் எழுதிய "எதுவரை" தமிழ் நாடகம் புறுப்படவிமர்சனங்களின் நூல் அறிமுக விழா பருத்தித்துறை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் வடமராட்சி படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் 2.9.2008 நடைபெற்றது.ஆய்வாளர் மு.சிறீபதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தகைசார் விருந்தினராக பிரதேசசெயலர் வரதீஸ்வரன் கலந்து கொண்டார். ஆசிரியர் புலோலியூர் வேல். நந்தகுமார் நிகழ்வின் அறிமுக உரையையும் நூல் அறிமுக உரையை பா.ரகுவரன் ஆசிரியரும் குறிப்புரையை ஆசிரியர் தி.கார்த்திகேயன் அவர்களும் திறன் மதிப்பீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியர் ஆ.கந்தையாவும் நிகழ்த்தினர். நூலாசிரியர் சு.வரதகுமாரின் ஏற்புரையை தொடர்ந்து பங்குபற்றுவோர் கருத்துரையுடன் விழா இனிது நிறைவேறியது.

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

எமது சங்கச் சேவைகள் :

புகர்ச்சிச் சேவை

தரமான நூலக சேவை

கிராமிய வங்கிச் சேவை

புலமைப்பரிசில் வழங்கல்

வாடகைச் சேவைகள்

தரமான திரைப்படக்காட்சிக்கூடாக புதிஜய ரசனையை ஏற்படுத்துதல்

எரிபொருள் சேவை

விவசாய சேவை

நூல்வெளியீடும் விமர்சனங்களும்

கூட்டுறவுக் கலாசாரப் பெருமன்றம்

“சங்கம் செய்தி” மாதாந்த வெளியீடு.

தொலைபேசி இலக்கம் :- 0212263263 தொலைநகல் 0212263263

0212264474

0212264725

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் கரவெட்டி.


## “ ஜீவநதி ” கிடைக்கும் இடங்கள்.

* பூபாலசிங்கம் புத்தகசாலை - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* அன்னை புத்தகசாலை - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் - கரவெட்டி, நெல்லியடி.
* Book lab - திருநெல்வேலி
* பூபாலசிங்கம் புத்தகசாலை - 202, 340 செட்டியார்தெரு கொழும்பு -11
* சேமமடு புத்தகசாலை - 49, 50,52 பீப்பிள்ஸ்பார்க் கொழும்பு - 11
* மாரிமுத்து சிவகுமார் - ஸ்ரீகிருஸ்ணாஸ் இல 86, சைட் வீதி ஹட்டன்
* ஸ்ரீரஞ்சனி புத்தகசாலை - 190 A ஜம்பட்டா வீதி கொழும்பு - 13,


இச்சஞ்சிகை அல்வாய் கலை அகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த.கலாமணி அவர்களால் சதாபொன்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பவித்திரா ஆடையகம்

திருமண பட்டுச் சாறிவகைகள்

சோலீஸ்

ஸ்கேட் & பிளவுஸ்

சேட்

ரவுசர்

பேபிசூட்

சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற


ரெடிமேட் ஆடைகள்

அனைத்து ஜவுளித்

தெரிவுகளுக்கும் விஜயம்

செய்யுங்கள்







பிரதான வீதி, நெல்லியடி.